
# கவிச்சித்தரின்

# ஆரங்கள்



க.பொ.இளம்வழுதி



## கவிச்சித்தம் க. பொ. இளம்வழுதி
அவர்களின் படைப்புப் பரம்பரை

1. சிவப்பு நிலா (காப்பியம்) : தமிழக அரசின் பரிசு பெற்றது.
2. குறுநூறு : குறும்பாடல்கள்
3. சிவப்புச் சிந்தனைகள் : தமிழக அரசின் பரிசு பெற்ற கவிதை நூல்
4. வண்ணத் தமிழ் : சந்தப் பாடல்கள்
5. வேர்கள் : புதுவை அரசின் பரிசு பெற்ற கவிதை நூல்
6. ஆண்டவன் அறுபது : கவிதை நூல்
7. நிறங்கள் : வரலாற்றுச் செய்திக் கவிதைகள்
8. வெற்றியின் அறிமுகம் : நேருவின் வரலாறு
9. இலக்கை நோக்கி : நெல்சன் மண்டேலாவின் வரலாறு
10. சில்லுகள் : குறும்பாடல்கள்
11. ஆரங்கள் : கட்டுரை

கவிச்சித்தரின்

# ஆரங்கள்

க. பொ. இளம்வழுதி

முத்துப் பதிப்பகம்
7, வில்லியம் லே-அவுட், இரண்டாவது தெரு
K. K. ரோடு. விழுப்புரம்.
Phone—3375 Pin-605602.

# நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **ஆரங்கள்** (கட்டுரை) |
| உரிமை | : | ஆசிரியருக்கே<br>க. பொ. இளம்வழுதி<br>38-அண்ணா நகர்,<br>கடலூர்—607 001. |
| முதற்பதிப்பு | : | ஜூன், 1994 |
| நூலின் அளவு | : | 1×8 கிரவுன் |
| மொழி | : | தமிழ் |
| மொத்த பக்கங்கள் | : | 128 |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| வெளியீடு | : | முத்துப் பதிப்பகம்<br>7, வில்லியம் லே-அவுட்,<br>இரண்டாவது தெரு,<br>கன்னியாகுளம் சாலை, |

**விலை : உரூபா. 20-00**

| | | |
|---|---|---|
| அச்சிட்டோர் | : | வெற்றி அச்சகம்<br>91, டாக்டர் பெசன்ட் ரோடு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

# அறிமுகம்

நாடு என்பது எல்லைக் கோடு மட்டுமல்ல. அது கோடானு கோடி இதயங்களின் இருப்பிடம். வானத்து மீன்களைப்போல் குழுமியும், தனித்தும் காணப்படும் மனித மலர்ப் பூங்கா!

என்ன நிறத்தினராயினும், எந்த தரத்தினரா யினும் மாந்தர் வாழப் பிறந்தவர்கள்தான். வாழ வேண்டுமென எண்ணுவதும், வாழவைக்க வேண்டு மென உதவுவதும் ஒவ்வொருவரின் உரிமையும் கடமையுமாகும்.

ஈரமில்லாத இதயமும், சாரமில்லாத நூலும் தேனீக்கள் திரும்பிப் பார்க்காத செயற்கைப் பூக்கள்! குமுகாய பொறுப்பில்லாத வாழ்க்கை, ஆடையின்றி அவைக்கு வருவதைப் போன்றது.

எழுத்தாளனுக்கும், கவிஞனுக்கும் பொதுப் பொறுப்புக்கள் ஏராளம்! கடமையை உணராத, உணர்த்தாத எழுத்து எவ்வளவு விளம்பர அலங் காரத்தோடு அறிமுகப் படுத்தி அனுப்பி வைக்கப் பட்டாலும், அட்டைப் படத்திற்காகவும், ஆளுக் காகவும் வாங்கப்பட்டாலும் அது மந்திரவாதி தாயத்து விற்பதற்கொப்பானதே!

இளைத்துக் கிடக்கும் பண்பாடும், களைத்து நிற்கும் ஒழுக்கவுணர்வும்தான் என்னை இந்த நூலை எழுதத் தூண்டிய உந்து சக்திகள்! நான் எழுதுவது பிழைப்பிற்காக அல்ல—சமூகக் கடமைக்காக. ஆர்வ மிகுதியாலன்றி, அக்கறை மிகுதியால் மருத்துவர்களின் எல்லைக்குள் எனது எழுதுகோல் நுழைந்திருப்பது உண்மைதான். கடலூர், டாக்டர் கி. இராஜேந்திரன் எம். எஸ், பண்ணுருட்டி டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் எம். பி. பி. எஸ், ஆகியோரின் நல்ல தொடர்பைப் பெற்ற துணிவு கூட இதற்குக் காரணமாக இருக்கலாம்.

கடலூர் அரசு தலைமை மருத்துவமனை தோல் நோய் மருத்துவ அறிஞர் டாக்டர் மகாலிங்கம் அவர்கள், 1991-ஆம் ஆண்டு எயிட்சு நோயை பற்றி வெளியிட்ட படிப்பெருக்கி நகலை நான் பார்க்க நேர்ந்தது.

இந்நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, அவர் மேற்கொண்ட தனி முயற்சியின் வெளிப்பாடுதான் அந்த குறிப்பு. சமூகக் கடமையுணர்ச்சி மிக்க டாக்டர் மகாலிங்கம் அவர்களின் முதல் முயற்சி என்னை பெரிதும் ஈர்த்தது. அவரைச் சந்தித்து, அவர் தயாரித்த குறிப்பையே சிறிது விரிவாக்கி நூலாக வெளியிட்டால் மக்களுக்குப் பயன்படுமே என்று கேட்டுக் கொண்டேன்.

டாக்டர் அவர்களோ அந்தப் பணியை நீங்களே செய்யுங்களென்று என்னை ஆட்படுத்தினார். அவர்க்கென் நன்றி!

டாக்டர் மகாலிங்கம் அவர்களின் எட்டுப் பக்கக் குறிப்பையே, அவருடைய உதவியாக எடுத்துக்கொண்டு எயிட்சைப் பற்றிய செய்தி களையும் தகவல்களையும் திரட்டத் தொடங் கினேன். எனது முயற்சிக்கு எங்கள் குடும்ப நண்பர் கௌரிவாக்கம் திரு இராமன்—ஸ்ரீதேவி அவர் களின் செல்வி கீதா (லட்சுமி) பி. எஸ்சி. உதவ முன்வந்து எயிட்சு பற்றிய தகவல்களை ஆங்கில நாள், கிழமை, திங்கள் ஏடுகளிலிருந்து திரட்டிக் கொடுத்தார். அவர்க்கென் நன்றி.

எயிட்சைப் பற்றித் தமிழில் ஒரு நூலை எழுதிய முதல்வனாக நானிருந்தாலும், அதை உங்கள் கரங்களில் தவழ விடுவதில் தாமதப் படுத்தியுள்ளேன். எனக்குள்ள கால நெருக்கடி அப்படிப்பட்டது. இப்பொழுதாவது இதை வெளிக் கொணர முடிந்ததென்றால், அதற்கு முழு முதற் காரணம் எனது துணைவியார் கலைவாணி. குடும் பத்தில் நான் செய்ய வேண்டிய வேலைகளையும் தானே ஏற்றுக்கொண்டு நேரத்தை ஒதுக்கித் தந்தவர் அவர்தான்.

எனது படைப்புக்களை உவப்போடு வெளி யிட்டு வரும் விழுப்பரம், முத்துப் பதிப்பக உரிமை

யாளர் திருமிகு மு. இலட்சுமணன் இந்நூலையும் வெளியிட முன்வந்தார். பழகற்கினிய அந்த பண்பாளரின் ஆர்ப்பாட்டமில்லாத, அரிய தமிழ்ப் பணியைப் பாராட்டி நன்றி கூறுகின்றேன்.

மொழிப் பற்றும், இனப்பற்றும் மிக்க தமிழறிஞர் புலவர் ப. அரங்கநாதன், பி.லிட்., அவர்கள் படித்திருத்தம் பார்த்துதவினார்கள். அன்பாலும் பண்பாலும் எனக்கு நெருக்கமான புலவர் அவர்கட்கென் நன்றி!

முகப்போவியம் வரைந்த ஓவியர் திரு. **P. N.** ஆனந்தன் அவர்களும், நூலை, தங்கள் தொழிற் திறமையால் வெளிப்படும் வகையில் அச்சிட்ட வெற்றி அச்சகத்தாரும் எமது நன்றிக்குரியவர்களே!

இளைஞர்கள் இந்நூலை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது அவர்களின் நலன்கருதி நான் விடுக்கும் கோரிக்கை.

பொறாமையைக் கடந்த அறிவாளிகள், அறிமுகத்தைத் தாண்டி, திறமையை அடையாளங் காணக்கூடிய நடுநிலையாளர்கள், பொதுநலன் கருதி இந்நூலை மாணவர்களும் மற்றவர்களும் பயன்படுத்திக்கொள்ள துணைபுரிவார்களென நம்புகின்றேன்.

ஆரங்கள்தான் சக்கரத்தின் தூண்கள். அவையின்றி சக்கரத்திற்கு வடிவமோ, வலுவோ கிடைக்காது. வாழ்க்கைச் சக்கரத்தின் ஆரங்கள்தான் நூலின் உள்ளடக்கம்.

தரத்தையும், தகுதியையும் இழந்துவிடாத மேலோரையும், ஆர்வமிக்க இளைஞர்களையும் நம்பி நூலை ஒப்படைக்கின்றேன்.

கடலூர்-607001 **க. பொ. இளம்வழுதி**

# பதிப்புரை

கவிச்சித்தர் அவர்கள் நாட்டைப் பற்றியும், இளைய தலைமுறையைப் பற்றியும் அதிகமாக சிந்திப்பவர். தமிழக அரசின் முதற் பரிசை பெற்ற அவரது 'சிவப்புச் சிந் தனைகள்' அவரை அடையாளம் காட்டிய நூல். புதுவை அரசின் பரிசை பெற்ற அவரது 'வேர்கள்' நாட்டின் அதன் விடுதலைக்காகப் பாடுபட்டவர்களை இளைஞர்களுக்கு அடையாளம் காட்டிய நூல். தமிழக அரசின் பரிசுபெற்ற காவியமான 'சிவப்பு நிலா' அவரது கவிதை ஆற்றலை இலக்கிய உலகுக்கு எடுத்துக் காட்டிய படைப்பு.

உரைநடையில் அவர் படைத்த வெற்றியின் அறிமுக மும்; 'இலக்கை நோக்கி' [நெல்சன் மண்டேலா] என்னும் இரு வரலாற்று நூல்களும், தனி முத்திரை பதித்தவை. உரைநடையில் 'ஆரங்கள்' அவரது மூன்றாவது நூல். மக்கள் நலனுக்கான வழிகாட்டி நூல் இது. அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய படைப்பு. தமிழுலகம் இதனை வரவேற்று ஆதரிக்க வேண்டுமென்பது என் விழைவு. நம்பிக்கையுங் கூட.

**மு. இலட்சுமணன்**
முத்துப் பதிப்பகம்

கவிச்சித்தரின் -

# ஆரங்கள்

## உறவும் துறவும்

காலங்களில் இளவேனிலைப்போல் கோளங்களில் பூமி! இவை மனிதனுக்கு இதமானவை, பதமானவை!

அனலும், புனலும் ஆகாயம் தரும் வரம். காற்றோ நம் தோளில் கைபோடும் தோழன்.

நீருள் வாழும் மீன்களைப் போல், காற்றுக்குள்ளே தான் நாம் காலம் தள்ளுகின்றோம்.

கோளங்களோ ஏராளம்! இருந்தபோதும் உயிரினத்தைச் சுமப்பது உண்மையில் பூமி ஒன்றுதான்.

மண்ணின் பெருமை மலைக்க வைக்கிறது. அதன் பொறுமையோ சிலிர்க்க வைக்கிறது.

இந்த நிலம் நம்மைச் சுமக்கிறது, சுழல்கிறது. காயப்படுத்துவருக்குக்கூட கருணை காட்டுகிறது.

இந்த மண்ணில் பிறந்ததால்தான் ஏசுவின் இதயத்தில் இவ்வளவு ஈரம் இருந்ததோ!

பொறுமையின் பெருமையால் பூரித்ததுதான் பூமி! நேருவைப் போல் சில நேரங்களில் சினந்தாலும், ஆசிய சோதியின் சிரிப்பைப்போல் அழகானது, அருமையானது!

பூமியும் தாய்தான். நாம் எப்படியெல்லாம் அதன் மீது குதித்தும், மிதித்தும் விளையாடுகின்றோம்!

காரத்திற்கு அஞ்சாத ஆந்திரரைப் போல், பாரத்திற்குப் பயப்படாதது பூமி!

மக்களை மட்டுமா, மரம், செடி, கொடிகளையும், மலைகளையும், நீர்நிலைகளையும் தனது மடியில் வைத்துக் குரல் கொடுக்காமல் கொஞ்சுகிறதே நிலம்!

மக்கள் பெருக்கத்தை நாம் கட்டுப்படுத்த முனைவது மண்ணைக் கருதியல்ல, மாந்தனை நினைத்தே!

கோளக் குடும்பங்களிலேயே வளமான பூமியில் வாழும் நாம், மனிதக் குடும்பத்தில் மட்டில் மக்கள் பெருக்கத்தால் வறுமைக்கு வளைவு கட்டி, வாயிலைத் திறந்து வைத்திருக்கின்றோம்.

சோலைகளை வளர்த்து சொக்க வைக்கும் பூமியில், பாலை என்னும் பசுமைத் துறவியும் உண்டு. தண்ணீரைத் தலைமறைவாகச் செய்துவிட்டு, நெய்யை மடியில் கட்டிக் கொண்டு, மெய்யை வடுவாக்கிக் கொண்டிருப்பது பாலை!

மலையும், கடலும் உலகின் அழகு அவயவங்கள்! பூமியின் மேடு பள்ளங்கள்தான் நிலத்தின் நேர்த்தி!

மேடு பள்ளமில்லாவிட்டால் மனிதனை அடையாளம் காண்பது அரிதல்லவா?

தோளைக் கண்டு மயங்கும் மங்கை; மார்பைக்கண்டு கிறங்கும் காளை, இந்த மோகன முன்னுரையை எழுதுவதே மேடு பள்ளங்கள்தானே!

இயற்கையின் படைப்பில் இன்னுயிர்கள் ஏராளம்! எண்ணிக்கையில் இது ஆயிரமோ இலட்சமோ அல்ல. கோடானு கோடி!

உயிரினங்களிலேயே உயர்ந்த படைப்பு மனிதன்தான். மொழியால் மட்டுமல்ல, விழியாலும் பேசவல்லவன் அவன்.

தோற்றத்தில் மாற்றங்கண்டு, அறிவால் முன்னேறி இருப்பவன் மாந்தன் மட்டுமே!

ஆறாவது அறிவு என்பது அவனுக்குக் கிடைத்த சிந்தனைச் செல்வம்! பூரிப்பு தரும் புதையல்!

உயிர்களுக்கெல்லாம் பொதுவானது பாலுணர்வு! அணு சக்திக்கு நிகரான ஆற்றலுடையது.

மிருக பலத்தையே வெற்றி கொண்டவனல்லவா மனிதன், பாலுணர்வுக்கும் நூல் வகுத்துக் கொண்டான். அடக்க முடியாதது அகிலத்தில் மட்டுமல்ல அகத்திலும் இருக்கக் கூடாதென்றான். மிடுக்கான பாலுணர்வுக்கு மெருகூட்டினான். மிருதுவாக்கினான். நயமான நடைமுறைகளால் தன்னை நாகரிகப் படுத்திக் கொண்டான்.

ஆ! மாந்தனின் ஆற்றல் மகத்தானது! பாலுணர்வை வென்ற அவனது பராக்கிரமம் பாராட்டுக்குரியது. இதில் தோற்றவர்களே தூற்றுதலுக்கு ஆளானார்கள். காமத்தையும் கலையாக்கினான் மனிதன். தமிழனோ காமனையே படைத்து விழா வெடுத்தான்.

அகத்துறையில் புரட்சி செய்தவன் தமிழன். வாழ்க்கையையே அகம், புறம் எனப் பகிர்ந்து பார்க்கப் பக்குவப்பட்டவன் அவன்.

தனக்கென்றும் பிறர்க்கென்றும் எண்ணத்தையும், இயக்கத்தையும் வகைப் படுத்தி வாழும் வாழ்க்கை தமிழனுக்குரியது. அகத்தைக் காதலென்றும், புறத்தை வீரமென்றும் அழகான சொற்படைப்பால் அறிமுகம் செய்து வைத்தான்.

ஒழுக்க மென்பதும், கற்பென்பதும் மனதுக்கு அவன் போட்ட கடிவாளங்கள்! காமனாலும் தாண்ட முடியாத தடைகள் இவை! புலன்களுக்குப் போடப்பட்ட பூட்டு. ஆட்படுத்தும் ஆசைகளுக் கெதிரான அரண்கள்.

மேலை நாட்டார் தங்களது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்காகப் புன்னகைத்துக் கொள்ளலாம். அகத்துறையில் நமது கண்டுபிடிப்புகள், இல்லை, வகுத்துக் கொண்ட வாழ்க்கை முறைகள் பெருமிதத்திற்குரியவை.

நமது இலக்கியங்களும், நீதி நூல்களும் திசைகாட்டிகளாகவும், வழிகாட்டிகளாகவும் உள்ளன. கருத்துக் குருடர்களின் கால் தடம் மாறிப் போகலாம், எச்சரிக்கையில்லாதவர்கள் இடர்படுவது நெறியின் பிழையல்ல நடந்த வழியின் பிழை!

இன்ப நுகர்ச்சியில் நாட்டம் என்பது உணர்வு தரும் ஊக்கம்! உடற் கூறுகளின் உந்துதல். கட்டுப்பாடென்பதோ கையில் கட்டிய நோன்புக்கயிறு! அது நம்மைப் பிணைப்பதில்லை. நம் ஆசைகளை, புலன்களின் புரட்சியைக் கட்டுப்படுத்த நாம் மேற்கொள்ளும் உறுதியின் வெளிப்பாடு. நமக்கு நாமே விதித்துக் கொண்ட தடையை மீற வேண்டியதுமில்லை, தளையை அறுக்க வேண்டியதுமில்லை.

புலன்களை வெல்ல முடியாமல் வீழ்ந்து விடும் பலவீனமானவர்களுக்காக அச்சுறுத்தலும், கட்டுப்பட மறுப்பவர்களுக்கு ஆசைகளும் காட்டப்பட்டன.

விண்ணுலகமென்றும், வீடு பேறென்றும் கனவுக் காட்சிகள் சித்தரிக்கப் பட்டன. இங்கே இன்பநுகர்வை இச்சிக்காவிட்டால் 'ஆங்கே' சென்று அதிகமாக அனுபவிக்கலாமென்று ஆசைகாட்டப் பட்டது. இந்த ஆசைக்கு ஆட்பட்டவர்களும் உண்டு. அடங்காதவர்களும் உண்டு.

''பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசு'' என்றது மருட்டல். 'அவ்வுலகம்' 'வீடு பேறு' சொர்க்கம்' என்பவை இன்ப நுகர்ச்சிக்கெதிராகப் பின்னப்பட்ட ஆசை வலைகள்! வண்ண உலகுக்கு அழைத்துச் செல்லும் வழியில் அமைந்த வானவில் பாலங்கள்.

மனக் கட்டுப்பாடு ஆசை அலைகளால் மோதி தகர்க் கப்பட்டது. நோன்பு நொறுங்கியது. நிலைமையை நீடிக்க விட்டால் மனித நாகரிகமே மரித்து விடுமோ என்ற அச்சம் ஆன்றோர் நெஞ்சை அழுத்தத் தொடங்கியது. நாவழி தோற்றதால், நடந்து வழிகாட்ட வேண்டிய கட்டாய மேற் பட்டது. வன்மை மிக்கவர்கள் வாழ்ந்து காட்ட முன் வந்தனர்.

நம்பிக்கை வைத்தால் அதில் நலன்கள் விளையும்! துறவிலும் நலம் துய்க்கலாம் என்ற எண்ணத்தை ஏற் படுத்த மார்க்கங்களும் [மகான்களும்] தோன்றத் தொடங் கின. பொது நன்மைக்காகத் திங்கள் அகச் சுகத்தை விட்டுக் கொடுத்தவர்களை 'துறவி' எனத் தொழுதது, புகழ்ந்தது சமூகம்! துறவுக்குத் தூண்டுதல் கிடைத்தது.

அறமென்றும், மறமென்றும் வினைகளை வேறு படுத் திய தமிழன், நிலைமைக் கேற்ப அறத்தில் இரு கிளைகளை உண்டாக்கினான். புலன்களைக் கட்டுப்படுத்த வல்லவர் களைத் துறவறத்திலும், இச்சைக்கு இணங்கியவர்களை இல்லறத்திலும் ஏற்றிவிட்டான். ஒழுக்கப் பராமரிப்புக்கும் உலக இணக்கத்திற்கும் இரண்டுமே ஏணிக்கால்கள் என்பது தான் தொடக்கத்தின் நிலை!

தொழிலுக்காகப் படைத்த சாதியில் மேல், கீழ் பேதம் புகுந்ததைப் போலவே அறத்திலும் உயர்வு, தாழ்வு தகுதிப் பிரச்சினை தலை எடுத்தது. இரண்டிலும் சேராத நடுநிலை யாளர்களோ ஆசைக்கெதிராக அணிவகுப்பு நடத்தினார் கள்.

சங்க கால இலக்கியங்கள் பெண்களைப் பெரிதும் மதித்தன. இடைக்கால இலக்கியங்களில் சில ஆண்களின் ஆசைகளைக் கட்டுப்படுத்த கற்பிக்க முடியாமல், பெண் களை இழிவானவர்களாகவும், ஆபத்தானவர்களாகவும் உருவகப்படுத்த முனைந்தன. நோக்கம் வேறானாலும் தாக்குதல் பெண்கள்மீதே!

''வட்டமுலை யென்றுமிக வற்றுந் தோலை
மகமேரு வென்றுவமை வைத்துக் கூறுவர்
கெட்டநாற்ற முள்ளயோனிக் கேணியில்
வீழ்ந்தார்
கெடுவாரென் றேதுணிந் தாடாய் பாம்பே!''

என்று பெண்நலம் துய்த்தவர்கள் கெடுவாரென்று அச்சுறுத்தினார் பாம்பாட்டி சித்தர்.

''மையடர்ந்த கண்ணினால் மயக்கிடும் மயக்கிலே
மையிறந்து கொண்டுநீங்க ளல்லலற் றிருப்பீர்காள்
மெய்யடர்ந்த சிந்தையால் விளங்குஞான
மெய்தினால்
உய்யடர்ந்து கொண்டுநீங்க ளூழிகாலம்
வாழ்விரே''

பெண்களின் உறவை விலக்கினால் ஊழிக்காலம் வாழலாம் என்று ஆசை காட்டினார் சிவவாக்கியார்.

''உச்சிக்கு மேற்சென் றுயர்வெளி கண்டோர்க்கு
இச்சிப்பிங் கேதுக்கடி......குதம்பாய்
இச்சிப்பிங் கேதுக்கடி''

என்று இச்சையைக் கடந்தவர் உயர்ந்தோரானாரென்று பொதுப்பட பேசினார் குதம்பைச் சித்தர்—

அண்ணாமலையடியார் அருணகிரியோ, விந்தை விரயமாக்கியபின் சந்தத் தமிழில் நிந்தை செய்தார்.

திருமந்திரம் தந்த திருமூலர் எந்த அணியிலும் சேராமல், போதி மரத்தடியில் ஞானம் பெற்றவனைப் போல்,

''ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனொடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே''

என்று நடுநிலை வகித்துப் பாடினார்.

துறவுக்குத் தூண்டியவர்களைப் போலவே இல்லறத்திற்காக வாதிட்டவர்களும் ஏராளம்!

திக்கெல்லாம் புகழும் திருவள்ளுவர் தமது நூல் தொகுப்பிலேயே துறவறவியலைப் பின்னுக்குத் தள்ளி இல்லறவியலை முன்னுக்குக் கொண்டுவந்துள்ளார்.

''துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை'' —குறள் 42

என்று வைர முடியல்லவா சூட்டியுள்ளான் இல்லறத்தானுக்கு!

''உற்றபெருஞ் சுற்ற முறநன் மனைவியுடன்
பற்றிமிக வாழ்க! பசுவின்வால்—பற்றி
நதிகடத்த லன்றியே நாயின்வால் பற்றி
நதிகடத்த லுண்டோ நவில்''

என்று இல்லறமே ஏற்றது என்பதை வினாவெழுப்பியே விளக்கியுள்ளதே நீதி வெண்பா!

''இல்லறமல்லது நல்லற மன்று'' என்பதை உலகம் உவந்தேற்றுக் கொண்டது.

உள்ளத்தால் ஒன்றிய ஒருவனும் ஒருத்தியும், இல்லற இன்பத்தின் பயனாகப் பிள்ளைப் பேறடைவதே இயற்கையின் நியதி. மணவாழ்வின் பயன் மக்கட்பேறு!

''பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற''

என்றார் வள்ளுவர். அறிவார்ந்த பிள்ளையைவிடச் சிறந்த செல்வமே எனக்குத் தெரிந்தவரை இல்லை என்று பேசும் வள்ளுவன் கூற்றை மறுக்க வல்லமை பெற்ற பேரறிஞர் வேறு எவரேனும் உண்டோ?

# வித்தும் சொத்தும்

இரவெல்லாம் மூடிக்கிடந்து விடியலில் இதழ் விரிக்கும் செம்மலர்!

அம்மலரின் மடியில் கிடக்கும் குழந்தையாக, இன்பப் போரில் அரும்பிய வியர்வைத் துளியாக பனி முத்துக்கள்!

இளம்பரிதியின் ஒளி ஊடுருவலில் அவை மின்னி மினுக்கும் போதே அணிமணிகள்! அவற்றின் எழிலோ வெள்ளம்!

பனி மணிகளின் அழகு மட்டில் நிலையானதாக இருந்து விடுமானால் வைரங்களே குப்பைகளாகிவிடும்!

பனி முத்துக்களின் கொள்ளை அழகையும் குனியச் செய்ய வல்லது குழந்தையின் குமிழ் சிரிப்பு!

குமரிப் பெண்ணின் குறும்புச் சிரிப்பையும், கோல நடையையும் புறந்தள்ளியவர்கள் கூட, பிள்ளைச் சிரிப்பின் பின்னால் போகும் மனதைத் திருப்ப முடியாமலன்றோ திணறுகிறார்கள்!

பஞ்சைக் காட்டிலும் மென்மையான பிஞ்சுக் கால்களால் உதைபடுவதில் கிடைக்கும் இதமும், இன்பமும், வேறு எதனாலும் கொடுக்க முடியாத கொடை! இல்லையென்றால் குழந்தையே செல்வமாகியிருக்குமா?

மாந்தன் பெறுகின்ற செல்வங்களிலேயே மகத்தானது மக்கட் செல்வம்.

எல்லாச் செல்வங்களையும் குறைவறப் பெற்று பாராண்ட பாண்டிய மன்னன் அறிவுடைநம்பி:-

''படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும், கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே!
[புறம்-188]

என்று பட்டறிவோடு பாப்புனைந்து மகிழ்ந்திருப்பாரா? என்னதான் செல்வமிருந்தாலும், சிறுநடை பயின்று; செங் கரம் நீட்டி; நெய்ச் சோற்றை தரையில் சிந்தியும்; மேனி யில் பூசியும் மன மயக்கத்தை ஏற்படுத்தும் மழலைச் செல் வத்தைப் பெறாதவர்களுக்கு, வேறு என்ன இருந்தாலும் குறையே என்கிறார் மன்னர்.

எத்தனை அழகான படப்பிடிப்பு!

கற்பனை கலவாத கவிதையல்லவா இது!

பாமரனுக்கு மட்டில் படிப்பறிவு இருக்குமானால் குழந் தையாய் கிடக்கும் இன்பத்தை, பயனை மன்னனை விடவும் சிறப்பாகக் கூடச் சொல்ல முடியும். அரண்மனைவாசிக்கே அத்தனை மகிழ்ச்சி, நெகிழ்ச்சி என்றால், அன்றாடங் காய்ச்சிக்கு எவ்வளவு இதம் கிடைக்கும் குழந்தையின் குறும்பால்!

தேயமெல்லாம் போற்றும் திருவள்ளுவர் கூட,

''தம்பொருள் என்பதம் மக்கள்; அவர்பொருள்
தத்தம் வினையான் வரும்''

என்று பிள்ளையைச் செல்வமென்றே கூறி சிறப்பித் துள்ளார்.

''காவலில் லாதபயிர் பாலரில் லாதமனை
கதிர்மதி யிலாத வானம்
கவிஞரில் லாதசபை சுதிலயை யிலாதபண்
காவல ரிலாத தேசம்...
ஈவதில் லாததனம் நியமமில் லாதசெபம்
இசைலவண மில்லாத ஊண்
இச்சையில் லாதபெண் போகநலம் இவைதம்மின்
ஏதுபல னுண்டு கண்டாய்''

என குழந்தையில்லாத வீடு பயனற்றதெனப் பேசுகிறது அறப்பளீசுர சதகம். பயனில்லாத பட்டியலில் குழந்தை யில்லாத வீட்டையும் சேர்த்து குழந்தைச் செல்வத்தின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது சதகப் பாடல்.

நற்பண்புகள் அனைத்தையும் அணியாகப் பெற்றிருக் கும் பெண்ணுக்கு மக்கட் பேறுண்டானால்தான் முழுமைப் பேறென்கிறார் குமரகுருபர அடிகள்:

''பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ—சின்னடிசில்
புக்களையும் தாமரைக்கை பூநாறும் செய்யவாய்
மக்களை இங்கில்லா தவர்''

என்று பிள்ளையின் பெருமையைப் பேசுகிறது வெண்பா.

''கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வ முண்டாயின் இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு''

என்று பேசுகிறது நீதிநெறி விளக்கம்.

குலசேகர ஆழ்வார், தன்னைத் தாயாகப் பாவித்துக் கொண்டு, கண்ணனைப் பிள்ளையாகப் பெற முடிய வில்லையே என்று அரற்றுகிறார்.

''தண்ணந் தாமரைக் கண்ணே கண்ணா
தவழ்ந் தெழுந்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணில் செம்பொடி ஆடிவந் தென்றன்
மார்பில் மன்றிடப் பெற்றிலே னந்தோ...
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரிவாய்க் கொண்ட அடிசிலின் மீச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ'கொடு வினையேன்
என்னையேன் செய்யப் பெற்றதெம் மோயே!''

எல்லா வகை செல்வங்களுமிருந்தாலும் மக்கட் செல்வம் இல்லையென்றால் மன நிறைவு ஏற்படுவதில்லை. அதனால்தானே ''திரைகடலோடியும் திரவியம் தேடா'' த வரும், பிள்ளைச் செல்வத்திற்காக கோயில் குளம் நாடி அலைந்து அலமருகின்றார்கள்! சோதனைக் குழாயிலேனும் வாரிசை வளர்த்துவிட வேண்டுமென்று அவசரப் படு றார்கள்.

பிள்ளை பெறாத பெண்ணை ''குழவிபெறுமருமை கூன் மலடி தேராள்'' என முள்முடி சூட்டியல்லவா முகம் பார்க்கிறது பெண்ணுலகம்!

புத்திர பாக்கியமில்லாதவர்கள் 'புத்' என்னும் நரகத் திற்கே போவார்களென்று பூச்சாண்டிகூட காட்டியிருக்கின் றார்களே நமது முன்னோர்!

நயம்பட வாழ்வதற் கென்றில்லாவிட்டாலும் நரகத் திற்குப் போகக் கூடாதே என்ற அச்சத்தால் பிள்ளைவரம் கேட்டு ஆண்டவனுக்கு விடுத்த கோரிக்கைகளுக்கு வரி வடிவம் கொடுத்து அடுக்கிப் பார்த்தால் ஆல்ப்ஸ், மலையே நெல்லிக்காய் அளவாகி விடுமே!

''பிள்ளை வரத்திற்குப் போனவள் கணவனை பறி கொடுத்தது போல'' என்னும் பழமொழி பிள்ளைப் பேறுக் கா கப் பெண்கள் என்ன விலை வேண்டுமானாலும் கொடுப் பார்கள் என்பது போலல்லவா உள்ளது?

கன்னி கழிவதும், பிள்ளை பெறுவதும் மகத்தான வாழ்க்கைக் கடமையாகவே கருதப்பட்டது நமது முன்னோர்களால்.

பேராசை பெற்றெடுத்த போராசையால் தமிழ் மண்ணில் குருதிக்கோலம் போட்டது. அமைதி அடைக்கலம் தேடி ஓடியது. அன்பு என்பு தோல் போர்த்திக் கொண்டது. மன்னர்களோ மண்ணுக்கும் பெண்ணுக்குமாக மாறிமாறி போரிட்டுக் கொண்டார்கள்.

போர்வெறி புனைவு மனப் புலவர்களால் வீரமென்று விதந்தேற்றப்பட்டது.

பிழைப்புக்கு வேறு தொழில் கற்றறியா புலவர்கள் பரிசுக்காகக் களம் கண்ட காவலர்களைப் புகழ்ந்து பாடினார்கள். எனவே போரிடுவதொன்றே மன்னனின் புகழ் விளங்க ஏற்ற கருவி எனக் கருதப்பட்டது.

மறத்திலும் அறம் பேணியதே மண்ணின் மாண்பு. புகழ்வெறியில் விளைந்த போரில் கூட வரைமுறையும் அற நெறியும் நிலைகொண்டிருந்தது. போர் தொடங்கும் முன் அறிவிப்பு கொடுக்கப்பட்டது.

விதிவிலக்களிக்கப்பட்டவர்களை விலகிச் செல்லுமாறு கோரப்பட்டது. அப்படி விதி விலக்களிக்கப்பட்டவர்களில் முதியோர், பெண்கள், ஆநிரை, பிணியுற்றோர் என்ற வரிசையில் பிள்ளை பெறாதவர்களுக்கும் இடமளித்தது தமிழர் போர் நெறி!

''பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்''

என பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய நெட்டிமையார் புறப்பாடல் மூலம் அகச்சான்றை ஆக்கிக் கொடுத்துள்ளார்.

பிள்ளை பெறாதவர்களுக்குக் கட்டாய போர்க்கடமையிலிருந்தும் விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

மக்கட் செல்வத்தின் அருமை பெருமைகளை இன்னும் ஏராளமான இலக்கியங்களும், புராணங்களும் மரபு வழிச் செய்திகளும் பழமொழிகளும் எடுத்தியம்புகின்றன.

மணமக்களை வாழ்த்துவோர்கூட பதினாறு வகைச் செல்வங்களுள் ஒன்றாகப் பிள்ளைச் செல்வத்தையும் சேர்த்தே "பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க!" என வாழ்த்தினார்கள்.

நல்ல கருத்துக்களையெல்லாம் பொருள் புரியாதவர்கள் திரித்தும் சிதைத்தும் பொருள் கண்டதால் வேண்டாத வினைகளின் விளைச்சல் பெருகிற்று. தமிழ் மக்களின் அறியாமை அரிச்சுவடியில் 'பதினாறும்' என்ற வாழ்த்துச் சொல் கணக்கில் பொன்னும், மணியும், நெல்லும், பிற தானியங்களும் இடம் பெறாமல் எல்லாமே பிள்ளைகள் என்று மருவிய பொருளில் மயங்கி சிந்திக்காமல் செயல் பட்டு விட்டார்கள். விளைவு, இந்தியா வீங்கியது வறுமை ஓங்கியது.

சிறந்த செல்வமான குழந்தைகளை எவரும் ஆண்டிற் கொன்றாக நாட்காட்டியைப் போல் பெறமுடியும். விளையாத பூமியைப் போல் விதிவிலக்காக எங்கோ ஒருவர் இருக்கலாம்.

சிலர் களஞ்சியத்தைக் காலியாக வைத்திருந்தாலும், கருவறையை மட்டி நிரப்பியே வைத்திருக்கின்றார்கள்.

இவர்களை பொறுத்தவரை "அளவுக்கு விஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம்" என்ற பழமொழி செவிப்பறையைத் தட்டி, சிந்தனையைக் கிளராது சேதப்பட்டுப்போன கருத்து.

பிள்ளைகளை மலிவுப் பதிப்பாக்கி விட்டால் வறுமையும் நோயுமே அவர்களை வாங்கிக் கொள்கின்றன.

துன்பமும், துயரமுமே பதிப்பித்தவர்களுக்குப் பயனாகக் கிடைக்கின்றன. வளமும், வனப்பும் அவர்களின் வாயிலுக்கே வராமல் வழிமாறிப் போய் விடுகின்றன. சிலர் பிள்ளைச் செல்வங்களை அளவுக்கதிகமாகப் பெற்று, கொள்ளை நோய்களிடமே கொடுத்து விடுகிறார்கள்!

கொழுவொழுவென்றிருக்க வேண்டிய குழந்தைகளை, எக்ஸ்—கதிர்ப் படமாக வல்லவா பார்க்க வேண்டியுள்ளது. எண்ணிக்கை பெருக்கந்தானே இதற்குக் காரணம்?

# மென்மையும் வன்மையும்

பசுமையைப் போர்த்திக் கொண்டிருக்கும் நெல் வயல்! பழங்களைச் சுமந்து கொண்டு பேறுகாலப் பெண்ணைப் போல் நெளிந்து நிற்கும் மரங்கள்!

மழலையர் பள்ளியில் மணியடித்துக் குழந்தைகளைப் போல் பூக்களை உதிர்த்து நிற்கும் கொடிகள்!

இவை கண்கள் உண்ணும் கற்கண்டுகள், பார்வைக்குக் கிடைத்த 'பாப்கார்ன்.'

அலைகளின் முழக்கம்!

அருவியின் சலசலப்பு!!

பறவைகளின் விடியற்கால படபடப்பு! இவை செவிப் பறையில் ஏற்படுத்தும் சிலிர்ப்புதான் என்னே!

கற்புடன் வரும் தென்திசைக் காற்றை, கரும் புகையால் கறைபடுத்தும் நகர வாசிகளுக்கு, இயற்கைச் சூழலோ இரவல் தந்த புத்தகம்!

ஆனால், இணக்கமாக வாழும் இல்லறத்தார் எவருக்குமே இனிய சூழல் இல்லத்திலேயே அமைந்துவிடும்!

பார்வையிலே பசுமை!

கொஞ்சுமொழியில் குழைவு!

பணிவிடையில் கிடைக்கும் பரிவு! இவை இயற்கையின் இதத்தை நகர சூழலிலும் கொண்டு வந்து கொடுக்கும் கொடை!

''நானும் நீயும்
பன்மைகள் அல்ல
ஒருமைதான்
இந்த தேவ விஷயத்தை
மனித மொழியில்
சொல்ல முடிவதில்லை''

என்றார்—அப்துல்ரகிமான்

மொழியைக் கடந்த உணர்வுகளால், மூச்சை நிறுத்திப் பேசியிருக்கின்றார்கள்.

பன்மையைத் தகர்த்து ஒருமையானவர்களின் வாழ்க்கையை அவலத்தில் முடித்து, அனுதாபத்தை மட்டில் அவர்களுக்கு அளித்து அமர காவியங்களைப் படைத்ததுதான் சமுதாயத்தின் சாதனை.

குறுக்குச் சுவர் வைத்த இரட்டை வீடுகளில் வாழ்ந்து கொண்டு, பகையைப் பயிரிடும் பாங்கில் தலைவன் தலைவியர் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஒன்றி வாழ்ந்தால் ஐம்புலன்களிலேயே ஆயிரம்கோடி அழகைப் பார்க்க முடியும்.

வன்மையை வாங்கிவந்த ஆண்களும், பெண்மையைப் பெற்றுவந்த பெண்களும் மானிட வாழ்க்கையின் மகத்தான சக்திகள்!

ஆண்மையின் கம்பீரமும், பெண்மையின் வசீகரமும் எவ்வளவு நேர்த்தியானவை! இவை இடம் பெயரக்கூடாத எழுத்துக்கள்.

இல்லாததற்காக ஏங்குவதே இயல்பு! ஏக்கத்தைத் தீர்க்க இயற்கை ஏற்படுத்திய இன்பப் பாலந்தானே பாலுணர்வு!

இந்த உறவில், புலன்களின் தோழமைத் தொடர்பில், எச்சிலுக்குக் கூட மெச்சும் பெருமை கிட்டுகிறது. பதுக்கிக் கொள்ள முடியாமல் பங்கைக் கொடுத்து விடுவதும், பாதிப்பின்றி பயனை பரிமாறிக் கொள்வதும் பாலுறவில் மட்டும் தான்.

வாழ்க்கை நெசவில், நேரிழை, குறுக்கிழைகளாக ஆணும் பெண்ணும் ஆகும் போதுதான் குடும்பம் என்னும் பட்டாடையே கிடைக்கிறது.

ஆண் பெண் உறவுக்குச் சமூகத்தையும் அங்கீகாரத்தையும் பெறும் நிகழ்ச்சிதான் திருமணம்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுவதாகச் சொல்கிறார்கள்.

தொழிற்கூடமில்லாமல் உற்பத்தியா? மண்ணைத் தொடாமல் மாளிகையா? சொர்க்கம் என்பது அற்புதமான கற்பனை.

காணும் உலகைவிட கற்பனை உலகம் மேலானது. எனவே கற்பனையில் கிடைக்கும் இதத்தை ஏன் இழக்க வேண்டும்? இல்லாத எத்தனையோ கற்பனைகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். அந்தப் பட்டியலில் சொர்க்கத்தையும் சேர்த்துக் கொள்வோம். மேலான வாழ்க்கை என அந்த சொல்லுக்குப் பெயர் கொள்ளுவோம். அப்படியானால் திருமணங்கள்தான் சொர்க்கத்தையே படைக்கின்றன.

ஆம். சொர்க்கத்தைப் படைப்பவர் கடவுளல்ல; கணவன் மனைவிதான்.

பிணக்குகளை பின்னே தள்ளி, இணக்கத்தை வரவேற்று; மஞ்சள் குங்குமத்திற்கு மகிமை தருவது எதுவோ அதுதான் சொர்க்கம்!

குடும்பத் தலைவனும், தலைவியும் ஒருவர் நலனில் மற்றவர் காட்டும் அக்கறை இருக்கிறதே அதுதான் சொர்க்கத்தின் சுவர்!

உரைகளைக் கடந்து உணர்வு கொண்டு வந்து கொடுக்கும் உள்ளன்புதான் இல்லற இன்பம்!

இல்வாழ்க்கைக்கே திருமணந்தான் திறவுகோல்!

ஆண் பெண் உறவென்பது உடலைத் தீண்டி உள்ளத்துள்ளே ஊடுருவ வேண்டியது!

நீரோடு நீர் கலப்பதைப்போல் நெஞ்சங்கள் கலக்க வேண்டும்.

இது நிகழ ஏற்ற சூழலும்—நிகழ்வுகளும் ஏற்பட வேண்டும்.

வாழ்க்கைத் துணையாக வந்தபெண்ணிடமே தன்னை வாடகைக் காரனாகக் காட்டிக் கொண்டால் நெஞ்சக் கலப்பு நிகழ முடியுமா?

கொப்புளத்திற்குள்ளே குடிகொண்ட சீழைப்போல், அகற்றப்பட வேண்டிய அசிங்கமல்லவா இது! ஆண்களுக்கும், அவர்களைப் பெற்றவர்களுக்கும் அகச்சுத்தம் தேவை! பொன்னை மறந்து பெண்ணைத் தேடவேண்டும்.

பெண் தேட எண்ணும் போது காளை வேலனாகின்றான். பயணப்படும்போதோ வேடனாகின்றான். பேசி முடிக்கும் போதோ அவன் விருத்தனாகி ஆசைக்கு அடிமையாகிவிடுகின்றான்.

இங்கே பெண்கள் காவியங்களிலே மட்டும் அசலாக நிலைத்திருக்கின்றார்கள். வாழ்க்கையிலோ நனைந்த

படங்கள்; நசுங்கிய சிலைகள், பறிக்கும் போதே கண்ணிப் போகும் கனிகள்!

மணச் சந்தையில் மலிவுப் பொருளாகிப் போனவர்கள் மங்கையர்களே!

சுகத்தைக் கொடுப்பவர்களிடமே சுரண்டலா என்று கேட்கும் சூடும் சொரணையும் ஆண்களிடம் அணைந்து விட்டது.

மணவினை என்பதே உறவின் தொடக்கமாக அமையாமல், வரவின் வழியாக அல்லவா மாறிவிட்டது. பொன் பொருளுக்காகவே பெண் என்றபோது உள்ளமல்லவா ஊனப்பட்டுப் போகிறது.

மாமியார்களுக்கு மருமகள் கறவை மாடாகவும், கசாப்பு ஆடாகவுமல்லவா தெரிகிறார்! கொடுமை அரங்கேற்றத்தில் மாமியார்களும்-நாத்திகளுந்தானே நட்டுவாங்கம் செய்கிறார்கள். மானங்கெட்ட மணவாளர்களோ ஒத்தூதுபவர்களாக, இரவு உறவுக்கு மட்டும் இச்சை கொண்டவர்களாக ஆண்மையை கொச்சைப்படுத்தி கோழைகளாக இருக்கின்றார்கள்.

பெண்களுக்கெதிரான கொடுமைகளைக் கண்டிக்க கவிதை பிறந்த அளவுக்கு, சமூகத்தில் கருணை பிறக்கவில்லை.

எழுத்திலே ஏற்பட்ட எழுச்சியும், எதிர்ப்பும் இதயத்திலும் எண்ணத்திலும் ஏற்படவில்லையே!

பேச்சிலே பிறந்த கனல் கெடுமதியைச் சுடவில்லையே!

உண்மையை ஒளித்து வைத்து விட்டு, பொய்யைப் புனைந்து கொண்டு பொது நிகழ்ச்சிகளுக்குப் போகும் போக்கு மாறவேண்டும்.

பெண்ணுரிமை பேசும் கதைகள், கதைகளாகவும், நாடகங்கள் நாடகங்களாகவுமே நடந்து முடிந்துவிடுகின்றன. நல்லவை எதுவும் நடைமுறைக்கு வரவே முடியவில்லை.

பெண்களுக்கெதிரான குற்றங்களில் 90 சதவிகிதம் மறைக்கப்பட்டு விடுகின்றன.

சட்டங்களும் சல்லடைகளாக இருப்பதால் குற்றவாளிகள் பொத்தல்களுக்குள் புகுந்து வந்து விடுகிறார்கள்.

எந்தச் சட்டமும் சம்பிரதாய வியூகத்தை ஊடுருவ முடியாமல் ஒடிந்த அம்புகளாகவே உள்ளன.

அநீதியை எதிர்க்கும் ஆயுதங்கள் ஆண்கள் கையில் இருப்பதால், அவை ஆளப் படாமலேயே புதுமைப் பொலிவோடிருக்கின்றன.

முறைகேடெனும் வித்தைப் பிளந்து எறிவதற்குப் பதில் மறைக்க நினைத்துப் புதைத்தோம். ஏமாற்ற நினைத்து ஏமார்ந்தோம். அழிக்க வேண்டியதை முளைக்கவிட்டோம். அவை முளைத்துக் கிளைத்துத் தழைத்துக் கிடக்கின்றன.

பழக்கமாகிவிட்டால் பாரத்தில்கூட சுகத்தைப் பார்க்கின்றோம். பெண்ணடிமைத் தனத்தின் பரிணாமமே இந்தப் பழக்கம்தான். கவிதையில் மட்டும்தான் மரபு மீறப்பட்டிருக்கிறது. அதுதான் இலகுவானது. இந்த எலி வேட்டைக்காரர்கள் இதையே பெரும் புரட்சியெனப் பிதற்றிக் கொண்டு, போலிமையில் புகழ்வேட்டை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். திருமணத் தேடலில் மட்டும் இவர்கள் பார்வை பழமைப் பாதையில் தோய்வதேன்?

பெண்களைப் பெரும்பாலோர் உள்ளமாக எண்ணாமல் உடைமையாகவும், உரிமைப் பொருளாகவும் எண்ணுகிறார்கள். பாஞ்சாலி பந்தயப் பொருளானது இந்த எண்ணத்தின் விளைவுதான்.

'கன்னிகாதானம்' என்ற சொல்லே, பெண்ணை உடைமையாக எண்ணும் மனப்பான்மையின் பிரதிபலிப்புதானே!

பெண் ஆளப்படும் பொருள் என்பது ஆண்களின் அடிமனதில் வேர் பிடித்திருக்கும் விரும்பத் தகாத கருத்து, அதனால்தான் ஆண் மனைவியை அடிப்பதைக்கூட உரிமையாக நினைக்கின்றான்.

ஆண்களுக்கு அடிமையாக இருப்பதும், கொடுமைகளைப் பொறுத்துக் கொள்வதுமே போற்றுதலுக்குரிய குணமென பெண்களுக்குப் போதிக்கப் பட்டது. கணவனின் எச்சிலை உண்பதும், அவனடி தொழுவதும்தான் நல்ல மனைவியின் நடத்தை இலக்கணமாயிற்று.

புராணங்கள் மூலம் புகுத்தப்பட்ட புரையோடிப் போன இந்த அநாகரிகங்கள், அண்மைக்கால திரைப்படத்திலுங்கூட பிரதிபலிக்கப்பட்டு, வசூலை வாரிக் கொடுத்திருக்கிறது. பெண்ணுரிமை பேசும் இயக்கங்கள்கூட இதற்குக் கண்டனம் தெரிவிக்கத் தவறி விட்டன.

பெண்ணை வாழவிடாத வன்மத்தை, தனது உரிமை, உடைமை எனக் கருதும் மனைவி, தனது மறைவுக்குப் பிறகு யாருக்கும் எவ்வகையிலும் பயன்பட்டு விடக் கூடாதென்ற இழிந்த மனப்பான்மையால் தீட்டப்பட்ட 'சதி' தான் உடன்கட்டை ஏறுதல்.

உயிருடன் தீயில் எரிக்கப்பட்ட பெண் தெய்வமாவாளென்ற ஆசை காட்டலும், புகழுடம்பென்று போதை ஏற்றுதலும் பெண்களுக்கெதிரான சதியின் சரித்திர வரிகள்!

திருமணம் செய்வது பெற்றோரின் கடமை! புகுந்த வீட்டில் இழிவையும் இன்னலையும் ஏற்று, அமைதி காக்க வேண்டியது பெண்ணின் கடமை என்றாகி விட்டது.

பெண்ணின் திருமணம்; அகத்திலே அச்சத்தையும், முகத்திலே பீதியையும், கண்களிலே நீரையும் தேக்கும் சடங்காகி விட்டது. இந்த நிலை மாறுவது என்றோ?

பிறர் துப்பிய எச்சிலை மிதிக்கவே கூசுபவர்கள், தன் வாய் எச்சிலை விழுங்கி விடுவதைப் போல் பெண்களுக்கு அடுத்தவர் அநீதி இழைத்தால் பதறும் பலர், தாங்கள் கொடுமை செய்தால் அதை உரிமையாக எண்ணுகிறார் களே அதுதான் குற்றத்தின் ஊற்றுக்கண்.

அறிவியலுடன் பெண்களுக்கெதிரான அநீதியும் சேர்ந்தே வளர்ந்து வந்திருக்கிறது.

குற்றங்களை நியாயப்படுத்தும் சட்ட அறிவும் வாதத் திறமையும் வளர்க்கப்பட்டது போல், உயர்ந்த பண்பாடு களும், தன்மான உணர்வும் வளர்க்கப் படவில்லை.

உலக முதல் மனிதர்களான ஆதாம் ஏவாள் கதையி லேயே பெண் பிழை செய்தவளாக எழுதப்பட்டு விட்டது. அன்று தொட்டே பெண்ணுக்குத் தண்டனை தயாராக்கப் பட்டு, தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

இடைக்காலத் தமிழிலக்கியங்கள் பெண்களை போகப் பொருளாக உருவகப் படுத்தி, அங்க ஆராதனை செய்ய முற்பட்டன. உள்ளத்தைத் தீண்டாத உருவகப் புகழ்ச்சி யால் மங்கையர் உள்ளத்தை மயக்கின.

புனைவும் போலிமையும் இடைக்கால இலக்கியங்களின் கருப்பொருளாயின. இவை தங்கள் பங்காக வர்ணனை செய்து, ஆண்களின் காம வேட்டைக்குப் பெண்களைக் கருவியாக்கின.

சங்க இலக்கியங்களில் சற்று மாறுதலையும், ஆறுதலை யும் பெண்கள் பெற்றனர்.

அஃறிணை மூலமே ஆண்களுக்குப் பாடம் புகட்டப் பட்டது.

மிருகங்களும், பறவைகளும் தனது இணைக்கு இதம் சேர்த்த காட்சிகள் கவிதையாக்கப்பட்டன. கலித்தொகை கவிதை!

மேகத்தின் நிழல் நிலத்தில் பட்டே நெடுநாளான பூமி. மழையைப் பகைத்துக் கொண்ட மண் அது. வறட்சி மட்டுமே வந்து தங்கியிருந்தது. வாவியின் நீரை வானம் வட்டிக்காக ஆவியாக்கி எடுத்துக் கொண்டது. நீர்வேட்கை கொண்ட விலங்குகள் நெடுந்தொலைவு அலைந்து திரிந் தாலும் நீர் நிலைகளைக் காண்பது அரிது. இயற்கையே இரக்கப்பட்டு ஒரு குளத்தில் மட்டில் கொஞ்சம் நீரை விட்டு வைத்திருந்தது. சுற்றிலும் சேறு! நடுவில் கொஞ்சம் நீர். காலை வைத்தாலே கலங்கிவிடும் நிலையில் நீர்! தாகத் தால் தவித்த யானை இணை அங்கே வந்தன. வலிமை மிக்க ஆண் யானை தனக்கே உரிய தந்தத்தால் பெண் யானையை பின்னே தள்ளிவிட்டு குடிக்க நீர் கொஞ்சம் தானே இருக்கிறதென்று முந்திக் கொள்ளவில்லை. பெண் மையைப் பேணுவதில் மனிதனை விலங்கு வென்ற முதல் காட்சி இது. பெண் யானையை முதலில் குடிக்கச் செய்து, காத்திருந்து அடி குடித்து முடித்த பின், எஞ்சி—கலங்கி யிருந்த கொஞ்சம் நீரைக் குடித்ததாம் ஆண் யானை. எவ் வளவு அருமையான படப்பிடிப்பு?

"துடி அடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடி ஊட்டிப் பின் உண்ணும் களிறு"

என்பது கலித்தொகை காட்சி!

மழையின்மையால் இலைகளை இழந்து விட்டு, கைம் பெண்ணைப் போல் காட்சி தரும் காடு! வெப்பத்தின் விளைவால் புழுக்கம். ஆணுக்கும் பெண்ணுக்கும் புழுக்கம் பொதுவானதுதான். ஆனால் ஆண் புறாவுக்கோ தன் இணை பெண்புறா புழுக்கத்தால் படும் இன்னலைக் கண்டு பொறுக்க முடியவில்லை. வன்மை இங்கே மென்மைக்குப் பரிவு காட்டுகிறது. தனது மென்மையான சிறகை விசிறி

யாக்கி ஆண் புறா பெண் புறாவுக்கு விசிறுகிறது. பெண் புறாவின் புழுக்கத்தைத் தணிப்பதில் ஆண் புறாவுக்குள்ள அக்கறைதான் என்னே!

நாலறிவு புறாவின் நயமிகு செயல் நெஞ்சை நெகிழச் செய்கிறதல்லவா? கற்க வேண்டிய கலித்தொகைக் காட்சி வரிகள் இதோ!—

''அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ரால் ஆற்றும் புறவு''

இதயத்தை நெகிழ வைக்கும் இன்னுமொரு காட்சியைக் காண்போம்.

மானிடரிடம் மறைந்துவரும் பரிவையும், பாசத்தையும் மானிடம் பார்க்க முடிகிறது. ஆம், மான்கள் மனிதனுக்குப் பாடமாகின்றன.

அதே காடு! பற்றிக் கொள்ளுமோ என்று பயப்படும் அளவில் அனல்! தாங்க முடியாத தவிப்பில் இரு மான்கள். நிழல் தேடி அலைந்து களைத்த நிலை! தன்னிலை மறந்து பெண் நிலை எண்ணிப் பதறுகிறது ஆண்மான். வேறு வழியில்லை. தனது உடல் நிழலை பெண் மானுக்களித்துப் பாதுகாக்கிறது கலைமான். இயற்கை தராத நிழலை இணையின் இதயம் கொடுக்கின்றது.

''இன்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை''

என்கிறது கலித்தொகை!

இல்லறத்தில் எத்தனை குடும்பத் தலைவர்கள் தங்கள் துணை நலன் பேணும் இணையன்புடையவர்களாக இருக்கின்றார்கள்?

பெண்களை மதிக்கும் பண்பு பெரியாரைப் போல், திரு. வி. க. அவர்களைப் போல், காந்தியடிகளைப் போல்

அகச் சுத்தத்தோடு வெளிப்பட வேண்டும். பலரிடம் இந்த பண்பிருந்தாலும், வெளிப்படுத்துவதற்கு வெட்கப்படுபவர்கள் ஏராளம்! குளிர்காய நினைப்பவன் பனிக்கட்டிமீது படுத்துக் கொண்டா வெய்யிலை வரவேற்பது?

இயற்கை பெண்ணை விட ஆணுக்கே அழகைக் கொடுத்திருக்கிறது.

சிங்கத்தின் பிடரி!

மயிலின் தோகை!

யானையின் தந்தம்

கோழியின் கொண்டை இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் மனித வர்க்கத்தில் மட்டுமே ஆணை விட பெண் அழகாகப் படைக்கப்பட்டிருக்கின்றார். இது தேவையான இடமாற்றந்தான்.

புதைந்து கிடக்கும் போகச் சுகம் மட்டும் பெண்களிடம் இல்லாமற் போயிருந்தால், பெண்களும் கால்நடைகளைப் போலவே கட்டுத் தரியிலும், கொட்டடியிலும் வைக்கப் பட்டிருப்பார்கள்.

உழவுக்காக மாடு வாங்குவதைப் போல், பலர் உழைப்பதற்காகவே பெண்தேடி திருமணம் செய்கிறார்கள். நோக்கமே பிழையாக இருக்கும் போது, ஆக்கம் எப்படிச் சரியாக இருக்க முடியும்? நூலில் முருக்கும், முருகும் இல்லாத போது. ஆடையில் மட்டில் அழுத்தமும் அழகும் இருக்க முடியுமா?

பெண்களிடம் மனமாற்றம் ஏற்பட வேண்டும். அணுவுக்குள்ளே அடங்கியுள்ளதைப் போன்ற தங்கள் சக்தியை அவர்கள் உணரவேண்டும். சார்ந்திருக்க வேண்டுமென்ற சம்பிரதாயங்களைத் தகர்த்து, தன்னம்பிக்கையோடு வெளிவரவேண்டும்.

திருமணந்தான் ஒரு பெண்ணின் வாழ்க்கை என்ற நிலை மாற வேண்டும்.

தன்னைச் சமமாக நடத்துபவர்களோடுதான் சம்பந்தம். ஒத்த உரிமை, பகிர்ந்து கொள்ளும் கடமை இதை ஏற்றுக் கொள்ளும் ஆணையே பெண் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பெண்ணால் எல்லாம் முடியும். தன் மனதை ஆளும் பெண்ணால், தரணியையும் ஆளமுடியும். இது நிரூபிக்கப் பட்ட உண்மை.

பெண்கள் தங்களை உணர வேண்டும். ஆண்கள் அவர் களைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் இணை என்ற எண்ணம் வளர வேண்டும். ஏற்றத் தாழ்வு களை ஏற்றுக்கொண்டு இல்லறம் நடத்துவது தொடரு மானால், பெண்கள் நிலைக்கு ஆண்கள் தள்ளப்படுவது தவிர்க்க முடியாத விபத்தாகிவிடும்.

இணையாக வாழ்ந்திடுக! துணையாக இயங்கிடுக! உலகம் உய்ய ஆண் பெண் அன்பால் பிணைந்திடுக.

# முகையும் நகமும்

பெண்கள்,

கவிஞர்களின் பார்வையில்
உலவும் நிலவுகள்!
உதிரா மலர்கள்!
கனவுக் கலாபங்கள்!
கண்களின் விருந்துகள்!

உண்மையில் இவர்களோ,

அறிவில் வைரத்தின் வாரிசுகள்!
ஆற்றலில் ஆடைகட்டிய போர் விமானங்கள்!
கடமையில் கதிரவனின் ஆசான்கள்!
உழைப்பில் உவமை காட்ட முடியாதவர்கள்!
தன்னல மறுப்பில் வாழையின் வழிகாட்டிகள்!

இவர்களையே,

மதிமயக்கிகள்!
மாயப் பிசாசுகள்!
மறைகாக்க முடியாதவர்கள்!
மலிவுப் பதிப்புகள்!

என அழிவுச் சக்திகளாக இழிவு படுத்தி எழுதி வைத்தனர் சிலர்! காமத்திற்குக் காவிக் கவசம் போட்டவர்கள், சேலையை சிறுமைப் படுத்திப் பேசினார்கள். மழையால் மண் மாசுபடும் என்றார்கள்! இவை,

ஏமாற்றத்தின் எதிரொலி!
இயலாமையின் கூக்குரல்!
அவ நம்பிக்கையின் ஆர்ப்பாட்டம்!
அற்பத்தனத்தின் சொற்போர்!

இவர்கள் மறந்தது
தாயின் பாசம்!
தாரத்தின் பரிவு!
தங்கை, தமக்கையின் அன்பு!
இவை நிறுத்துக் காட்ட முடியாத நிறை!
இணை காட்ட முடியாத இமயச் சிகரங்கள்!

இருந்தும்,

பெண் குழந்தைகள் விரும்பப்படாத விருந்தாளிகளானது ஏன்?

பெண் என்பதால் பிறப்பிலேயே இறப்பெதற்கு? பூத்தவுடனேயே புழுதிக்குப் போவது ஏன்? இறக்கம் என்பது மேகத்தைப் போலவே மலடாகி விட்டதா?

பெண் குழந்தைகளைக் கண்டு பெற்றோர் அஞ்சுவது ஏன்? நதிகள் நடந்து வரும்போது கடல்கள் முகத்துவாரத்தை மூடிக் கொள்வதில்லையே!

பெண்களுக்குத் தொல்லை, பெண் சிசு கொலை! ஏனிந்தக் கொடுமை! எப்படி வந்தது மனிதருக்குள் மிருகத்தின் தன்மை!

தன்னலத்தை நாடு கட்த்திய தாய்மை கூடவா இதற்கு உடந்தை?

பெரிய மீன் சிறிய மீனை விழுங்குவதைப் போல், பெண்களே பெண்களை அழிக்கும் அத்தியாயம் ஆரம்பமாகிவிட்டதா? இந்தச் செய்தி நாசிசத்தையே நடுங்க வைக்குமே!

கீரையைக் கிள்ளும் போதே கைநடுங்கும் பெண்களுக்கு பிஞ்சுக் குழந்தையின் நெஞ்சை நெறிக்க முடிவது எப்படி?

பெண் சிசுவைக் கொல்லும் போது தாய்மை தொலைந்துவிட்டதா?

பாசம் பாதுகாப்புக் கைதியாகிவிட்டதா? இதற்கெல்லாம் காரணம்?

பெண்கள் பெற்றோர்களுக்கு
சோகச் சுமையாக

கவலை தரும் கடனாக கூடுதல் பொறுப்பைக் கொண்டு வந்து கொடுப்பதுதான் என்கிறார்கள்! இவை கொண்டு வந்தவை யல்ல, கண்டு கொண்டவை!

மூலதனக் கணக்குப் போட்டது குழந்தைகளல்ல. பெற்றோர்கள், பெரியோர்கள், சமூகம்!

தப்புக்கணக்குக்கு மதிப்பெண் கொடுத்ததும், மேலுக்கு அனுப்பியதும், அருவருக்கத்தக்க ஆசைகளுக்கு அடித்தளமிட்ட சமூகம்!

சமூகம் என்பது ஏதோ அல்ல. ஆணும் பெண்ணும் கூடி வாழும் கூட்டமைப்புதான்.

இராவணனுக்கு ஆசைத்தீயை மூட்டிய சூர்ப்பனகையைப் போல், வரும்படிக்கு ஆண்களை மூலதனப் பொருளாக்கியது யார் குற்றம்? குழந்தைகள் குற்றமா? பெற்றோர்களின் பேராசைக் குற்றமா?

முள் வேலி கட்டி அதற்குள்ளே முல்லையைப் பயிரிட்டதும், மலரை பறிக்க வேலியைத் தாண்ட முடியவில்லையே என வேதனைப் படுவதும் யார் குற்றம்?

முந்திரிப் பருப்பை மறந்து, ஓட்டைக் கடித்து உதட்டைப் புண்ணாக்கிக் கொண்டால் அதை அறிவீனமென்பதா? அவசர மென்பதா?

பெண்மை நலனைப் பிழையென உருவகப்படுத்தியது பெருங்குற்றம். பிள்ளைகளுக்குள்ளே பேதத்தை உண்டாக்கியது யார்? நாம்.

விழிகளுக்கிடையே வேற்றுமை விதையை ஊன்றியதும், எருவிட்டு நீர்பாய்ச்சி வளர்த்ததும் நாம்.

பெண்களைப் பொருத்தவரை சமூக சட்டங்கள் இதயம் இருண்டவர்களால்தான் எழுதப்பட்டிருக்கின்றன. அவர்களைச் சுற்றி உண்மை ஒளி ஊடுருவ முடியாத சடங்குச் சுவர்கள் சம்பிரதாயச் செங்கற்களால் மதச் சுண்ணாம்பால் கட்டப்பட்டிருக்கின்றன.

சடங்குப் சம்பிரதாயங்கள் பெண்களை அடிமைப் படுத்தும் அரக்கு மாளிகைகள். பார்வையை பறித்திடும் மேக் சரிகைகள். அறிவை மயக்கும் அபின். நாகரிகமாகக் கூறுவதானால் பகுத்தறிவை பலிவாங்கும் பட்டாக் கத்திகள் ஆம். இவை:—

நன்றி கொன்றவர்களின் வெற்றிச் சின்னம்!
ஏமாற்றுக்காரர் பெற்ற இருட்டு வெற்றி!
தூய்மை கெட்டவர்கள் கட்டித்தந்த ஓட்டைப் படகு!
ஆதிக்க நோக்கத்தார் அமைத்துக்
கொடுத்த அடிப்படையில்லா மேடை!
பாதுகாக்கக் கூடாத சின்னம்!
கொண்டாடக் கூடாத வெற்றி!
பயணப்படக் கூடாத படகு!
ஏறக்கூடாத மேடை!

பரபரப்பு மிகுந்த இந்த மண்ணில் இவை பாதுகாக்கப் படுகின்றன, பயன்படுத்தப் படுகின்றன. பாராட்டப் படுகின்றன.

இதுதான் குறையின் நிறை!
கொடுமையின் பள்ளி யறை!

கருப்பைதான் பெண்களின் பெருமைக் கருவூலம்.
பரம்பரை சொத்தைப் பாதுகாக்கும் பெட்டகம்!
குழந்தையாம் தாமரை பூக்கும் குளிர் வாவி!

சமூகக் குற்றவாளிகள் இந்த சந்தனப் பேழையை விறகுக்காகவும் வெட்டி எடுக்கின்றார்கள்.

பளிங்குத் தடாகமாயினும் பன்றிகள் இறங்கினால், களங்கப் படுவது தீர்க்க முடியாத தீமை! ஒதுக்க முடியாத உண்மை!

வைரம் பார்வையால் மட்டுமே பயன்படுத்த வேண்டிய பொருள். விளைவு தெரியாமல் விபரீத புத்திக்காரர்கள் வாயில் போட்டு, வயிற்றுக்குள் தள்ளினால், மரணம் அவர்களை மன்னிப்பதில்லை.

கருப்பையைக் களங்கப்படுத்துவதன் மூலம், மனித வர்க்கமே மல்லாந்து படுத்துத் துப்பிக் கொள்கிறது.

ஆண் பெண் அந்தரங்க உறவை காட்டிக் கொடுப்பது கரு. பெண்கள் மீது படியும் கறைக்குக் கருவே காரணமாகி விடுகிறது. அவமானத்திற்கு அதுதான் ஆட்படுத்துகிறது. விரும்பாத புணர்ச்சியின் விளைவுக்கு பெண்கள் மட்டுமே பொறுப்பேற்க வேண்டியுள்ளதே, அது சமூகம் செய்த ஓர வஞ்சனை. தவறாகக் கொடுக்கும் தண்டனை. தவறுக்குத் தண்டனை. குற்றத்திற்கு விதிவிலக்கு. இதில்தான் ஆணாதிக்கத்தின் அடாவடித் தனமே ஆரம்பமாகிறது.

கருவைச் சுமப்பதால் பெண்கள் மட்டுமே இழித் துரைக்கப் படுகின்றனர். ஏளனம் செய்யப்படுகின்றனர். இது புதைக்கப்பட வேண்டிய பொல்லாங்கு! அடைக்கப்பட வேண்டிய ஓட்டை! முறியடிக்கப்படவேண்டிய முறைகேடு! ஆண் பெண் கூட்டமைப்பான சமுதாயத்தால் இந்த போக்கு பரிகசிக்கப் படவேண்டும். ஒட்டு மொத்தமாக ஒழிக்கப்பட வேண்டும்.

இந்த பேதம், ஏமாற்றுக்காரர்கள் எழுதி வைத்த இடைக்கால வேதம்; இது தேவையற்றது—முறையற்றது என்பதை நாட்டுக்கொரு புலவன்—கோட்டுப் போட்ட கவிஞன் பாரதி, பொறுக்க முடியாமல் போர்க்குரல் கொடுத்தான்.

''கற்பு நிலையென்று சொல்ல வந்தார்—இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்''

ஆம் பாரதியின் கூற்று பாட்டோடு நின்று விட்டது.

பாவேந்தர் பாரதிதாசனும் . வெகுண்டெழுந்து பாடினார்.

''பெண்களிடம் கற்பை எதிர்பார்க்கும் ஆண்கள்
பெண்களை கற்பழித்துத் திரியலாமோ?
பெண்களுக்கும் ஆண்களுக்கும் கற்பு பொதுவன்றோ?
ஆடவர்க்கொரு நீதியோ?—எழில்
மாதர்கட்கொரு நீதியோ?''

என்று நீதி கேட்டார். ஆனால் இந்த நீதியின் குரல் ஏராளமானோர் செவிப்பறையைத் தட்டினாலும், இதயத்தில் மட்டில் எதிரொலிக்கவில்லை.

இங்கே எந்த நீதியும் வார்த்தை வடிவத்தோடு வழக்கொழிந்து போகிறது. நாக்கில் நடந்து வந்து உதட்டில் வழிந்து விடுகிறது. இல்லையென்றால் பெண் குழந்தைகள் பிறக்கும் போதே இறப்புக்கு ஆளாக்கப்படுமா?

காஞ்சி. காமாட்சி!
காசி விசாலாட்சி!
மதுரை மீனாட்சி!
ஊர்தோறும் மாரியம்மன்கள்!
ஆங்காங்கே அங்காளம்மன்கள்

ஆலயங்களில் ஆண்களே நடத்தும் ஆராதனைகள்: அந்தாதிகள்! பக்திப் பாட்டுக்கள். இவையெல்லாம் பெண்களுக்கு மரபு வழி வந்த மரியாதைகள்! புரிந்து கொள்ளாமலே நடத்தப்படும் பூசைகள்! அகத்தைத் தொடாத ஆரவாரங்கள். நலம் கிடைக்குமென்ற நப்பாசை வினைகள். இவற்றால் பெண்கள் பெற்ற பயன் என்ன? கூழூற்றினார்கள். கூடை தூக்கினார்கள். பாரம் இழுக்கும் எருதுகளாகப் பவனி வந்தார்கள். வேறென்ன கண்டார் கள்.

பந்தியில் கூட இரண்டாவதாகத் தானே இவர்கள் உட்கார முடிகிறது! படத்தில் மட்டும் பார்வதி பரமசிவன் தொடையிலே உட்கார்ந்திருக்கலாம். ஆனால், ஆண்கள் முன் பெண்கள் தரையில்கூட உட்கார முடியாத, உட்காரக் கூடாத காலமொன்று கூட இருந்ததே! இன்றும் அங்குமிங்கு மாக இருக்கிறதே!

இவை ஆண்கள் மனதில் அழுந்திப்படிந்திருக்கும் ஆதிக்க எண்ணத்தின் ஆசார வெளிப்பாடுகளல்லவா? தள்ளப்பட வேண்டிய எண்ணங்கள் கொள்ளப்படுவது ஏன்

எந்த பெண்ணும் குறையை கூடவே கொண்டு வருவ தில்லை.

ஆணைப் போலவே அவளும் நிர்மலமாகவும், நிர்வாண மாகவுந்தான் பிறந்தாள். கண்ணீரைக் காணிக்கையாகக் கொடுத்துதான் எந்தக் குழந்தையும் மண்ணின் மணத்தை முகர்கிறது. ஆனால் பெண்களுக்கு மட்டில் கண்ணீரே அணியாகிவிட்டது. குண்டலத்தோடு பிறந்தானாமே கர்ணன், அப்படி அழுகையோடு பிறந்த பெண், அழுது கொண்டும், ஆண்களை தொழுது கொண்டும் வாழ வேண்டி யவளாக்கப் பட்டு விட்டாள்!

உபயோகமற்ற உலோகம் தங்கம். உழைக்காதவர் களைப் போலவே இதுவும் உலகத்தில் உயர்வைப் பெற்றிருக்கிறது.

தங்கத்தைக் கண்டு பிடித்தவன் தான் சமூகத்தின் முதல் விரோதி! பெண்களுக்குப் பிரச்சினைகளை உண்டாக்கியவன். அகக் கலப்பையே அங்காடி பேரமாக்க ஆதாரத்தைத் தேடித் தந்தவன். அவனது எலும்புக் கூட்டையாவது தேடிப் பிடித்து தூக்கில் போட வேண்டும்.

பெண்கள் மயங்கியதும், பெண்களை மயக்கியதும் தங்கமும் பட்டுந்தான். இவர்களை பலவீனப் படுத்தியது மாதவிடாய் மட்டுமல்ல, மஞ்சள் உலோகமும், முசுக்கட்டை இலையுண்ணிகளின் எச்சில் இழைகளுங் கூடத்தான்.

வானவில்லின் நிழலானாலும் அதில் வண்ணங்களை பார்க்க முடியாதன்றோ? அழகு சாதனங்களால் பெண்களுக்கு உண்மையான ஏற்றம் கிடைப்பதில்லை. அழகும் கூட ஆண்களின் கண்களுக்கே ஆதாயமாகி விடுகிறது.

பெண்களைப் பின்னணிக்குத் தள்ளிவிட; தங்கமும் பட்டும் தக்க கருவியாகி விட்டன. ஆம் எதிர்ப்புணர்வே ஏற்படாமல் செய்வதில் இவை ஆண்களுக்கு அற்புதமான கருவியாகி விட்டன.

தங்கம், காயப் படுத்தாத கத்தி!

பட்டு, கழுத்தை இறுக்காத கயிறு!! ஆனால் இவற்றால் பெண்கள் குருதி கொட்டியிருக்கிறார்கள், ஆவியை விட்டிருக்கின்றார்கள். தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்ளவும், தாக்கிக்கொள்ளவும் தந்திரமாகத் தயாரிக்கப்பட்ட இவ்விரு ஆயுதங்களையும் என்று பெண்கள் தொடமறுக்கின்றார்களோ; அலட்சியப் படுத்துகிறார்களோ, அப்புறப் படுத்துகிறார்களோ அன்றுதான் அவர்களது அடிமைத்தளையின் முடிச்சு அவிழும்.

பெண்கள் முகத்தில் பூசிக் கொள்ளும் மஞ்சளைப் போலவே, அகத்திலும் அறியாமை அழுக்கை அப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

மதத்தின் பெயராலும், கடவுளின் பெயராலும், பெண்களின் உரிமைகளை மறைக்கும், மடக்கும் சடங்குகளை தகர்த்தெறிய வேண்டும்.

ஒழுக்கம் என்பது ஒரு பாலுக்குமட்டும் உரியதல்ல? நாகரிகம் நிலைக்க இது இருபாலுக்கும் தேவையானதே! எனவே பொதுவாக்கிப் போற்றப்பட வேண்டியது ஒழுக்கம். பெண்களை மட்டில் மிரட்டும் பூச்சாண்டியாக இருக்கக் கூடாது. நாணயத்தின் எந்த பக்கம் பாதிக்கப்பட்டிருந்தாலும், அது செல்லாமற் போவதைப்போல் ஒழுக்கமும் எண்ணப்பட வேண்டும்.

மரணத்திற்குத் தனது எச்சில் இழைகளே காரணம் என்றுணராத பட்டுப் புழுக்களாகப் பெண்கள் இருக்கக் கூடாது. அழகுக்காகப் பிடிக்கப்படும் மயில்; ஆகாரத்திற்காகவும் சமைக்கப் படுவதைப்போல், பெண்கள் ஆகிவிடக் கூடாது. சுமைகளை ஏற்றிக்கொண்டு, சுளுக்குக்காக அழுகிறார்கள் பெண்கள்.

பெண்களே! நீங்கள்தான் சக்திக் கனல்!
சக்தியின்றி இயக்கமில்லை!
இயக்கமின்றி ஏற்றமில்லை!
ஏற்றமின்றி பெருமையில்லை!
பெருமையின்றேல் மானுடமில்லை.

மீசையாலேயே வானத்தை முறைத்துப் பார்த்த பாரதி

"நடந்திடுஞ் சக்தி நிலையமே! நன்மனைத்
தலைவீ! ஆங்கத் தனிப்பதூர்ச் செய்திகள்
அனைத்தையும் பயன்நிறை அனுபவ மாக்கி" என்று பெண்களின் கொடுமையைப் பேசினான்.

"பெண்களை விட்டென்ன பேரின்பம்; வழிகாட்டும்
கண்களை விட்டென்ன கடவுனெறி?"

என்று போகச் சுகத்தையே யாகமாக நடத்திக் கவியமுதை பொங்கவிட்ட கண்ணதாசன் பாடினான்.

> ''வண்மை உயர்வு மனிதர் நமக்கெலாம்
> பெண்மையினால் உண்டென்று பேசவந்த
> பெண்ணழகே!''

> ''நாயென்று பெண்ணை நவில்வார்க்கும், இப் புவிக்கும்
> தாயென்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே!''

என்று தமிழ்ப் பெண்களுக்குத் தனிப்பெருமை உண்டென்று பாடினான் பாவேந்தன்.

படித்தோம், பாராட்டினோம், மேடைப் பேச்சில் மேற்கோளாகக் கையாண்டோம், அவ்வளவே!

மேகம் பொழிகின்ற மழை, அதை நனைப்பதில்லை என்பதைப்போல், ஆண்களின் எண்ணப் படைப்பே அவர்களை திருத்தவில்லை, நெஞ்சைத் தீண்டவில்லை.

பெண்களின் பெருமையை குலைக்கும் நிறையழிப்பு!
மணக்கொடை வசூல்!
பெண் சிசு கொலை!
ஒத்த உரிமையின்மை.

நாகரிகத்தின் தொட்டிலாக விளங்கிய தமிழ் மண்ணில் தமிழர்களுக்கிடையில் தலை நிமிர முடியாத தரங்கெட்ட வினைகள்.

தனித்திறமையாய் ஆங்காங்கே சில பெண்கள் வரம்பு மீறி ஆண்களை ஆட்டிப் படைத்தாலும், அடிமையாக்கி நடந்தாலும், சமூகம் பெண்களை சரியாக நடத்தவில்லை என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆணாதிக்கப்போக்கை அங்கீகரிப்பது, குடிநீரில் குளோரினை அளவுக்கதிகமாக கலப்பதற்கொப்பாகும். இயற்கை

யாகப் பெய்ய வேண்டிய மழை பொய்க்கும்போது, மேகத்திற்குக்கூட மருத்துவம் பார்க்கவேண்டியிருக்கிறது. எனவே பறிக்கப்பட்ட உரிமைகளைப் பெற பெண்கள் தங்களைத் தாங்களே தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

மோதலின்றி ஒலி இல்லை, ஓதலின்றி கல்வி இல்லை. போராட்டமின்றி உன்னத லட்சியங்கள் எய்தப்படுவதில்லை. எனவே, பெண்களின் முன்னேற்றத்திற்குப் பெண்களே ஆர்த்தெழ வேண்டும். அவர்களுக்காக அவ்வப்போது 'பெரியார்கள்' பிறந்து கொண்டிருக்கமாட்டார்கள்.

காரணங்களைக் கற்பித்துக்கொண்டு, கட்டுண்டு கிடப்பதில் இனம்புரியாத இதம் காண்பதானால், எத்தனை நூற்றாண்டுகளானாலும், பெண்கள் ஆண்களின் அடிச்சுவட்டையே தங்களின் திசைகாட்டியாகவும், வழிகாட்டியாகவும் ஏற்றுத் தொடரும் இழிநிலை மாறாது.

உயிர்க் காற்றை ஊதியகற்றி, கரியமில வாயுக்குக் கையேந்தி நிற்கும் குருட்டு நடைமுறைகளை விரட்டிட வேண்டும்.

வெள்ளத்திற்கு வேர் தடையாகி தடுத்துவிட முடியாது. பெண்கள் விழித்தால் எந்த இருளும் எதிர் நிற்காது. அடக்கத்தின் பெயரால் அடிமைகளாக நீடிப்பதை நீக்குவோம். சிசுக்கொலையை தவிர்ப்போம். தேவையானால் பிறப்பைத் தவிர்ப்போம். பேதத்தைத் தகர்ப்போம்.

# காதலும் கட்டுப்பாடும்

இடம் கிடைக்கவில்லை எங்கும்!
வாய்ப்பு கிடைக்கவில்லை எதிலும்!
வசதி பெருகவில்லை வாழ்வில்!

விளைவு...?
ஏக்கம்!
ஏமாற்றம்!
எரிச்சல்!

காரணம்...?

கட்டுப்படாத மக்கள் பெருக்கம்!
மட்டுப் படாத ஆசை பெருக்கம்!

இதனால்,

முயற்சியின் பயன் முடங்கிப் போகிறது!
முன்னேற்றத்தின் மூச்சு அடங்கிப் போகிறது!

ஆம். உலகம் மட்டில் கோள வடிவாக இல்லாமற் போயிருந்தால், இந்தியா இந்நேரம் குடை சாய்ந்து போயிருக்கும்.

இல்லாமை இங்கே இல்வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறதே! ஏன்? எப்படி?

அறிவில் தாழ்ந்தவர்களா?
ஆற்றலில் குறைந்தவர்களா?

கிரேக்கர்களைப் போல் கடல் வாணிபத்திலேயே கை தேர்ந்தவர்களாக இருந்தோம்.

வானியல் கணிதத்தில் வல்லவர்களாக இருந்தோம். கால்களால் நிலத்தை அளப்பதைப் போல் கோள்களால் காலத்தைக் கணித்தவர்கள் நமது முன்னோர்.

உலக இயக்கத்தின் மூலசக்தி பரிதிதான் என்பதை அறிந்து "ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" என்று செங்கதிரை நன்றியோடு வாழ்த்தி வழிபட்டவர்கள் நமது மூதாதையர்கள்.

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்த நமது முன்னோர்களின் அறிவியல் ஆளுமை சிந்தித்தவர்களை மலைக்க வைத்தது. மாந்த குலத்தை நிலைக்க வைத்தது.

அறப்பளீசுர சதகம் பாடிய அம்பலவாணக் கவிராயர் பாடலில் காணும் மழைக்குறிப்பு நமது வானியல் அறிவாற்றலுக்கோர் எடுத்துக் காட்டு.

"சித்திரைத் திங்கள்பதின் மூன்றுக்கு மேல்நல்ல
சீரான பரணி மழையும்
தீதில்வை காசியிற் புரணை கழிந்தபின்
சேருநா லாநாளி னில்

ஒத்துவரு மழையுமவ் வானியில் தேய்பிறையில்
ஓங்குமே காதசியி னில்
ஒளிர்பரிதி வீழ்பொழுதில் மந்தார மும்மழையும்
உண்டா யிருந்தாடி யில்

பத்திவரு தேதிஐந் தினில்ஆதி வாரமும்
பகரும் ஆவணி மூலநாள்
பரிதியு மறைந்திடக் கணமழை பொழிந்திடப்,
பாரில்வெகு விளைவு முண்டாம்

அத்தனே! பைங்குவளை மாலையணி மார்பனாம்
அண்ணலெம! தருமை மதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறபளீ சுர தேவனே.''

இப்படி அறிவியல், கலை, இலக்கியம் பண்பாடு என ஒவ்வொரு துறையிலும் நாம் உலகின் முன்னோடியாக விளங்கியபோது, நமது நாட்டின் மக்கள் 'பெருக்கம் மட்டுப் பட்டிருந்தது.

மக்களிடம், எல்லாம் தனக்கே எனும் எண்ணம் அருகி யிருந்தது. எதிர்காலத்தைப் பற்றிய எண்ணமும் பொறுப் பும் பெருகியிருந்தது.

பனிக்கட்டிமேல் படுக்கவைத்தவனைப் போல் மருத்துப் போன மனம், நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் சிந்தனைச் செல்வத்தைப் பறிகொடுத்துவிட்ட பரிதாபம். இதனால்,

அரசின் திட்டப் பலன்களோ ஓட்டைக் கலத்தில் பெய்த நீராக ஒழுகிப் போகிறதே!

வேலையில்லாததால் இளைஞர்களின்
உள்ளம் தளர்ந்தது.
ஏமாற்றத்தின் விளைவாக நாட்டில்
வன்முறை வளர்ந்தது.

அரசு தன் கடமையை உணர்ந்தது. செயல் திட்டங் களை வகுத்தது. ஆனால் மக்கள்?

ஜப்பான் நாட்டைப்போல் மக்கள் தொகை உயராமல் பார்த்துக் கொண்டிருந்தால், ஜெர்மனியைப் போல் மக்கள் பெருக்கம் குறைந்திருந்தால் இந்திய அரசு எடுத்துக் கொண்ட முயற்சி, செய்த முதலீட்டால் நாட்டின் செல்வ நிலை உயர்ந்திருக்கும். உலகத்தின் விழிகளில் வினாக் குறி

யையும், வியப்புக் குறியையும் நிலைக்கச் செய்திருக்கும். வல்லரசாகி அமெரிக்காவையே வாய்பொத்தி நிற்கச் செய் திருக்கும். ஆனால் நமது மக்கள் பெருக்கம், நமது வளர்ச் சியின் வழித்தடையாகவல்லவா உள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்து, 1921-ல் கால மாகி, கவிதையாக வாழ்ந்து கொண்டிருக்கும் பாரதி,

''முப்பது கோடி ஜனங்களின் சங்க முழுமைக்கும்
பொதுவுடைமை......'' என்றும்

''முப்பது கோடி முகமுடையாள் உயர்
மொய்ப்புற வொன்றுடையாள்—இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள், எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்''

என்றும் பாடிக் களித்தானே. அன்றைய பாரதத்தின் மக்கள் தொகை முப்பது கோடி! இன்றைய மக்கள் தொகையோ எண்பத்து எட்டு கோடி!

இந்தியா விடுதலை பெற்ற போதுகூட மக்கள் பெருக் கம் அச்சமூட்டும் அளவுக்கு இல்லை. 1947-ல் மக்கள் தொகை 34.2 கோடிதான்.

நமது பொருளாதார வளர்ச்சியோடு போட்டியிட்டு வாகை சூடி வளர்ந்துவரும் மக்கள் தொகையை எண்ணித் திகைப்பதா? அஞ்சித் தவிப்பதா?

அமெரிக்க அரசும், ஏனைய ஐரோப்பிய நாட்டாரும் நம்மை கையேந்திகளாகக் கருதிய காலத்தை, நீ வாழ்ந்தது போதுமென வழியனுப்பி வைத்து விட்டோம். என்றாலும் இந்தியாவின் வளர்ச்சி எதிர்பார்த்த அளவுக்கு இல்லையே! தீவிர முனைப்பும், திட்டமிட்ட செயலும் இல்லாமற் போயிருந்தால், அண்டை நாடுகளைப்போல் அரசியல் நிலைத்தன்மை ஆட்டங்கண்டிருந்தால், இந்தியாவும் ஒரு

சோமாலியாவாக, எதியோப்பியாவாக மக்களை காய்ந்த மிலாறுகளைப் போல் எலும்புக்குத் தோலாடை போர்த்தி பஞ்சத்தின் மஞ்சத்தில் அல்லவா படுக்க வைத்திருக்கும்! கண்களில் கந்தக அமிலத்தைக் கொட்டும் கடுமையான சோகத்திற்கல்லவா நாம் சொந்தக்காரர்களாகி இருப் போம்!

பண்டித நேருவுக்கிருந்த விஞ்ஞானப் பார்வை, நல் லெண்ணம் மிக்க சோவியத் நாட்டின் நட்புறவு, கடமை மறவாத நம்மவர்களின் நல்லுழைப்பு ஆகிய கூட்டுச் சக்தி யால் நாட்டில் முன்னேற்றம் முளைவிட்டது.

அன்னை இந்திராவின் ஆட்சிக் காலத்தில் நமது அணு விஞ்ஞான அறிவாற்றலை நிரூபித்து ஐம்பெரு நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கினோம்.

விண்கலன்களை செலுத்தி, ஆதிக்க சக்திகளுக்கு அகத்தில் அச்ச மேற்படச் செய்தோம்.

நாற்பத்தைந்தாண்டுகளில் மூன்று போர்களை சந்தித் தும் முடங்கிப் போகாமல் முன்னேறிக் கொண்டுதானிருக் கின்றோம்.

நமது முன்னேற்றம், கால்களில் பிணைக்கப்பட்ட சங்கிலியோடுதான் நடந்து கொண்டிருக்கிறது. அந்த சங்கிலிதான் மக்கள் பெருக்கம். அந்தத் தளையைத் தகர்க்க அரசு ஆயத்தப்பட்டது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே குடும்பநலத் திட்டத்தைச் சேர்ந்தது. 1952 ஆம் ஆண்டு குடும்பநலத் திட்டத்திற்காக ரூ. 10 கோடியை ஒதுக்கி, உலகிலேயே முதல் முதலாக இத்திட் டத்தை அரசே செயற்படுத்தி வழிகாட்டியாயிற்று.

பிறப்பு விகிதத்தை ஆயிரத்துக்கு இருபத்தொன்றுக்கும் கீழே கொண்டுவர வேண்டும். இது இலக்கு. கேரளத்தைத் தவிர வேறெந்த மாநிலமும் இதை சாதித்துக் காட்ட வில்லை.

இலத்தீன் அமெரிக்காவைப் போல் மும்மடங்கு மக்கள் தொகை கொண்ட இந்தியா இன்னும் வீங்கினால் நமது வாங்கும் சக்தி வயோதிக நிலையை அடைந்துவிடும்.

நமது மக்கள் பழமையின் கைதிகள், புராணங்களிலும் பொய்க் கதைகளிலும் நம்பிக்கையும் நாட்டமும் கொண்டவர்கள். எந்த புதுமைச் செய்தியும் இவர்களுடைய மனப் பூட்டை உடைத்து உள்ளே போவதென்பது எளிய செயலல்ல.

பூச்சிக்கொல்லி மருந்தையும், சமையல் வாயுவையும், ஏன் பாமாயிலைக் கூட தொடக்கத்தில் தொடப் பயந்தவர்கள் நாம். கட்டைக் கலப்பையையும், காளைமாட்டையும் நம்பியே வேளாண்மை செய்தவர்கள்.

நம்பிக்கையின்மை, துணிவின்மை, முனைப்பின்மை, இந்த மூன்று மூலப் பொருள்களின் கூட்டுப் பொருளாகவே நாம் விளங்குகின்றோம். மிகச் சிறிய இசுரேல் நாட்டைப் போல், பேரழிவுக்குப் பின் எழுந்து, நிமிர்ந்து வளர்ந்து வரும் ஜப்பானைப் போல், புதிய கொள்கையை ஏற்று வளர்ந்து வரும் சீனத்தைப் போல் நம் மக்களிடம் எழுச்சி எண்ணம் ஏற்படவில்லை.

புதுமை எதுவானாலும் ஏற்றுக் கொள்வதில் பொறுமை காட்டும் நம் மக்களிடம், குடும்பநலத் திட்டத்தைக் கொண்டு செல்வது போர்க்களத்திற்குச் செய்தியைக் கொண்டு செல்வதைப் போன்றதுதான்.

அச்சம், அவநம்பிக்கை, அறியாமை இவை முன்னேற்றத்தின் முட்டுக்கட்டைகள். இவைதான் நம்மக்கள் வழிபடும் மும்மூர்த்திகள். இவர்களிடம் மனமாற்றம் ஏற்படுத்தி குடும்பநலத் திட்டத்தை ஏற்கச் செய்ய அரசு எடுத்துக் கொண்ட முயற்சி அசாதாரணமானது. ஒரு காலகட்டத்தில் வெய்யிலில் உலர வைத்த விதை நெல்லை மழை வரக்

கண்டு வாரி எடுப்பதைப் போல் புயலாகி செயல் பட்டதால் ஒரு பக்கம் சாதனையும், மறுபக்கம் வேதனையும் வெறுப்பும் இத்திட்டத்தின் மீது மக்களுக்கு ஏற்பட்டது.

பத்து கோடியுடன் பயணத்தைத் தொடங்கிய குடும்ப நலத் திட்டம், இன்று ஆறாயிரங் கோடியை அள்ளிக் கொண்டிருக்கிறது.

நமது மக்களிடம் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்க வேண்டும். ஏன், எதற்கு, எப்படி என்ற வினாக் கணைகளை தொடுக்கக் கற்றுக்கொடுக்காமல் வீரம் பேசிய நமது மக்கள் வீணாக்கப்பட்டு விட்டார்கள். நமது மத போதகர்களும், புராண இதிகாசங்களும் மக்களிடம் கண்மூடிப் பழக்கங் களையும், பேராசைகளையும் வளர்த்து விட்டன. தந்தை பெரியார் ஒருவரைத் தவிர மக்களைச் சிந்திக்கத் தூண்டிய வர்கள் வேறு யாருமல்ல. தமிழகத்தைப் பொறுத்த மட்டில் தந்தை பெரியாரைத் தவிர இந்தப் பெருமையில் பங்கேற் கும் தகுதி மற்றவர்களுக்கு இல்லை. குடும்பநலத் திட் டத்தை மக்களிடம் எடுத்துச் சென்ற முதல் பொதுநலத் தொண்டர் அவர்தான். ''பெண்கள் விடுதலையடையவும், சுயேச்சை பெறவும் கர்ப்பத்தடை அவசியமென்று நாம் கூறு கின்றோம்'' என்றவர்தான் பெரியார். மக்களைப் புரிந்து கொண்டு, அவர்களின் மேம்பாட்டுக்காக உழைத்த, சரி யெனப் பட்டதை அஞ்சாமல் உரைத்த பெரியாரின் சொற் களை நெஞ்சுள் நிறுத்தி செயல் பட்டால்தான் தமிழ்நாடு உருப்படும்.

நமது மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மனமாற்றம் ஏற்பட புரிந்து கொள்ளும் திறன் வேண்டும். புரிந்து கொள்ளும் திறன்பெற கல்வி வேண்டும். கல்வியை ஆண்கள் மட்டில் பெற்றால் போதாது, பெண் களும் பெறவேண்டும்.

எங்கே பெண்கள் கல்லாதவர்களாக உள்ளார்களோ அங்கே பிறப்பு விகிதமும், குழந்தை இறப்பு விகிதமும்

கூடுதலாக உள்ளது. தமிழகத்தில் தற்போது கற்போர் எண்ணிக்கை கூடியுள்ளது. பெண்களும் கல்வியில் நாட்டம் செலுத்தத் தொடங்கி விட்டதால், கேரளத்திற்கு அடுத்துத் தமிழகத்திலும் பிறப்பு கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

அளவான குடும்பம் அவசியமென்பதை மேல்மட்ட, நடுத்தர மக்கள் உளப்பூர்வமாக உணர்ந்து ஏற்று கடைப் பிடிக்கத் தொடங்கியிருந்தாலும், அடித்தள மக்களிடம் தேவையான விழிப்புணர்வு ஏற்பட வில்லை.

நெருக்குதல்கள், நிதியுதவி இவை குடும்பநலத் திட்ட விளம்பர உத்திகளைத் தோற்கடித்து விட்டதோ என்று ஐயுற வேண்டியுள்ளது. இத்திட்டத்தை ஏற்றுக் கொள்வது தங்களுக்காக என்று எண்ணாததால் அவர்களின் எதிர் பார்ப்பும், ஐயமும் அதிகமாகி விட்டன.

காதல் என்ற சொல்கூட கட்டிலறைக்கு வெளியே பேசக் கூடாத சொல்லாக இருந்த நிலை தற்போதுதான் மாறியுள்ளது. ஆணுறை பயன் குறித்தும் கருத்தடை மாத்திரையை உபயோகிப்பது குறித்தும் பாமர மக்களிடம் எடுத்துரைப்பதென்பதும், கேட்கச் செய்து உபயோகப் படுத்த ஊக்குவிப்பதென்பதும் எளிய செயலல்ல. அவரைக் காயை பறிப்பதையே பாபமென்பவர்களிடம் ஆட்டுக்கறி சமையலைப் பற்றிப் பேசுவதாக இருந்தது குடும்பநலத் திட்டக்களப்பணி.

"காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?"

என்று 1938-ஆம் ஆண்டுக்கு முன்னரே வினவியவர் பாவேந்தர். கருப்பாதையைச் சாத்தக் கதவு கண்டறியப்படாத காலகட்டத்திலேயே குழந்தைகள் நலனிலும், குடும்ப நலனிலும் அக்கறை காட்டியவர் அவர்.

"சாதலுக்கோ பிள்ளை? தவிப்பதற்கோ பிள்ளை?
சந்தான முறைநன்று; தவிர்க்கும் முறை தீதோ?"

என்று வெகுண்டு வினா எழுப்பினார் புரட்சிக் கவிஞர்.

எந்த முற்போக்கான கருத்தும் மக்களிடம் சென்று சேர்ந்துவிடாமல் தடுப்பதில் குறியாக இருக்கும் பிற்போக்கு சக்திகளின் எதிர்ப்புக் குரலைக் கேட்டுப் பொறுக்காமல் அவர் நெஞ்சம் கனலாகித் தகித்த போதுதான்...

"காதலுத்துக் கண்ணலுத்துக் கைகள் அலுத்துக்
கருத்தலுத்துப் போனோமே! கடைத்தேற மக்கள்
ஓதலுக் கெல்லாம் மறுப்பா? என்னருமை நாடே,
உணர்வுகொள் உள்ளத்தில்"

என்று வேதனையை வெளிப்படுத்தி; வேண்டுகோள் விடுத்து மக்களை வெளிச்சத்திற்கு அழைத்தார் பாவேந்தர்.

கவிஞனென்றால் காட்டையும் மேட்டையும் காதலையும் மட்டுமே பாடவேண்டுமென்ற தவறான எண்ணம் வேர்விட்டிருந்தகாலத்தில் மக்களின் அன்றாட பிரச்சினைக்கான தீர்வை பாட்டாலே பறைசாற்றிய முதற்கவிஞன், முற்போக்குக் கவிஞன் பாரதிதாசன்தான்.

பாவேந்தரின் வேட்கை வீண்போகவில்லை. கருவறைக்குக் கதவு கண்டறியப்பட்டது.

கருப்பாதையை அடைக்க மருத்துவ விஞ்ஞானம், கருவிகளைக் கண்டு பிடித்தது. உறவு கொண்டாலும் கருத்தரிக்கும் ஆண் பெண் உயிரணுக்கள் ஒன்று சேர முடியாத தடுப்புச் சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பிள்ளைப்பேற்றைத் தள்ளிப்போடவும், தடை செய்யவும் அறுவை மருத்துவம்; ஆணுறை; கருத்தடை மாத்திரைகள், கருத்தடை வளையம் எனப் பல வழி முறைகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. தெளிந்த அறிவார்ந்த மக்கள் இவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முன்வந்துள்ளார்கள்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் பிள்ளைப்பேற்றைத் தள்ளிப்போடவும், ஆண்களின் உடற்பசியைத் தீர்த்துக் கொள்ளவும் பரத்தைத் தொடர்பு உதவியது. ஆன்மீகத்தைப்பற்றி பெருமைப் பட்டுக்கொள்ளும் தமிழகத்தில் பரத்தையர் தொடர்பைப்பற்றிப் பேசாத சங்க இலக்கியம் குறைவு. ஆண்கள் ஒழுக்கங்கெட்டு நடந்ததற்கு இலக்கிய அங்கீகாரமே உண்டு. ஆணாதிக்க அவலங்களுக்கு ஆண்டவன் கதை முதல்,அகத்துறை இலக்கியங்கள்வரைஉடந்தை

நமது முன்னோர் உடலியல் மருத்துவத்தில் தேர்ந்தவர்களாக இருந்துள்ளனர். கருத்தரிக்கும் காலத்தைச் சரியாகக் கணக்கிட்டிருந்தார்கள். மக்கள் பெருக்கம் இல்லாத காலத்தில், பிள்ளை பெற வேண்டியது தலையாய கடமையாகவே இருந்தது. எனவே கருக்கொள்ளும் காலத்தில் தலைவன் மனைவியைப் பிரிந்திருக்கக் கூடாது. இங்கே பிரிவு என்பது பரத்தையிடம் செல்வதைக் குறிக்கிறது. இறையனார் அகப்பொருள் சூத்திரம் கருவுறும் காலத்தைக் கணக்கிட்டுக் கூறுகிறது.

''பரத் தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பா டீரறு நாளும்''

என்னும் சூத்திரத்தின் மூலம் மாத விலக்கான முதல் பன்னிரண்டு நாட்களும் கருத்தரிக்கும் காலம் என்பதை அறிய முடிகிறது.

பூப்புக் காலத்தில் புணர்ச்சி கூடாதென்பது வழிவழியாக அறிந்த உண்மை. அதனால்தான் அதற்கு மாத விலக்கு என்றே பெயர் சூட்டப்பட்டது. அந்தக் காலத்தில் உடலுறவு கொண்டால் என்னவாகும் என்பதையும் இறையனார் அகப்பொருள் கூறுகிறது.

''பூப்புமுதன் முக்காட் புணர வுணரின்
யாப்புறு மரபின் முனிவரும் அமரரும்
யாத்த கரண மழியுமென்ப''

என்பது அகப்பொருள்.

பூப்புப் புறப்பட்ட ஞான்று நின்ற கரு வயிற்றிலே அழியும்; இரண்டாம் நாளின் நின்ற கரு வயிற்றிலே சாம்; மூன்றாம் நாள் நிற்குங் கருக் குறு வாழ்க்கைத்தாம்! வாழினும் திருவின்றாம், அதனால் கூடப்படாது என்பது சூத்திரத்திற்கான விளக்கம்.

இயற்கை வழியோ, செயற்கை முறையோ, ஏதேனும் ஒன்றை கடைப்பிடித்து பிறப்பைக் கட்டுப்படுத்த வேண்டியதே இன்றைய தேவை.

பிள்ளைப்பேறு என்பது கடவுள் செயல் என்ற தவறான நம்பிக்கை தாய்மார்களிடம் தழைத்துக் கிளைத்துக் கிடக்கிறது. இந்த அறியாமை என்னும் அந்தகாரத்திலிருந்து அவர்களை உண்மை வெளிச்சத்திற்குக் கொண்டு வர வேண்டியது கற்றார் கடமை.

பிள்ளை பிறப்பது நமது கையிலா உள்ளதெனக் கேட்கும் பாமரத்தனத்தை வீழ்த்தும் விஞ்ஞான வித்தை வீதிக்கு வந்து வெகு நாட்களாகி விட்டது. பிறப்பைத் தடுக்கும் முறை பெண்களின் கரங்களுக்கே வந்து விட்டது. கருத்தடை மாத்திரையைப் பெண்களின் கையில் பொருத்தி கருவுறுவதைத் தடுக்கவும், பிள்ளைப் பேறு தேவைப்பட்டால் அவற்றை அகற்றி கருக்கொள்ளவும் ஏதுவான 'நார்ப்ளான்ட்' நடைமுறையில் உள்ளது. இது கண்டு பிடிக்கப்பட்டு பத்தாண்டுகளாகியும்கூட நமது நாட்டில் பெரும்பான்மை மக்கள் அறியாத செய்தியாக, கடைப்பிடிக்காத முறையாக உள்ளது. உலகில் அறுபது நாடுகளில் இத்திட்டம் நடைமுறையில் உள்ளது.

தடை வழிகள் நடைமுறையில் ஏராளமாக இருக்கும் போது, எதையும் ஏற்காமல், விதியெனக் கருதி வீட்டிலும், நாட்டிலும் இடநெருக்கடியை ஏற்படுத்துவது இழுக்கல்லவா? இந்த நிலை நீடிப்பது கல்லாமையாலும் கட்டுப்பாடின்மையாலுந்தானே? இந்தத் திட்டத்தைப் பொறுத்த

வரை பெண்களிடம் ஏற்பட்டுள்ள மனமாற்றம், தெளிவு, திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் விருப்பம் ஆண்களிடம் ஏற்படாதது பரிதாபம். பேறு கால இன்னல்களை ஆண்கள் அனுபவிக்காத்துதான் இதற்கு முழு முதற்காரணமாக இருக்க முடியும்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடும் ஈசன்,
மண்ணுக்குள்ளே சிலமூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்"

என்றானே பாரதி அது எழுத்துப் பிழை இல்லாத உண்மை. குடும்ப நலத்திட்டத்தை ஏற்க விரும்பும் பெண்கள் சிலரை கணவனும், மாமியும் தடுப்பதை நினைத்துத்தான் பாரதி இப்படிப் பாடினானோ?

மாந்தன் தனக்கு இசைவான எண்ணப்படியே தனக்கு பயன்படும் வகையில் கடவுளையும், கடவுட் கருத்தையும் படைத்துக் கொண்டிருக்கின்றான். அவன் நம்பும் கடவுளின் பெயரால் கூட உன்னத கருத்தை அவன் ஒப்புக் கொள்வதில்லை. சந்திக்குச் சந்தி கோயிலைக் கட்டியிருக்கும் நமது நாட்டில் ஐம்பெருங் கொடுமைகள் (பஞ்சமாபாதகங்கள்) அன்றாடம் நடந்து கொண்டுதானே இருக்கிறது?

எதற்கேனும் அஞ்சுபவனாக இருந்தால்தான் மனிதனை நெறிப்படுத்த முடியுமென்பதற்காகவே கடவுளும் மதங்களும் ஏற்படுத்தப் பட்டிருக்க வேண்டும். பாதகங்களைச் செய்துவிட்டு பக்திமானாக பவனி வரும்போது கருத்தடுப்பை மட்டில் கடவுளுக்கெதிரானதாகக் கருதத் தேவையில்லையே!

பேணி வளர்க்க முடியாதவர்களைப் பிள்ளை பெற்றுக் கொள்ளும்படி எந்தக் கடவுளும் அவர்களுக்குக் கட்டளையிடவில்லை.

குடும்ப நலத்திட்டத்தை ஏற்பது கடவுளுக்கெதிரான செயல் என்பது அறியாமை நிலத்தில், ஆதிக்கப் பண்ணையார்களால் பயிரிடப்படும் அபின். அதனை மக்கள் அழித்தொழிக்காமல், நம்புவதும், நடைமுறைப்படுத்துவதும், குடும்ப நலனையும் குழந்தை நலனையும் ஏமாற்றுக்காரர்களிடம் இரவல் கொடுப்பதற் கொப்பாகும்.

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்பது வள்ளுவர் வாக்கு. திரும்பத் திரும்பக் கூறுவதனால் அந்தக் கருத்தைத் தீண்ட மாட்டோம் என்ற தீய மனப்பான்மை சிலரிடம் உண்டு. ஐயத்தின் தூண்டுதல், அறியாமையின் வேண்டுதல் இவையே இந்த மனப்பான்மையின் சேடியும், செவிலித் தாயுமாகும்.

நல்லது எது, தீயது எது என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கும் சிந்தனை வளத்தைப் பெருக்குவோம். உற்பத்திதான் உன்னதமான கருத்தடைக் கருவி என்பதையும் நெஞ்சுள் நிறுத்திச் செயல்படுவோம்.

குடும்பச்சுமை; பொறுப்புச்சுமை; சோகச்சுமை இவற்றோடு அடிமடியில் பிள்ளை கனத்தையும் சுமக்கும் பெண்கள் இவற்றிலிருந்து விடுதலை பெற ஆண்பிள்ளை ஆசை, கடவுள் செயல், மாமியார் விருப்பம், கணவனின் கோபம் என்ற நான்கு சுவர் சிறையைத் தகர்த்து வெளிவர வேண்டும்.

''தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியு''மென்ற பழமொழியை வாழவைத்துக் கொண்டிருக்கும் ஆண்கள், தமது துணைவியின் நலனில் உண்மையான அக்கறை காட்டவேண்டும். பள்ளியறை பரிவோடு நின்று அன்றாட வாழ்க்கையில் பெண்களை அடிமைகளாக நடத்

துவது நாகரிகமற்ற செயலாகும். ஒவ்வொரு பேறுகாலமும் பெண்களுக்கு மறு பிறவி போன்றது. எனவே நல்ல கணவன், மனைவியிடம் உள்ளன்புடையவன் தன் துணைவியை சுமைதாங்கியாக்காமல், சோறு சமைப்பவளாக மட்டுமன்றி சுகமளிப்பவளாகவும் கருதி கனிவுடன் நடத்த வேண்டும்.

குடும்ப நலத்திட்டம் தனிநபர் , நலனில் தொடங்கி குடும்பத்தின் ஏற்றத்திற்கான ஏணியாக விளங்கி, நாட்டு நலனைக் காக்கும் ஊட்டமாக, உதவியாக மலர்கிறது.

பெண்களின் உடல் நலன், குடும்பத்தின் பொருளாதாரம், நாட்டின் மேம்பாடு இம்மூன்றும் குடும்ப நலத்திட்டத்தின் அடிப்படைநோக்கங்கள். இதில் மாறுபடுவதற்கோ, வேறுபடுவதற்கோ சரியான காரணத்தை யாரும் காட்ட முடியாது.

நமது வலிமையே நாட்டின் வலிமை!
வீட்டின் வளப்பமே நாட்டின் வளப்பம்!

பிறப்பதைத் தடுப்போம்!
பிறந்ததை வளர்ப்போம்!

# அறுபடை-நோய்கள் அறிமுகம்

நோய்நாடி நோய்முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். —குறள்

நோய், பாயும் கையுமாக ஆள்பிடிக்க அலையும்போது தூய்மைக்கேடு அதற்குத் தோழனாகிறது.

அறியாமை ஆரத்தி எடுக்கிறது.

ஊட்டச் சத்துக் குறைவு உறவாகி "உள்ளே வா!" என்கிறது,

வாக்களித்தபின் வரவேற்பளிக்க வேண்டியதும் வாய் பொத்தி நிற்க வேண்டியதும் நமது கடமையாகி விடுவது போல், நோயின் ஆட்சிக்கு நாம் அடிமைப்பட்டு அல்லலுற நேரிடுகிறது.

நோய்!
வருமுன் காப்பது நல்லது!
வந்தபின் தீர்ப்பது அவசியம்!
வளரவிடுவதோ தீது!

வறுமையைப் பயன்படுத்தி யார்யாரோ வளர்ந்து கொண்டிருந்தாலும், நோயைப் போல் வறுமையைத் தனக்கு இணக்கமாக்கிக் கொண்டவர் எவருமில்லை. நமது பொறுப்பின்மையின் நட்பு நோய்க்குக் கிடைத்துவிட்டதால் அது கொடி கட்டி ஆளும். மடிகட்டி ஆடும்.

மாந்தனுடைய உடலில் குருதியினூடே இயற்கை, நோயெதிர்ப்பாற்றலைச் சேமித்துக் கொடுத்திருக்கிறது. அந்த ஆற்றல் பலவீனப் படும்போதுதான் மாந்தனுக்கு மருத்துவம் தேவைப்படுகிறது.

நமது குருதியிலுள்ள வெள்ளணுக்கள் காசுமீர எல்லைக் காவற் படையைப் போல் எப்போதும் விழிப்பாக இருந்து நோய்க்கிருமிகள் நுழையும்போது எதிர்த்துப் போரிடுகின்றன. இந்தப் போராட்டத்தின் வெளிப்பாடு தான் காய்ச்சல்!

பித்தக்காய்ச்சலையும் (டைபாயிடு) குளிர் காய்ச்சலையும் (மலேரியா) போராட்டத்தின் அறிகுறியாக எண்ணி ஏமாறக்கூடாது.

வேப்பிலையாலும், விபூதியாலும் நோயை ஓட்டுவதாகக் கூறுவது ஏமாற்று வேலை. அதை நம்புவது, மூடத்தனத்தின் முன் நமது அறிவை முழங்காலிடச் செய்வதற்கொப்பாகும்.

அச்சமென்பதே மாந்தரை அலைக்கழிக்கும் நோய்களின் தளபதி. எதையும் எதிர்கொள்ளும் திண்மையும், எதிர்த்துப் போராடும் ஆற்றலும் அண்டிவரும் நோயை நொண்டியாக்கி விரட்டி விடும். நோய்க்குரிய மருந்தும் மனத்திடமும் இணைந்தால் நுழைந்த நோய் விரைந்து வெளியேறிவிடும். நம்பிக்கையின்மையும், பயமும் நோயுடன் கூட்டணி வைத்துக் கொள்ளும்போதுதான் மருந்துகூட சில நேரங்களில் தோற்றுப் போய்விடுகிறது.

வெற்று நம்பிக்கையினாலேயே எல்லா நோயையும் விரட்டி விடலாமென எண்ணக் கூடாது. நம்பிக்கை நோயின் விரைந்த முன்னேற்றத்தை முடக்குவதற்குக் கூடுதல் சக்தியாக இருக்குமென்பதே உண்மை நிலை.

நெஞ்சுரம்; உடலின் நோய் எதிர்ப்பாற்றல்; இயற்கை உணவின் மூலம் கிடைக்கும் நோய் மாற்றும் சக்தி; இவற்றால் மாந்தரைப் பற்றிய நோய் விலகினால், அதை மந்திரத்தால் மகானால், மகேசனால் தீர்க்கப்பட்டதாக பாமரர் நம்புகின்றனர். இந்த வகை நம்பிக்கையால் மருத்துவரைச் சந்திப்பதைத் தவிர்த்து பூசாரியையும், பூசையையும் நாடி நோயை வளர விட்டு, அதன் இறுக்கமான பிடியில் சிக்கிச் சீரழிகின்றார்கள். இந்தப் போக்கு தற்போது, தேய்பிறையாகி இருப்பது ஆறுதலான போக்கு!

நமது உடலில் நோயின் கால்கோள் விழாவை நமக்குத் தெரிவிப்பது காய்ச்சல். எனவே காய்ச்சல் கண்டவுடன் நல்ல மருத்துவரை நாடிச் செல்வதே தற்காப்பு நடவடிக்கையாகும். இதைத் தவிர்ப்பதும், தள்ளிப் போடுவதும் வேண்டாத விளைவுகளை விரும்பி அழைப்பதாகி விடும்.

உலகிலேயே இந்தியத் திருநாட்டில்தான் குழந்தைகள் இறப்பு அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டில் மட்டில் சற்றேறக் குறைய பதின்மூன்று லட்சம் குழந்தைகள் ஒரு ஆண்டில் பிறக்கின்றன. அதே காலத்தில் நமது கவனக் குறைவால் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை தொண்ணூறாயிரம். எனவே தரையைத் தொட்ட மனித தளிர்களை; குழந்தைச் செல்வங்களைக் கொள்ளையடிக்கும் நோய்களைப் பற்றிப் பொதுவாக அறிந்து வைத்திருக்க வேண்டியது அன்னையர்களுக்கு மட்டுமன்றி அனைவருக்குமே அவசியம்.

நோயைத் தீர்ப்பதைவிட, அது வரும்முன் காத்தல் தான் சிறந்ததென்ற மருத்துவ விஞ்ஞானியின் அறிவுரையை நெஞ்சுள் நிறுத்தி பிஞ்சு மாந்தரைக் காப்பதே சிறப்பு.

குழந்தைகளுக்குக் குறித்த காலத்தில் போட வேண்டிய தடுப்பூசிகளைப் போடத் தவறி, கொடுக்க வேண்டிய

சொட்டு மருந்தை கொடுக்காமல்; அவர்களை ஊனப்பட விட்டு உள்ளம் நோவதும், ஆண்டுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் செலவிட்டு மருத்துவம் பார்த்தும் பயனற்று பரிதவிப்பதும் த்விர்க்கப்பட வேண்டும்.

பிறந்த குழந்தைக்குப் புத்தாடை அணிவிப்பதை விட, பொன்னணியைப் பூட்டிப் பார்ப்பதைவிட, நோய்த் தடுப் பூசியைக் காலத்தில் போடுவதே நாம் குழந்தையிடம் கொண்டுள்ள பாசத்திற்கும், உணர்ந்த பொறுப்புக்கும் உகந்த செயலாகும்.

பிறந்த குழந்தை எதுவும் புத்தாடையாலும், பொன் னணிகளாலும் பூரித்துப் போவதில்லை. அந்த அழகைக் கூட பெற்றோரும் மற்றவர்களுமே அனுபவிக்கின்றோம். குழந்தைக்காக நாம் செய்வதேதேனும் உண்டென்றால் அது குழந்தைக்கு நோய்த் தடுப்பூசி போடுவதாகத்தான் இருக்க முடியும்.

குழந்தையைப் பார்க்கச் செல்லும் உற்றார் உறவின ரும் கூட நலன் கேட்கும்போது ''குழந்தைக்கு தடுப்பூசி போடப்பட்டதா? சொட்டு மருந்து கொடுத்தாயிற்றா? என்னென்ன நோய்களுக்குத் தடுப்பூசி போட்டீர்கள்?'' எனக் கேட்பது உண்மையிலேயே குழந்தை நலனுக்குதவும். அந்த வினா அறியாமலும், அறிந்தும் அயர்ந்து கிடந்த பெற்றோருக்கு கடமையை நினைவூட்டி ஆட்படுத்த உதவும். நேரத்தில் நினைவூட்டிய பெருமை உங்களுக்குக் கிட்டும்.

விந்து விளைச்சல்,
விடியல் தாமரை
பந்தப் பதிப்பில்
வந்த தாமரை! குழந்தை!

இந்த அருமையான புத்தகத்தைப் படிக்க பாதுகாக்கத் தவறி, புத்தகத்தை நோய்க் கரையானுக்கும், நொடியச்

செய்யும் பாச்சைகளுக்கும் இரையாக்குவது எத்தனை கொடுமை? கொடியே பூவைக் கொய்வது போன்றதல்லவா அது?

இதயமே இரத்தத்தை அசுத்தப்படுத்துமானால் உயிர் மூச்சு ஊசலாடத்தானே செய்யும்?

கதிரவனுக்கே கண்நோய் என்றால் தாசினிக்கு வெளிச் சத்தை விதைக்கக் கோளுண்டா?

எத்தனையோ சாதனைகளுக்கும், விஞ்ஞான விந்தை களுக்கும் பொறுப்பேற்றுப் பிறந்திருக்கும் குழந்தைகளைக் கருக விடாமல்; உடல் உருக விடாமல்; அங்கங்களுக்குப் பங்கம் ஏற்படுத்தாமல், வளர்த்துக் காத்து சமுதாயத் திற்குக் கொடுக்க வேண்டியது பெற்றோர் கடன்.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எரிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.''

என்ற புறநானூற்று பொன்முடியாரின் ஈன்று புறந்தருத லின் பொருள், குழந்தையை நோய் நொடிகளிலிருந்து பாது காத்து, வளர்த்து சமூகத்திற்கும் நாட்டிற்கும் பணியாற்றக் கொடுத்தல் என்பதுதான். கருவுயிர்த்து விட்டாலே ஒரு தாயின் கடமை முடிந்து விட்டதாக நினைக்கக் கூடாது.

குழந்தைகளின் உயிர் குடிக்கும் நோய்கள், உடலை ஊனப்படுத்தும் நோய்கள், பார்வையைப் பறித்துக்கொள் ளும் நோய், வளத்தையும், வளர்ச்சியையும் பாதிக்கும் நோய்கள் என ஆறு கொடிய நோய்களை அடையாளம் காட்டி, அவற்றைத் தடுக்க வழி முறைகளையும் கண்டு பிடித்திருக்கிறது மருத்துவ விஞ்ஞானம்.

மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசு, குழந்தைகளை நோய்களிலிருந்து காப்பதற்கான வசதிகளை செய்து கொடுத்திருக்கிறது. பொது மருத்துவ மனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கட்டணமின்றித் தடுப்பூசிகள் போடப்படுகின்றன.

நோய் வரும்முன் காக்க வேண்டுமென்றால், அதன் வகை; வரும் வழிகள்; வரவேற்கும் சூழ்நிலைகள் ஆகியவற்றை அறிந்து வைத்திருந்தால்தானே வரும்முன் காக்கவோ, மீறி வந்தாலும் தீர்க்கவோ முடியும்?

மகப்பேறு, பெண்களுக்கு மறுபிறவி என்பார்கள். கருவுற்றது தெரிந்த நாள் தொட்டு, கருவுயிர்க்கும் நாள் வரை சுணக்கமின்றி மருத்துவ ஆலோசனை பெற்று அதன் படி நடக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் தன்னையும், பிறக்கப் போகும் குழந்தையையும் காப்பாற்ற முடியும், 'வில்வாத ஜன்னி' என்னும் நோய் குழந்தையை மட்டுமன்றித் தாயையும் பாதிக்கக் கூடியது. எனவே கருதரித்த பெண் இந்த நோயிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்.

குழந்தையைத் தாக்கும் நோய்கள் என்னென்ன, அவற்றின் தன்மை, தாக்கம் ஆகியவற்றை ஆய்வோம்.

## டெட்டனஸ்

டெட்டனஸ் என்னும் வில்வாத ஜன்னி; இசிவு நோய், இரணவாத ஜன்னி என்னும் மாற்றுப் பெயருடனும் மக்களுக்கு அறிமுகமாகியுள்ளது. இந்நோய் குழந்தை பிறந்து ஏழு முதல் பத்து நாட்களுக்குள் ஏற்படும். இது எப்படி ஏற்படு கிறது? காரணம் என்ன? கருவி எது?

குழந்தைக்கும் அன்னைக்கும் பந்த பாலமாக, கருப்பையில் குழந்தைக்கு உணவுப் பாதையாக இருப்பது

தொப்புள்கொடி. இதுதான் வில்வாத ஜன்னிக் கிருமி களுக்கு கைபர் கனவாய்.

உண்டு முடிந்தபின் உபயோகமற்றதாகிவிடும் இலை யைப்போல், கருவுயிர்த்தபின் தொப்புள் கொடியும் தேவை யற்றதாகி விடுகிறது. நகத்தை நறுக்குவதுபோல் தொப்புள் கொடியும் நறுக்கி எறியப்படும். அப்படி நறுக்கப் பயன் படுத்தும் கத்தி சுத்தமாக இருக்க வேண்டும். துருப்பிடித் திருந்தால் அந்தத் துருவே இந்த நோயை அழைத்து அனுப்பிவைக்கும் முகவராகி விடும். ஐந்து வயதிற்குட் பட்ட குழந்தைக்குக் காதில் சீழ்வடிந்தால் நோய் நுழைந்து விட்டது என்று பொருள்.

வறுமையில் வாடும் மக்களுக்கு அடிப்படை வசதியே இல்லாமல்; வாழ்க்கையைச் சிலுவையாகச் சுமந்துகொண் டிருப்பவர்களுக்கே காயத்திற்குப் பயன்படுத்தும் கைகண்ட மருந்து சுண்ணாம்பு; சாணம்; சாம்பல்; செங்கல்தூள் மற்றும் மணல் ஆகியவையே! பெரியவர்களின் உடலில் இதன் எதிர் விளைவுகளைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றல் இருப்பதால் பாதிப்பு அதிகமாக இருப்பதில்லை. ஆனால் பாதிப்பே இருக்காதென இருமாந்துவிடக் கூடாது. பெரிய வர்களையும் இந்நோய் தாக்கும். இவை பிறந்த குழந்தை யின் தொப்புள் கொடிப் புண்ணுக்கு மருந்தாகப் பயன் படுத்தப்படுமானால் டெட்டனஸ் சத்திரத்து விருந்தாளி யைப்போல் எளிதாக வந்து குழந்தையின் உடலில் குடி யேறி தன் ஆதிக்கத்தை ஆரம்பித்துவிடும்.

ஒரு குழந்தையை [டெட்டனஸ்] இசிவு நோய்பற்றிக் கொள்ளுமானால், ஆட்பட்ட குழந்தையால் தாய்ப்பாலைச் சப்பிச் சாப்பிட முடியாது. உடலும் முகமும் மற்ற தசை களும் நனைந்து காய்ந்த மரப்பட்டைகளைப்போல் விறைத்து இழுத்து நிற்கும். இதனால் தாடை இறுகி வாயசைவு பாதிக்கப்பட்டு குழந்தையால் பால் குடிக்க முடி யாமற்போய் விடுகிறது.

பால் குடிக்காத குழந்தை எத்தனை நாட்களுக்கு உயிர் வாழ முடியும்? ஊட்டம் குறைய; உடல் வாட; மெல்ல மெல்ல இரண ஜன்னி குழந்தையின் உயிரை தனக்கு இரையாக்கிக் கொள்ளும்.

வாழப்பிறந்த குழந்தையைத் தடுப்பூசி போடத் தவறியதால் சாவூருக்கு வழியனுப்பி வைத்து, பெற்றோர் தங்கள் இதயத்திலும் கண்களிலும் காயத்தை ஏற்படுத்திக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

குழந்தையைத் தாக்கி உலுக்கும் கொடிய நோய் கக்குவான் இருமல். இதன் பெயரை உச்சரிக்கக்கூட மக்கள் தயங்குமளவுக்கு அச்சுறுத்தும் கொடூரத்தன்மை கொண்ட நோய் இது. புராணத்தில் மதன காம ராஜனாக சுட்டப்படும் கண்ணனைப் போல் இதற்கும் மாற்றுப் பெயர்கள் பல. பேர் சொல்லா இருமல்; முப்பிறை இருமல்; குத்திருமல், நூறுநாள் இருமல் என்றெல்லாம் இந்நோயின் ஆயுட்கால அளவையும், தாக்கும் தன்மையையும் காரணமாகக் கொண்டு சூட்டப்பட்ட புனைப் பெயர்கள் இவை.

முப்பிறை இருமல், நூறுநாள் இருமல் என்பவை கக்குவான் இருமல் நீடிக்கும் கால அளவு காரணப் பெயர்கள். குத்திருமல் என்பதோ அதன் தாக்கும் முறையையும் வலிமையையும் குறிப்பதாகும். பெயர் சொல்லாததற்குக் காரணம் அச்சம் என்பதை மீண்டும் விளக்கி அச்சுறுத்த வேண்டாமல்லவா?

மேற்குறிப்பிட்ட காரணப் பெயரிலிருந்தே இந்நோயின் உறவும் வரவும் எவ்வளவு மோசமானது என்பதை உணரலாம். இந்த நோய் குழந்தையைப்பற்றினால் என்ன பாடு படுத்தும், குழந்தை எவ்வளவு இன்னலுக்கு ஆளாகும் என்பதைச் சிந்தித்தால் குலை நடுங்கும். இந்நோய் குழந்தையைத் தாக்குவதிலிருந்து காத்திட நம்மையறியாமலேயே நெஞ்சம் உந்தித் தள்ளும்.

இந்நோய் பாதிக்கப்பட்ட குழந்தையிடமிருந்து மற்ற குழந்தைக்குத் தொற்றிக் கொள்கிறது. நோயாளிக் குழந்தை இருமித் துப்பும் சளியிலிருந்து நோய்க் கிருமிகள் காற்றின் துணை கொண்டு மற்ற குழந்தைகளுக்குப் பரவுகிறது.

கக்குவான் இருமல் கண்ட குழந்தைகள் இருமித்துப்பும் சளியை மண்போட்டு மூடவேண்டும். கிருமி கொல்லிகளை (பெனாயில், பிளிச்சிங் பவுடர்) பயன் படுத்தினால் ஓரளவு இந்நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம்.

இந்த நோயின் அறிகுறி என்ன? இந்த வினாவுக்கு விடை காண்பது எளிது.

வாழ்க்கை வசதியுடையவர்கள் குடிசைப் பக்கம் வருகிறார்களென்றால் தேர்தல் வரப் போகிறது என்று அறிந்து கொள்கின்றோம். அதைப்போல் இருமல், மூக்கு ஒழுகல் மற்றும் மிதமான காய்ச்சல் இருந்தால் கக்குவான் வந்திருப்பதாகவோ, வரவிருப்பதாகவோ எடுத்துக்கொள்ளலாம்.

'முப்பிறை' என்னும் பட்டப் பெயர் பெற்ற இருமலல்லவா கக்குவான்? இது புதுப்பிறை நாளிலிருந்து முழுப் பிறை நாளுக்குட்பட்ட கால இடைவெளியில் தீவிரமடைந்து மூச்சுத் திணறல், இடைவெளிவிட்டுத் தொடர் இருமலென வளரும். இதனால் கண்கள் வீங்கும். கண்களில் இரத்தக் கசிவுகூட ஏற்படலாம். உச்சகட்டமாக வாந்தியும் ஏற்படும். இவ்வளவுதானா என்று ஆறுதலடைந்துவிடவேண்டாம். ''குதிரை கீழே தள்ளியது மட்டுமன்றிக் குழியும் பறித்த'' கதையாக நிமோனியா என்னும் நுரையீரல் அழற்சியும், கண் பார்வை இழப்பும், மூளை பாதிப்பும் முடிவாக மரணமும் கூட ஏற்படக் கூடும்.

பெற்றோர்கள் இந் நோயை இருமல்தானே என்று அலட்சியமாக அனுமதித்து வளரவிட்டு மழலைச் செல்வங்

களை மரணத்திற்கும், தாங்கமுடியாத தாக்குதல்களுக்கும் இரையாக—இலக்காக அனுமதிக்கக் கூடாது.

## டிப்தீரியா என்னும் தொண்டை அடைப்பான்

குழந்தையின் இனிய குரல் மாறி, பேசும்போது தொண்டை கரகரப்பு தெரியவந்தால், தலைவலியுடன் காய்ச்சல் ஏற்பட்டால், சரியாக உணவு உட்கொள்ள வில்லை என்றால் தோளில் 'தொண்டை அடைப்பான்' நோய் கை போட்டுவிட்டது என்று பொருள். குழந்தை சுறுசுறுப்பிழந்து விளையாட்டில் ஆர்வம் காட்டவில்லை என்றால், தோழமை கொண்ட நோய் உறவு உரிமை கொண்டாடி உட்கார்ந்து விட்டதென முடிவு செய்து கொள்ளலாம். கழுத்து சற்று வீங்கினால் நோய் குழந்தையின் நலனைக் கொள்ளையடிக்கத் தொடங்கிவிட்டதென்று புரிந்துகொள்ள வேண்டும்.

தொண்டை அடைப்பான் நோய்க் கிருமிகளும் காற்றின் மூலமே பரவுகின்றன. மாந்தரை வாழவைக்கும் காற்றை நோய்க்கிருமிகள் வாகனமாக்கிக் கொண்டு வலம் வருகின்றன.

காற்று மூலம் கட்டணமின்றிப் பயணித்து கட்டுடலை தாக்கித் தகர்க்கும் நோய்க் கிருமிகளோடு, நீர்வழி பரவும் கொள்ளை நோய்களும் உண்டு. காற்று,நீரோடு இவற்றின் பயணம் முடிந்து விடுவதில்லை, மனிதரையும் சில நோய்க் கிருமிகள் வாகனமாக்கிக் கொண்டு வழிப்பயணம் போவதும் அடுத்தவரைப் பற்றித் தாக்குவதும் அன்றாடநிகழ்ச்சி!

நோயாளிகளின் துப்பும் எச்சில், கசிவு, கழிவுகளை மண் போட்டு மூடாமல் விட்டுவிடுவதால், கிருமிகள் எளிதில் காற்றில் கலக்க நாமே வசதிசெய்து கொடுத்துவிடுகிறோம். இந்த வழியில் குழந்தைகளைத் தாக்கும் தொண்டை அடைப்பானும் பரவுகிறது.

தொண்டை அடைப்பான் முற்றுகிறதென்றால் தொண்டைக்குள் வெள்ளைநிறச் சவ்வு தோன்றும். இது மூச்சுக் குழலை அடைந்து பரவத் தொடங்கும். இதன் விளைவாகக் குழந்தை மூச்சுவிட முடியாமல் திணறும். நான்கு நாட்களுக்குப் பிறகு நோயின் வேகம் அதிகரிக்கும். ஆறு நாட்களுக்குள் குழந்தை கழுத்து வீங்கி அல்லல்படும்.

நாடு பிடிப்பதில் நாட்டங்கொண்ட பண்டைக் காலப் பேரரசர்களைப் போல், தொண்டையைப் பற்றிய நோய்க் கிருமிகள் தங்கள் ஆட்சிப் பரப்பை அதிகரித்து இதயத்தையும், நரம்பு மண்டலத்தையும் நச்சுத் தன்மையால் நாசப் படுத்தும். நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதால் கை கால்கள் துவண்டு போகின்றன.

இந்த நோயால் மரணம் என்பது குறைவாக இருந்தாலும், குழந்தையின் உடல் வளமும், மன நலனும் பாதிக்கப் பட்டு, அதன் எதிர்காலம் இருண்டு போகும் அபாயமுள்ளதை பெற்றோர் மறந்துவிடக் கூடாது.

முத்தடுப்பு ஊசியை முறையாகப் போட்டு தம் குழந்தைச் செல்வத்தைக் காக்க வேண்டியது பெற்றோர் கடமை.

## இளம்பிள்ளை வாதம்-[போலியோ]

''ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!''

என்று அறிவுரை கூறிய பாரதியும்;

''தமிழ்தமிழ் என்றுநீ ஆடு—பட்
டறிவின் உணர்வெல்லாம் பாடு!''

என்று ஆடிப்பாடச் சொன்ன பாவேந்தரும்,

''பட்டு ஆடை உடுத்தலாம்
பாட்டிக் கையைப் பிடிக்கலாம்
கொட்டு மேளம் கேட்டதும்
குடுகுடென்று ஓடலாம்''

என்ற அழ-வள்ளியப்பாவின் ஆசைக் கனவுகளும், பெற்றோர்களுக்கு உடன்பாடில்லாதவையா? பாரதியும், பாவேந்தரும் குழந்தைகளை ஆடிப் பாடவைத்துப் பார்க்க கொண்ட ஆசை நமக்கு மட்டில் இல்லாமற் போய் விடுமா?

கைவீசம்மா கைவீசு, கடைக்குப் போகலாம் கைவீசு என்று பாடாத வீடுண்டா?

காலம் பாடல்களை மறந்தாலும், மாற்றினாலும் தங்கள் குழந்தைகள் கைவீசி நடக்க வேண்டும். ஓடி ஆட வேண்டும் என்ற எண்ணம் மட்டில் நிரந்தரமானதல்லவா? இந்த எண்ணத்தின் எதிரிதான் போலியோ. இளம்பிள்ளை வாதநோய் குழந்தைகளை ஊனப்படுத்தும் கொடிய நோய். உங்கள் ஆசைக் கனவுகளை தகர்த்தெறியும் அதிசக்தி 'புல்டோசர்'. இதிலிருந்து குழந்தைகளை காக்க வேண்டியது பொறுப்புணர்ந்த பெற்றோரின் கடமை.

'போலியோ' என்று ஆங்கிலத்தால் அழைக்கப்படும் இந்நோய், இயற்கை தந்த கை, கால்களை வலுவிழக்கச் செய்து, குழந்தைகளின் ஆட்ட, ஓட்டங்களை அமுக்கி விடுகிறது, முடக்கி விடுகிறது. அசலுக்குப் பதில் போலிக் கால்களை பொருத்த வேண்டிய அவசியத்தையும், அவலத்தையும் ஏற்படுத்துகிறது.

இந்நோய் தூய்மைக் கேடடைந்த நீர், திறந்தவெளி விற்பனைப் பண்டங்கள், மற்றும் அசுத்தக் குடிநீர் ஆகியவற்றால்தான் பரப்பப் படுகிறது.

இளம்பிள்ளை வாதநோய் 'வைரஸ்' எனப்படும் அதிதீவிர நுண் கிருமிகளால் உண்டாக்கப் படுகிறது. பொதுவாக எல்லா நோய்களுக்குமுரிய தொடக்க அறிகுறியான

காய்ச்சல் இதற்கும் பொருந்தும். நோய்க் கிருமி குழந்தை யின் உடலில் நுழைந்து ஆட்கொண்ட ஐந்துமுதல் பதி நான்கு நாட்களுக்குப் பிறகே, நோய்க்குறி வெளிப்படும்.

நோய் பற்றிய முதல் மூன்று நாட்களுக்குக் குழந்தை காய்ச்சலால் அவதிப்படும். பின்னர் தலைவலி, சோர்வு, கழுத்து, முதுகு பிடிப்பைத் தொடர்ந்து தசைவலியும் ஏற் படும். நோய்முற்றி, முழுவிளைவும் ஏற்படும்போதுகுழந்தை நிரந்தரமாக ஊனப்பட்டு போகிறது. கால்கள் துவண்டு, கொடியில் தொங்கும் புடலங்காயாகிவிடும். வைரஸ் நோய்க்கிருமிகள் கடுமையான பாதிப்பை ஏற்படுத்த வல்லவையாகையால் சில நேரங்களில் குழந்தையின் மூளை யும் பாதிக்கப் படுவதுண்டு. அரிதாக ஆவியையும் பறித்து விடும் இந்நோய்.

இளம்பிள்ளை வாதநோய்க்கென ஒரு இலக்குண்டு. குழந்தையை ஊனப்படுத்தி விட்டால், அது மென்மேலும் தொல்லை தராமல், கடுமை காட்டாமல் ஓய்ந்துவிடும்.

இந்நோய் வரும்முன் காத்திட பெற்றோர் மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மிக எளிமையானவை, போலியோ சொட்டு மருந்தை குழந்தை பிறந்தவுடன் மருத்துவர் குறிப்பிடும் காலத்தில் தவறாது கொடுத்து வந்தாலே போதும். பெற்றோர் தம் குழந்தையின் நலன் பேணும் பொறுப்பை எந்த அளவுக்கு உணர்ந்து செயல் படுகிறார்கள் என்பதை முத்தடுப்பு ஊசி, போலியோ சொட்டு மருந்து மற்றும் பி. சி. ஜி. ஊசி முதலியவற்றை காலத்தில் போடுவதிலிருந்தே கண்டு கொள்ளலாம்.

போலியோ சொட்டு மருந்தை ஒருமுறை மட்டில் கொடுத்துவிட்டு மறந்துவிடுவதால் பயனில்லை. குழந்தைக் குச் சொட்டு மருந்தை முறையே ஆறாவது வாரமும் குறித்த நாளில் கொடுக்க வேண்டியது அவசியம். இதில் தவறும் தாய், தன் கடமையைச் செய்ய தவறி, குழந் தையை ஊனப்படுத்திய குற்றவாளியாகி விடுவார்.

சொட்டு மருந்தைக் குறுகிய இடைவெளியில் மூன்று முறை கொடுத்த பின், சிறிது நீண்ட இடைவெளி விட்டு பதினாறாவது மாதத்திலிருந்து, இருபத்து நான்காவது மாதத்திற்குள் ஒருமுறை கொடுக்க வேண்டும்.

தங்கள் குழந்தையின் நலனில் நாட்டமுடைய பெற்றோர் மேலே குறிப்பிட்டபடி காலத்தில் தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டால் கவிஞரேறு வாணிதாசன் குறிப்பிட்ட

"காயாம்பூ மேனிச் சிறுகுழவி தன்னிரண்டு
வள்ளிக் கிழங்கு மலரடியால் தாய்முகத்தைத்
தள்ளுவதும், தள்ளிச் சிரிப்பதுவும் அன்பேயாம்."

என்ற அன்பில் திளைக்கலாம். குழந்தையின் வள்ளிக் கிழங்கைப் போன்ற கால்களால் உதைபட்டு மகிழலாம். இன்றேல் அழகிய கால்களை அவித்தெடுத்த பனங்கிழங்காகத்தான் காண நேரிடும்.

## தட்டம்மை

நமது நாட்டில் மிகக் கொடிய நோயாக, கொள்ளை நோயாக ஐம்பதாண்டுகளுக்கு முன்வரை மக்களைத் தாக்கி மரணத்தை விளைவித்தவை காலரா, பிளேக், பெரியம்மை நோய்கள்.

பூவுலகை போரினால் அச்சுறுத்தி அலைக்கழிக்க ஒன்று சேர்ந்த ஜப்பான், ஜெர்மன் மற்றும் இத்தாலி, ஆகிய அச்சு நாடுகளைப் போல், இம்மூன்றும் 'அச்ச' நோயாக பரவி நாட்டு மக்களைக் கொடூரமான முறையில் கொன்று குவித்து வந்தன. நம் நாடு விடுதலை பெற்றபின் மேற் கொள்ளப்பட்ட மக்கள் நலவாழ்வுத் துறையின் நடவடிக்கைகளால் பிளேக் மற்றும் பெரியம்மை நோய்கள் அடிச்சுவடே இல்லாமல் அழிக்கப்பட்டன. காலராமட்டில் அங்குமிங்குமாக வெள்ளத்தோடு வந்து வேதனையை

விளைவித்துக் கொண்டிருக்கிறது. தண்ணீரைக் காய்ச்சிக் குடித்து, அழுகிய பண்டங்களை, புலால், மீனைத் தவிர்த்தால் காலராவும் காணாமற் போய்விடும்.

நோயைக் கூட கடவுளாகக் கருதிய காலத்தில் பெரியம்மை நோய், நாசிக் கட்சியினர் யூதர்களை கொன்று குவித்தது போல், குழந்தைகளையும், பெரியவர்களையும் கும்பல் கும்பலாகக் கொன்றது. அம்மையை கொடிய நோய் என உணர்த்தப்பட்ட பிறகே, அதை அறவே அழிக்க முடிந்தது.

நமது அறியாமையால் வேண்டாத பலவற்றை வளர்த்து விட்டிருக்கின்றோம், வளர்த்துக் கொண்டுமிருக்கின்றோம். வளர்த்ததில் பெரியம்மையும், வளர்ப்பதில் அரசியல் போலிமையும் குறிப்பிடத்தக்கவை.

அம்மை நோய் குழந்தைகளைத் தாக்கி கொடுமைப் படுத்துகிறது. உயிர் இழப்பு குறைந்திருந்தாலும், பாதிப்பு இல்லாமற் போய்விடவில்லை. இந்நோய் மற்ற நோய்களைப் போல், நோய்க்காலத்தில் மட்டுமன்றி, நோய் தீர்ந்த பின்னும் விளைவுகளை ஏற்படுத்தும் வல்லமை பெற்றது.

தட்டம்மை நோய் கோடையில் அதிகமாக பரவக் கூடியது. வைரஸ் என்னும் நோய் நுண் கிருமிகள் காற்று வழியாகப் பரவ இந்த காலந்தான் இசைவானது. இந்த நோயும் வேறுசில நோய்களைப் போலவே ஊமாலம்மை, விளையாட்டம்மை, மணல்வாரி என்னும் மாற்று பெயராலும் அழைக்கப்படுகிறது.

> ''அரிதரிது மானுட ராதலரிது
> மானுட ராயினுங் கூன்குருடு செவிடு
> பேடு நீங்கிப் பிறத்த லரிது''

என்றார் ஔவையார். தட்டம்மை நோயைப் பற்றி நினைக்கும் போது

''கொடிது கொடிது அம்மை நோய் கொடிது
கொடிதிலும் கூடுதல் கொடுமை யானது
குழந்தையை வதைக்கும் தட்டம்மை நோயே!''

என்று கூறத் தோன்றுகிறது.

இந்நோய் குழந்தையைப் பற்றிக் கொண்டதும் இருமல், சளி, காய்ச்சல் மூலம் தனது வரவை வெளிப்படுத்தும், கண்கள் சிவக்கும். வெளிச்சம் கண்களுக்கு வேண்டாததாகி விடும். நாம் கவனக் குறைவாக இருந்து விட்டால், நம்மை இடித்துரைப்பதுபோல் காதோரம் வந்து கவனப்படுத்தும்.

காவியப் புலவன் கம்பன்கூட இராம காதையில் ''மானிடா? நீ' வாழும்போது நல்லதைச் செய்ய மறந்து விடாதே! அறம் செய்ய உன் ஆயுள் அதற்கென நீட்டிக்கப் படாது. காலம் தாழ்த்தாதே என்பதை கவனப்படுத்த, முதுமை உன்னை முற்றுகையிடத் தொடங்கி விட்டதென் பதை உணர்த்த, உண்மை விளம்பியாக, ஒற்றனாக நரை காதோரம் வந்து கவனப்படுத்துவதாகப் பாடினான். அம்மை வரலாறு கம்பனுக்குத் தெரிந்திருந்தால் தட்டம்மை தனது வரவை காதோரம் தோன்றும் இளஞ்சிவப்புத் திட்டைக் கூட கவிதையாக வடித்திருப்பான்.

காதோரம் வந்து கதவைத் தட்டும் தட்டம்மைப் பொரிகள் மூன்று, நான்கு நாட்களில் தீயைப்போல் பரவி முகத்திற்கு முன்னேறும். பின்னர் உடல் முழுவதையும் அது தனது விளையாட்டுக் களமாக்கிக்கொண்டு, குழந்தையை அழுகையின், அல்லலின் சொந்தமாக்கிவிடும். தட்டம்மை யின் தர்பார் தடபுடலாகப் பத்து நாட்களுக்கு நடை பெறும்.

முடிவு மோசமானாலன்றி நம்மில் பலர், நோயை, அடுத்த வீட்டுச் செடியை மேயும் ஆட்டைப் பார்ப்பதைப் போல் பார்த்துக் கொண்டிருப்பார்கள். தட்டம்மை நோய்

கடுமை காட்டினால், அதன் பின்விளைவாக நிமோனியா, வயிற்றுப் போக்கு ஏற்படும். இதனால் மூளை பாதிப்பும், கண்பார்வை . இழப்பும் நிகர பலனாக குழந்தைக்குக் கிடைக்கும்.

பாதிக்கப்படாத மூளையை வைத்துக்கொண்டே பயன் படுத்தாமல் பரிதவிக்கும்போது; மூளை பாதிக்கப்பட்டால் வாழ்க்கை எப்படி இருக்கும்?

கண்ணிரண்டும் இருக்கும்போதே முட்டி, மோதி நடக்கின்றோமே, கண்ணில்லா விட்டால்? நினைத்தாலே நெஞ்சில் நெருப்பு பட்டது போலாகிறதே! காட்சியின்பத்தைப் பற்றிக் கனவு கூட காண முடியாதே! பெற்றோர்கள் நோயின் கடுமையை கருத்தில் கொண்டு மற்ற நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு, மறக்காமல் ஒன்பதாவது மாதத்தில் தட்டம்மை தடுப்பூசியைக் குழந்தைக்குப் போட வேண்டும். மழலையின் முகத்தில் மலர்ச்சியைத் தேக்குவது நமது கடமை!

## காசநோய்

உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையா இயற்கைத்துணையான காற்றை, உடலுக்கும், உயிருக்கும் ஊறு விளைவிக்கும் நோய்கள்-நோய்க் கிருமிகள் பற்றுக் கோடாக்கிக் கொண்டு பயணித்துக் கொண்டிருக்கின்றன. மாந்தன் தான் வாழும் பகுதியின் சுற்றுச் சூழலை நன்கு பேணாது; மாசு படுத்துவதற்கான தண்டனைதான், காற்று நோய்க் கிருமிகளின், தூதனான, தொண்டனாக—தொடர்பாளனாக மாறுவது.

காசநோய் கண்ட பெரியவர்கள் இருமித் துப்பும் சளியிலுள்ள காச நோய்க் கிருமிகள், காற்றில் கலந்து வந்து பிறந்த குழந்தையின் சுவாசக் குழலுக்குள் நுழைந்து, குடியமர்ந்து விடுகிறது. சில குழந்தைகளின் முதல் மூச்சே காசநோய்க் கிருமிகளுக்கு வரவேற்பாகவும், வாழ்த்துப் பாடலாகவும் அமைந்து விடுவதுதான் பரிதாபம். பூவுலகைப்

பார்க்க வந்த புத்துயிருக்கு—புது உடலுக்குப் பொறுப்பற்ற பெற்றோர் வழங்கும் மரணப் பரிசுதான் காசநோய்!

காசநோய்க் கிருமி குழந்தையின் உடலுக்குள் ஊடுருவியதும், குழந்தையின் வளர்ச்சிக்குத் தடைபோடுகிறது. அன்னியர் ஒரு நாட்டுக்குள் நுழைந்ததும் அந்நாட்டு மொழி வளர்ச்சியை முடக்குவதபோல, காய்ச்சல், இருமல், தலைவலி ஆகியவற்றுக்கு இந்நோய் காப்பாளராகி ஊடியும், ஊக்கியும் வளர்க்கிறது—வளர்கிறது. இதனால் பச்சிளங்குழந்தை வலி விழுந்து வாடிய பயிராக, வதங்கிய கீரையாகத் துவண்டு போகிறது. துள்ளி விளையாடுவதும் அள்ளி உண்பதும் வளர்ந்த குழந்தைக்கே பகையாகி விடுகின்றது. இந்த நோய் அங்கத்தின் எந்தப் பகுதியையும் தனக்குக் களமாக்கிக் கொள்ளும் வல்லமை பெற்றது, கழுத்து விறைப்பும்; வலிப்பும், மயக்கமும் காசநோயின் வெற்றிப் பதக்கங்களே!

மாமன்னர்கள் தங்கள் வெற்றிச் சின்னமாக நடுகல், கல்வெட்டுக்களை ஏற்படுத்துவதைப்போல், காசநோய் கழுத்து மற்றும் அக்குள்களில் நிணநீர்க்கட்டிகளை ஏற்படுத்திப் புறச்சான்றை நிறுவிக் காட்டும். எலும்புகளை உருக்கி சதைக்குச் சம்பந்தமில்லாமற் செய்து குழந்தையை எலும்புக் கூடாக்கி விடும். சில காலம் இப்படியே உலவிட்டு, இறுதியாக மரணத்தின் வழியாக மண்ணுக்குப் பரிசாகக் கொடுத்து விடும்.

மலர்களைப்போல் மிருதுவாக; பளபளப்பாக; வளமாக இருக்க வேண்டிய குழந்தைகள் சருகாக, புகையிலைக் கற்றையைப்போல் காட்சி தருவது நெஞ்சைச் சுடும் நிலைமை! இதையும் மாற்றலாம் எச்சரிக்கையாக இருந்தால்.

ஒருகாலத்தில் தமிழ் இதழ்களில் ஆதரவு, எதிர்ப்பு என்ற நிலையில் கட்டுரைகள் எழுதக் காரணமாக இருந்து, தன்னால் காச நோய்க் கிருமிகளின் ஆதிக்கத்தை அடக்க

முடியுமென நிலைநாட்டிக் கொண்ட பிசிஜி என்னும் காச நோய் தடுப்பு மருந்துதான் குழந்தைகளை இந்நோயி லிருந்து காக்கும் கவசம்.

குழந்தை பிறந்த ஒரு மாதத்திற்குள் பிசிஜி தடுப்பூசி யைப் போடத் தவறும் பெற்றோர், குழந்தையின் நலன் பேணத்தவறிய குற்றவாளியாகிவிடுகிறார்கள். ஏதோ காரணத்தால் ஒருமாத காலத்திற்குள் தடுப்பூசி போடத் தவறிவிட்டாலும், நாற்பத்தைந்து நாட்களுக்குள்ளாவது போட்டுவிட வேண்டும்.

சில தாய்மார்கள் தடுப்பூசி போடுவதால் ஏற்படும் காய்ச்சலையே பெரிய பாதிப்பாக எண்ணி—அஞ்சிட அவர் களை அறியாமை ஊக்கப்படுத்துகிறது. அறியாமையின் ஆளுகைக்குட்பட்டு விட்டால், குழந்தையின் நலனை அது காணிக்கையாகக் கேட்கும். கொடுப்பதைத் தவிர நமக்கு மாற்று வழி இருக்காது.

குழந்தையைத் தாக்கும் அறுபடையில் ஒருபடையான காசநோயைத் தடுக்க முதலாவதும், முக்கியமானதுமான பெற்றோர் கடமை முத்தடுப்பூசி, போலியோ சொட்டு மருந்து, பிசிஜி தடுப் பூசி போடுவதுதான்.

குழந்தையைக் கடுமையாகத் தாக்கும் நோய்களைப் பற்றிய ஓர் அறிமுகமே மேற் கூறியவை. அதிகமாக அறிந்து கொள்ள வேண்டுமானால் அருகிலுள்ள மருத்து வரை நாடுங்கள்.

பெரியவர்களின் தவறால், ஒழுக்கக் கேட்டால் தம்மை யறியாமலேயே குழந்தைகளுக்குத் தொற்ற வைக்கும் புதிய நோய்—கொடிய நோய்—தீர்க்க முடியாத தீய நோய், எயிட்ஸ் என்னும் உயிர்க் கொல்லி நோய். இந்நோய் தற் போது உலகையே உலுக்கிக் கொண்டிருக்கிறது. இது பெரி யவர்களுக்கும் பொதுவான நோய் வரவாக இருப்பதால் இதைப் பற்றி தனியே விரிவாக அறிந்து கொள்வோம்.

# நல்வாழ்வின் வேர்

இயற்கையோடு இயைந்த வாழ்வு எளியதாயினும் இனியது. சோடியம் வாயு விளக்குகள் எத்தனை சேர்ந்து எரிந்தாலும் ஒரு பரிதியின் பகலைக் கொண்டு வந்துவிட முடியாது.

அறிவியலின் ஆற்றலும், ஆக்கமும் மானுடர்க்கு மகத்தான வசதி வாய்ப்புகளைத் தோற்றுவித்த தென்னவோ உண்மைதான். ஆனால் விஞ்ஞானத்தால் மட்டுமே வாழ்க்கைத் தேவைகளை வழங்கிவிட முடியாது. அறிவியல் ஆதிக்கத்தை மட்டுமே நம்பி, எளிய இனிய இயற்கையிடமிருந்து, மாந்தன் தன்னை தனிமைப் படுத்திக் கொள்ளும் போதுதான் எதிர்பாராத இடர்கள் அவனைப் பற்றவும் நோய்கள் தொற்றவும் செய்கின்றன.

நோயற்ற வாழ்வுக்கு உணவுக் கட்டுப்பாடும், மனக் கட்டுப்பாடும் அவசியமாகிறது. எண்சாண் உடலுக்கு வயிறே முதன்மை, தலையே முக்கியமென்பது முரண் பாடற்ற உண்மை. முன்னேறிய விஞ்ஞானத்தின் விளைச்சல்—புதிய கண்டுபிடிப்புகள் தரும் புலன் விருந்துகளால் மாந்தன் ஈர்க்கப்படவும், அவற்றின் ஆதிக்கத்திற்கு இசையவும் செய்கின்றன. இதனால் புலன் நுகர்ச்சி மிகுந்து, இயற்கைச் சட்டங்களை மீறும் போக்கு பெருகிவருகிறது.

செல்வச் செழிப்பும், அறிவியல் கண்டுபிடிப்புக்களும் மிகுந்தது அமெரிக்க நாடு. அங்கே இயற்கைச் சட்டமீறல்

களும், புலன் நுகர்ச்சி ஆர்வப் பெருக்கும், அந்நாட்டின் இளைய தலைமுறையைப் பெருமளவில் பாதித்துள்ளன. இதன் விளைவாகப் பெற்றோர் இதயத்தில் பாரத்தையும், கண்களில் ஈரத்தையும் சுமந்துகொண்டு கவலையின் கைதியாக காலந்தள்ளுகின்றார்கள்.

அமெரிக்காவில் பள்ளிப் பிள்ளைகளே உடலுறவில் ஊக்கங்காட்டி, அதில் ஈடுபடுமளவிற்கு, புலன் நுகர்ச்சியுணர்வு மேலோங்கியுள்ளது. ஒழுக்கக் குறைவு, கட்டுப்பாடின்மை, மற்றும் பொறுப்பற்று நடந்துகொள்ளும் போக்கும் இளைய தலைமுறையின் எதிர்கால நலனில் இடியாக விழுந்துள்ளன.

உலகிலேயே எயிட்ஸ் நோய் கடைசியாக கதவைத் தட்டும் கண்டம் ஆசியாதான் என்றார் டாக்டர் ஜனார்தன் மான். ஆசியாவில் நுழைந்த இந்தப் புதுநோய் அசுர வேகத்துடன் தமிழ்நாட்டில் நுழைந்துவிட்டது. நுழைந்தது என்பதைவிட தமிழகம் வழக்கம்போல் நன்மை தீமை பாராமல் வரவேற்றுள்ளது என்பதே பொருந்தும்.

தமிழகத்திலும் ஒழுக்கச் சிதையும், கட்டுப்பாடின்மையும் தலையெடுக்கத் தொடங்கிவிட்டன. இந்தச் சீர்கேடு, அமெரிக்க நாட்டில் நிலவும் அளவுக்கில்லாவிடினும், அதன் சாயல், அதன் நிழல் தென்படத் தொடங்கிவிட்டது.

உலகையே உலுக்கிக் கொண்டிருக்கிறது உயிர்க்கொல்லி நோய் இது. இந்தியாவிலும், தமிழகத்திலும கால்லூன்றி கிளைத்தும், தழைத்தும் வேகமாக பரவி வருவது ஒதுக்க முடியாத உண்மை!

கற்புக்குக் கடவுளையும், இலக்கணத்தையும் படைத்துக் கொண்டுள்ள நாடு தமிழகம். இது ஒழுக்கக் கேட்டின் உடன்பிறப்பான உயிர்க்கொல்லி நோயாளிகளின் எண்ணிக்கைப் பெருக்கத்தில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்

தகுதியைப் பெற்றுள்ளது. தமிழர்களின் பண்பாடும், ஒழுக்கவுணர்வும் எந்த அளவுக்குத் தாழ்நிலையை எய்தியுள்ளதென்பதை எண்ணும்போது, நம்மையறியாமலேயே நமது தலை தாழத்தான் செய்கிறது. பழம்பெருமை பேசி, நிமிர்ந்து நடந்த நமக்கு, கூன் விழும் அளவுக்கே குனிவை ஏற்படுத்திவிட்டது இந்நிலை! அழகாக உடுத்தும் அளவுக்கே நாம் முன்னேறியுள்ளோம்.

ஒழுக்கக் கேட்டில் வளர்ச்சி கண்டிருப்பது, ஒப்பாரியை நயப்பதற்கிணையானது. ஒருவனுக்கு ஒருத்தியெனும் உன்னதக் கோட்பாட்டை வகுத்துக் காத்த தமிழகத்திற்கா இந்த நிலை? இமயத்திற்கே தாகமென்றால், சகாராவுக்கு விக்கல் வியாதி தீருவதெங்கே?

தண்ணீருக்காகப் பொன்னியே புலம்பும்போது, பெண்ணை எப்படி பேரிகை கொட்ட முடியும்? இந்தியாவிலேயே உயிர்க் கொல்லி நோய் ஊர்வலம் வந்தால், அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பாவிலும் அது ஓட்டப் பந்தயமல்லவா நடத்தும்?

தமிழினத்தின் பண்பாட்டுப் பழமையும், முதன்மையும் பராமரிக்கப்பட்டிருந்தால், ஒழுக்கக் கேட்டில் உற்பத்தியாகி ஏதுமறியாத மனைவி மக்களையும் பற்றிப் பாதிக்கும் எயிட்ஸ் என்னும் உயிர்க்கொல்லி நோய் தமிழகத்தில் தனது தாக்குதலை தொடுத்திருக்க முடியுமா?

பணம், பதவிக்காகப் பண்பாட்டை நன்காட்டிற்கு அனுப்பிவிட்டு, வசதி வந்தால் போதும், வரலாறு கெட்டாலும் பரவாயில்லை என எண்ணும் போக்கு பொலிவு பெற்றிருக்கிறதே அதுதான் அவலத்தின் ஆணிவேர்; அசிங்கத்தின் அறுவடை.

வசதி கூடக்கூட ஆசை அதிகரித்து நுகர்வு வேட்கை நூறு மடங்காகிறது. துய்க்க வேண்டுமென்ற தூண்டுதல்

அதிகரிக்கும்போது அங்கே ஒழுக்கவுணர்வு ஒடுங்கிப்போகிறது. கண்ணெனப் போற்றும் கட்டுப்பாடும் அந்தகமாகி—அணைந்த விளக்காகி அடிமைப்பட்டு விடுகிறது.

நல்வாழ்வுக்கு வழி காட்டும் அறநூல்கள் அங்காடிக்கே வர முடியாத அளவுக்கு தமிழகத்தில் பண்பாட்டு வறட்சி பரவியிருக்கிறது. கிருபானந்தவாரியார் குறிப்பிட்டதைப் போல் பக்தி மிகுந்த அளவுக்கு ஒழுக்க உணர்வு ஓங்கவில்லை. மாறாக ஒடுங்கிக் கிடக்கிறது.

உலக இயக்கத்திற்கெல்லாம் மூலம் ஞாயிறு என்பது போல், உடற் கேடுகளுக்கெல்லாம் மூலம் ஒழுக்கக் கேடு தான். அதனால்தானே உலகப் பொதுமறை தந்த ஒப்பிலா புலவன் வள்ளுவன்,

''ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.''

என்றான். மேலும் ஒழுக்க உணர்வை உள்ளடக்கி, உடல் நலத் தேவையை வலியுறுத்தும் வகையில்,

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''

என்றும் ஓதி வைத்தனர் நமது முன்னோர்.

கோடி கோடியாகச் செல்வத்தைச் குவித்து வைத்திருந்தாலும், சர்க்கரை நோய் உண்டானால் கூழைத்தான் குடிக்க வேண்டும், கோதுமையைத்தானே சாப்பிட வேண்டும்?

எது சிறந்த செல்வம் என்ற வினாவுக்கு அறநூல்கள் வெவ்வேறு நிலைமைகளில், பலவேறு கருத்துக்களைவெளிப்படுத்தியிருக்கின்றன. ''கற்றிலனாயினும் கேட்க'' என்ற கருத்துக்கிணங்க ''செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்'' என்று கூறினார் வள்ளுவர்.

கேள்வி ஞானம் கல்வி வழியாகவும், கிடைக்கும்—ஆர்வத்தினாலும் அதைப் பெறலாம். அதனால்தான் ''கேடில் விழுச் செல்வம் கல்வி'' என்கிறார் வள்ளுவர் வேறு சூழ்நிலையில். எவராலும் பறித்துக்கொள்ள முடியாத—பிரித்துச் செல்ல முடியாத செல்வம் கல்விதான். இதுவொன்றுதான் இழக்க முடியாத செல்வம். கல்விச் செல்வமே சிறந்ததென்றும், பொருட்செல்வமே உயர்ந்ததென்றும் சிலர் இருமாந்து கிடப்பதை உணர்ந்த வள்ளுவர் வேறு ஒரு செல்வத்தை இழுத்து வந்து எதிரே நிறுத்துகின்றார்.

''அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்
செல்வம்
பூரியர் கண்ணு முள''

என்றதன் மூலம் பொருட் செல்வத்திற்கு முதலிடமளிக்கவோ, முடிசூட்டவோ முடியாதென்பதை தெளிவு படுத்தி விட்டார் திருவள்ளுவர். இந்த முடிவுக்குத் திருவள்ளுவர் வரக் காரணம் என்ன? ஆதாரமின்றி எதையும் அவர் எழுதி விடவில்லை. ''பொருட்செல்வம் பூரியர் கண்ணுமுள'' என்பதுதான் அச் செல்வத்தை அவர் கணக்கில் கொள்ளாமற் தள்ளி விட்டதற்கான தக்க காரணம். பூரியர் என்பவர் யார்? அருட்செல்வம் அவர்களிடம் இருக்காதா? இருக்க முடியாதென்பதே ஆன்றோர் தீர்ப்பு. இருந்தால் அவர் பூரியரல்லர்.

பூரியர் என்பதற்கு கீழ்மக்கள், இழிந்தவர்கள் என்றுதான் பொருள் கூறப்பட்டிருக்கிறது. கள்ளக் கடத்தல் பேர்வழிகள், அடியாட்கள், கயவர்கள், திருடர்கள், காசுக்காக எதையும் செய்யத் தயங்காதவர்கள் எனப்பட்டவர்கள்தான் பூரியர். இவர்களிடம் எப்படி அருட்செல்வம் அண்டமுடியும்? எனவே பொருட் செல்வத்தைவிட அருட்செல்வமே மேலென்றார்.

''வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;
யாண்டும் அஃதொப்பதில்.''

இந்தக் கருத்தும் அவர் முன்னர் கூறிய கருத்துக்கு அரணே யொழிய முரண் அல்ல.

நீதிநெறி விளக்கம் கல்வியைப் போன்றதோர் செல்வ முண்டா என்று பெருமை விளக்கிப் பேசுகிறது.

''அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்-உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.''

செல்வமென்ற சொல்லைத் தவிர்த்து ''உற்ற துணை'' என்றது 'செல்வம்' என்பதை சென்றுவிடுவோம் என்றும் எண்ணத் தோன்றுமே என்பதால் ஐயத்திற்கப்பாற்பட்ட உற்றதுணை என்ற சொல்பெய்து வெண்பா விளக்கேற்று கிறது நீதிநெறி.

எல்லாச் செல்வங்களையும் ஆய்ந்து, ஆழ்ந்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வரும்போது, எல்லாச் செயல்களுக்கும், சிந் தனைகளுக்கும் உடல் நலனே ஆதாரம் என்பதைத்தான் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்ற கூற்றுக்கே தலைமையிடத்தைத் தரவேண்டுமென்பதை ஒதுக்க முடியாமல் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது.

''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.''

என்னும் திருமூலரின் மந்திரச்சொல், உயிருக்கு உறுதுணை யாவது உடலே என்பதை உறுதிப் படுத்தும் இலக்கியச் சான்று.

உயிர்வாழ வேண்டுமென்ற எண்ணத்துடன்; இன்ன லற்றுமிருக்கவேண்டும் என எண்ணுபவர் யாராக இருந்தா லும், அவர் நலன் பேணுவதை உதறித் தள்ளிவிட முடியாது.

தரையின்றித் தாவரமில்லை. தாவரமின்றித் தானிய மில்லை என்றாற் போல் உடல் நலனின்றி ஒரு செயலும் நடக்காது. மறைகளின்றி மதங்கள் வளர்ந்ததா? வார்ப்பட மின்றேல் வண்ணத்திரைக்கு வரவேது—வரும்படிதான் ஏது?

உயிர்வாழ, உடல் நலன் இன்றியமையாதது. உடல் நலனுக்கு அடிப்படைத் தேவை உணவு, நீர், காற்று மற் றும் வெளிச்சம். இந்த நான்கு ஆதாரத் தேவைகளில் வெளிச்சமின்றிச் சில காலம் வாழ முடியும். ஆனால் காற் றின்றி சில மணித் துளிக்குமேல் வாழ முடியாது. நீரும் உணவும் அன்றாடத் தேவைகள். இந் நான்கு தேவை களுடன் மாந்தரின் நாகரிக வாழ்வுக்கு உடையும், உறை யுளும் தேவை. நாகரிக வளர்ச்சி இல்லாத காலத்தில் மனிதன் குகைகளில் வாழ்ந்தான். இலைகளையும் மரப் பட்டைகளையும் அணிந்தான். இன்றோ இவை காட்சிப் பொருள்கள். மேற்கூறிய பொதுவான வாழ்க்கைத் தேவை களுடன் உடல் நலனுக்குச் சீரான உணவும் சிறப்பான மனக் கட்டுப்பாடும் அவசியமாகின்றன. அதனால்தான் ''மீ தூண் விரும்பேல்'' என்று கூறப்பட்டது. இளமையில் ஓதப்பட்டவை முதுமைக்கும் முற்றிலும் பொருந்தும். பட் டறிந்து கூறியவற்றைப் புறக்கணித்தால் கெட்டழிந்து போவது உறுதி!

மாந்தன் என்னதான் ஊட்டச்சத்துள்ள உணவை உண் டாலும், உழைப்பின்றேல் உடலுரம் பெற முடியாது. எளிய உணவையே உட்கொள்ளும் ஏழையின் உடல் வலு வின் முன், வகை வகையாகச் சமைத்துண்ணும் வசதியான வர்கள் எதிர்த்து நிற்க முடியாமற் போவதன் காரணம் உழைப்புக் குறைவேயாகும்.

உணவு; உழைப்பு; ஒழுக்கம்; மனக்கட்டுப்பாடு ஆகியவையே உடல் நலன் பேணும் உற்ற நண்பர்கள். உளத் தூய்மையோடு உழைத்து, அளவோடு உண்பவர்களுக்கு நோயுறவு கிடைப்பதில்லை.

அறிவியல் வளர்ச்சியின் பயனாய் தொடர்பு பெருகியுள்ளது. தூரம் என்பது தொலைந்து விட்டது. காலம் அருகிவிட்டது. பரந்து விரிந்த ஞாலம், கண்களுக்கெதிரே சுருண்டு நிற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மின்னணுவியலின் முன்னேற்றம் நமது கற்பனைக்கும், கனவுகளுக்கும் அப்பாற்பட்ட அதிசயங்களைப் படைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதனால் தனி பண்பாடு, பழக்க வழக்கங்கள் மறைந்து உலகப் பண்பாடு உருவாகிக் கொண்டிருக்கிறது. உடை, உணவில் ஊடுருவிய இந்தப் பழக்கங்கள், உள்ளத்திலும் குடியேறத் தவறவில்லை. மேலை நாகரிகம் கீழை நாடுகளில் கிளர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. விளைவு இங்கேயும் அகம் புறமாகிக் கொண்டிருக்கிறது. தட்ப வெப்பத்தைத் தாண்டிப் பழக்கங்கள் பரவத் தொடங்கி விட்டன.

அறிவியல் ஆக்கங்களைப் போன்றே, அழிவுச் சக்திகளின் ஆதிக்கமும் உலகில் விரைந்து பரவி வருகிறது. இருபதாம் நூற்றாண்டு எத்தனையோ சாதனைகளுக்குத் தலைமை தாங்கியிருக்கிறது. அவ்வாறே இரண்டு உலகப் போர்களையும் சந்தித்து, ஏராளமான உயிர்களை பலி வாங்கி மனிதப் பண்பாட்டுக்கு மயானமே ஏற்படுத்தியிருக்கிறது. விஞ்ஞானம் தனது ஆய்வுக்கு எலி, முயல் என்ற உயிரினங்களை மட்டுமன்றி, மனித உயிர்களையும் பயன்படுத்திய கொடுமை இந்த நூற்றாண்டின் மீது படிந்த கறை. ஆம், அணுகுண்டைத் தயாரித்த அமெரிக்கா, அதைச் சோதித்துப் பார்க்க ஹிரோஷியாவையும், நாகசாகியையம் தேர்ந்தெடுத்தது. இந்த நூற்றாண்டுக்கு இன்னுமொரு பேரழிவுச் சக்தியாக உருவெடுத்திருப்பது எயிட்ஸ் என்னும் உயிர்க்கொல்லி நோய்.

# எயிட்சு என்னும் உயிர்க்கொல்லி

நோய்களின் வரலாற்றில் காலத்தால் கடைசியாகக் கண்டறியப்பட்டிருக்கும் கொடிய நோய்தான் எயிட்ஸ் என்னும் உயிர்க்கொல்லி.

நான்கு திசைகளின் ஆங்கிலப் பெயர்ச் சொற்களின் முதலெழுத்துக்களின் கூட்டால் உருவான நியூஸ் (North, East, West, South) News. என்னும் சொல்லைப்போல், உலக சுகாதார அமைப்பு என்னும் [World Health Organisation) ஆங்கிலச் சொற்றொடரின் தலைப்பெழுத்துக்களின் கூட்டு 'ஹு' Who என்றானதுபோல் எயிட்ஸ் என்னும் உயிர்க் கொல்லி நோய்க் குறிப்புச் சொற்களின் சுருக்கமே எயிட்ஸ் என்றாயிற்று. இதை நோயெதிர்ப்புச் சக்தி குறைந்த நிலை என்பர்.

**Acquired**—பற்றிக் கொண்ட

**Immune**—நோயெதிர்ப்பு

**Deficiency**—குறைவு

**Syndrome**—நிலை.

உயிர்க்கொல்லி நோயின் பெயர் வரலாறு இதுதான்.

எல்லாச் சொல்லும் பொருள் குறிப்புடைவைதானென்னும் இலக்கணத்திற்கொப்ப எயிட்ஸ் என்னும் சொற்

றொடரின் ஒவ்வொரு சொல்லும் நோயின் தோற்றுவாய், நிகழ்வு, நிலை ஆகியவற்றை தெளிவாகக் குறிக்கின்றன.

**Acquired** என்னும் ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழில் பற்றிக்கொண்ட; ஈட்டிய; வாங்கிய; அடைந்த என்றெல்லாம் பொருள் கூறப்படுகிறது. இந்த நோயின் வரவுக்குரிய ஆங்கில முதற் சொல்லுக்கு இவை அத்தனையுமே பொருந்துவதாயினும், 'பற்றிக் கொண்ட' என்னும் சொல் மிகச் சிறப்பாக பொருந்துகிறது.

அடையாளம் காணப்பட்ட நோய்களில், எயிட்ஸ் நோயைத் தவிர பிற நோய்களெல்லாம் புறச் சூழல்களால், காற்றால், வெப்பத்தால், நீரால் தொற்றிச் கொள்கின்றன, அல்லது ஏற்படுகின்றன. ஆனால் உயிர்க்கொல்லி நோய் மட்டில் மாந்தன், தனது ஒழுக்கக் கேட்டால், இயற்கைக்கு மாறான நடவடிக்கைகளால், பொறுப்பற்ற செயல்களால் ஈட்டிக்கொள்கின்ற, பற்றிக்கொள்கின்ற, பெற்றுக்கொள்கின்ற, பெற்று தன் வழி மனைவி மக்களுக்குக் கொடுத்து விடுகின்ற நோயாகவும் விளங்குகிறது.

இது மற்ற நோய்களைப்போல் தொற்றி வருவதல்ல. பற்றி வளர்வது. மேலோட்டமாகப் பார்த்தாலேகூட உயிர்க்கொல்லி நோய்க்கு முழுமுதற்காரணம் நாமேதான் என்பது விளங்கும். இந்நோய் நமது வினை வழி வருவதால், நம்மால் (**Acquired**) பற்றிக் கொள்ளப் படுவதால் நோயின் முதலெழுத்துக்குரிய சொல், பொருத்தமாகவும், பொருள் பொதிந்ததாகவும் உள்ளது.

இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கெல்லாம் அடிப்படை, இயற்கைதான். பாயில்ஸ் விதியும், ஆர்க்மிட்டீஸ் தத்துவமும், புவியீர்ப்புக் கொள்கையும், இப்படி ஒவ்வொரு விஞ்ஞான கண்டுபிடிப்புகளுக்குமே இயற்கை நிகழ்வுகளே காரணமாக இருந்திருக்கின்றன. நமது வேலையை எளிமையாக்கிக் கொண்டிருக்கின்ற, சக்தி வாய்ந்த அறிவியல் சின்னமாகத் திகழ்கின்ற **(Computor)**

கணணியின் செய் முறையும், செயல் முறையும் மனித மூளையின் பிரதிபலிப்புகளல்லவா?

நாம் எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் பார்த்த உருவத்தை, கேட்ட பாடல்களை, பேசிய பேச்சுக்களை நினைத்த நேரத்தில் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துவது: நினைவுக்குக் கொண்டு வருவது மூளையின் ஆற்றலல்லவா? கணணியின் ஆற்றலை வியக்குமளவுக்கு, (மிகப் பலர் இதைப் பற்றியெல்லாம் சிந்திப்பதே இல்லை என்பது கசப்பான உண்மை) நாம், நமது மூளையின் செயலாற்றலை பற்றிச் சிந்திப்பதில்லை—வியப்பதில்லை, பெருமைப் படுவதில்லை.

மூளையைப் போலவே நமது இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களும் அருமையான ஆற்றல் பெற்றவை—உன்னதமான பணியாற்றுபவை. வெள்ளை அணுக்களில் 'லிம்போ சைட்' எனும் ஒருவகை [T-4] உதவும் அணுக்கள் தான் நமக்கு நோய் எதிர்ப்புச் சக்தியாக விளங்குகின்றன. நம்மை நோயினின்றும் காப்பாற்ற, மருத்துவருக்கு முன்னரே போராடுபவை இந்த வெள்ளணுக்கள். இவை ஒரு நாட்டின் ஆட்சியுரிமை. எல்லையில் அன்னியர் நுழைவதை எதிர்க்கும் காவற்படைக்கு நிகரானவை.

மனித உடலுக்குள் எந்த நோய்க்கிருமி நுழைந்தாலும் அவற்றை எதிர்த்துப் போரிடும் வீரர்களாக விளங்குபவை தான் லிம்போசைட் வெள்ளணுக்கள்.

படையெடுப்பில் தாக்கும் படை வலியதாகவும், தாக்கப்படும் படை பலம் குன்றியுமிருக்குமானால் என்ன நேருமோ அதுதான் எயிட்ஸ் என்னும் நோயின் தத்துவம். பொதுவாகத் தாக்குகின்ற நோய்க் கிருமிகள் வலுவற்றவைகளாக இருந்தால் இரத்தத்திலுள்ள வெள்ளணுக்கள் அவற்றை எதிர்த்துப் போராடி நோயினின்றும் நம்மைக் காக்கின்றன. நோய்க்கிருமிகள் வலுவானவைகளாக இருக்கும்போதுதான் நாம் நோய்வாய்ப் படுகின்றோம். அப்போது நோய்க் கிருமிகளின் ஆதிக்கம் ஏற்பட்டு, நோய்

கடுமையாகிறது. இதை தடுப்புச் சக்திக் குறைவு என்கிறது உடல்நல அறிவியல்.

உயிர்க்கொல்லி நோய்க்கிருமிகள் நோயெதிர்ப்புப் படையாக விளங்கும் லிம்போசைட்களை அழிப்பது மட்டுமன்றி, அழிக்கும் அணுக்களை [T-8] அதிகரிக்கவும் செய்கின்றன. அண்மையில் ஈராக்கைத் தாக்கிய அமெரிக்கப் படைகள் தோற்ற நாடு மீண்டும் போரிடும் ஆற்றலைப் பெறக்கூடும் என்பதற்காக, அதன் வலு நிலைகளை, போர்க்கலன்களை தேடிப் பிடித்து அழித்ததே ஒரு வகை, வென்ற நாட்டை இழந்துவிடக் கூடாதென்பதற்காக, தமது நிலையை வலுப்படுத்திக் கொள்ள கூடுதல் படையை வைத்துக்கொண்டு தோற்றவர் மீண்டெழாமற் பார்த்துக் கொள்வது ஒரு முறை. இதை இசுரேல் செய்தது. இதையே எயிட்சும் செய்கிறது.

இனி இந்நோய்ப் பெயரின் கடைசி சொல்லான நிலை அல்லது தன்மை (**Syndrome**) என்பதைப் பற்றி ஆராய்வோம்.

உயிர்க்கொல்லி நோய்க் கிருமிகள் இரத்தத்தில் கலப்பதற்கு முன்வரை, வெள்ளணுக்களின் நிலை குறைவற்றதாக, வலுவுள்ளதாக, மேலோங்கியதாக இருக்கிறது. உடல் நலன்-வெள்ளணுக்களின் காப்பிலும் கட்டுப் பாட்டிலும் இருக்கிறது. வலிமை மிகுந்த எயிட்ஸ் நோய்க் கிருமிகளை எதிர்த்து வெல்ல முடியாத வெள்ளணுக்கள் தோல்வி முகம் காட்டும்போது, எயிட்ஸ் கிருமிகள் அவற்றை செயலிழக்கச் செய்கின்றன. காப்பரண் தாக்குதலில் வீழ்ந்து விட்டால், எதிரிகள் நாட்டுக்குள் புகுந்து ஆதிக்கம் செய்யவும், வீட்டிற்குள் புகுந்து கொள்ளையடிக்கவும் கேட்கவா வேண்டும்?

மற்ற கிருமிகள் நோயை உண்டாக்குகின்றன. ஆனால் உயிர்க்கொல்லி கிருமிகளோ நோயை எதிர்க்கும் வெள்ளணுக்களை செயலிழக்கச் செய்து, நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைத்து விடுகின்றன. இந்த நிலை ஆங்கிலத்தில் **Syndrome** எனப்படுகிறது.

# உயிர்க்கொல்லி

## பிறப்பும்-வளர்ப்பும்

வரலாறு என்பது இறந்த காலத்தை அறிந்துகொள்வதற்கும், நிகழ்காலத்தை செயற்படுத்துவதற்கும் எதிர் காலத்தைத் திட்டமிடுவதற்கும் உறுதுணையாகக் கூடிய, ஊக்கப்படுத்தக் கூடிய, ஒழுங்கு படுத்தக் கூடிய உன்னதமான கருவி.

தமிழர்கள் வரலாற்றின் இன்றியமையாமையை எதனாலோ மறந்து விட்டார்கள். நமது பண்டைய வரலாறு கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மற்றும் இலக்கியங்கள்தான். நமது முன்னேற்றம் முடங்கிப் போனதற்கு, நமது வரலாற்று வறட்சியும் ஒரு காரணம்.

உயிர்க்கொல்லி எனும் எயிட்ஸ் நோய், நீர் வாயுக் குண்டைவிட மக்களை அச்சுறுத்தும் ஆயுதமாக அறிமுகமாகியிருக்கிறது. நமது போர்க்கருவி கண்டுபிடிப்பாளர்கள் இதே நோய்க்கிருமியைக் கூட எதிர் காலத்தில், குண்டாகத் தயாரித்துக் கொடுமை செய்தாலும் வியப்பதற்கில்லை. அளவற்ற அழிவை உண்டு பண்ணிய அணுகுண்டைத் தயாரித்து அதை ஜப்பான் நாட்டு மக்கள் மீது சோதித்துப் பார்த்தவர்களாயிற்றே. குண்டு குறையின்றி வெற்றியுடன் வெடிக்க வேண்டுமென்று, இரக்கமே வடிவான இறைவனை வேண்டிக்கொண்டும், பாரதியாரின் ஆசியுடனுந்தானே அணுகுண்டு அனுப்பி வைக்கப்பட்டது!

வெற்றிக்காக எதையும் செய்யக் கூடியது இன்றைய போர்க்கலை-அரசியல் நிலை.

உயிர்க் கொல்லி நோயின் வரலாற்றை அறிந்துகொண்டால்தான், அதைக் கட்டுப்படுத்தவும், ஆற்றலை மட்டுப் படுத்தவும், அறிவியல் கண்டு பிடிப்பால் ஒழித்துக்கட்டவும் முடியும்.

பாட்டன் நோய்களையெல்லாம், பாதம் பட்ட இடந் தெரியாமல் பயந்தோடச் செய்த மருத்துவ விஞ்ஞானம், கால் நூற்றாண்டு வயதேயுடைய உயிர்க்கொல்லி நோயை கண்டு; கேட்டு; அதிர்ந்து கிடக்கிறது. மருண்டு மலைக்கிறது. அந்த அளவுக்கு ஆற்றல் பெற்ற அழிவு சக்தியாக உருவாகி உலாவரும் உயிர்க்கொல்லியின் பிறப்பும் வளர்ப்பும் என்னவென்று பார்ப்போம்.

நோய்க் கிருமிகளை உடல் நல அறிவியல் இரண்டு வகையாகப் பிரித்துக் குறிப்பிடுகின்றது.

அவற்றிலொன்று பாக்டீரியாக்கள்; மற்றது வைரஸ், உயிர்க்கொல்லி நோயின் ஊற்றுக் கண் வைரஸ். இதனை **(Human Immune Deficiency virus)** எச். ஐ. வி. என மருத்துவ விஞ்ஞானம் குறிப்பிடுகிறது.

இந்த நோய்க்கிருமிகள் பலரோடு உடலுறவு கொள்பவர்களிடத்தும், ஒரு பால் **(Homosex)** உடலுறவு கொள்பவர்களிடத்தும்தான் தங்கித் தாக்குகின்றன. இக்கிருமிகள் பால்வினை நோயால் பாதிக்கப்பட்டவர்களின் விந்தில் தோன்றி, உடலுறவு கொள்ளும் மற்றவர்களுக்கும் விந்தின் மூலமே பரவுகிறது. உடலுறவின்போது உள்ளுறுப்புக்களில் சுரக்கும் திரவத்திலும் இந்நோய்க் கிருமிகள் அரிதாக இருப்பதுண்டு. இந்நோய்க் கூறுகளை உணர்ந்தோ என்னவோ நமது முன்னோர் "விந்து கெட்டவன் நொந்து சாவான்" என்றனர்.

ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உயர்ந்த நெறி நின்று வாழ்பவர்களிடத்தில் இந்த நோய்க்கிருமிகளுக்கு இடம் கிடைப்பதில்லை, ஆனால் குற்றமற்ற, ஒழுக்க நெறியாளர் களையும், இந்நோய்க் கிருமிகள் மறைமுகமாக புறவழி களில் நுழைந்து தாக்கும் வாய்ப்பும் உண்டென்பதை மறந்துவிடக் கூடாது.

கற்பு என்பதற்கு ஒழுக்கம் என்பதுதான் பொருள். அகவொழுக்கத்தை ஆண்களிடம் முனைப்பாக வலியுறுத் தப்படாமல், அச்சொல்லை பெண்களுக்குரியதாக்கி, ஆண்கள் நழுவிக் கொண்டார்கள். அவர்கள் அகவொழுக் கக் கட்டுப்பாட்டில் இறுக்கமின்றி, நெகிழ்ச்சியோடு, வழுவி நடந்ததை, உலகியல் கடுமையாகக் கருதுவதில்லை.

கற்பெனப்படுவதை ஒருபால் ஒழுகலாக மக்கள் குழுமம் கருதி, கடைப்பிடித்ததன் விளைவுதான் உயிர்க் கொல்லி நோய் தோன்றுவதற்கும், பரவுவதற்கும் காரண மாகி விட்டது. நூலோர் கற்பை பொதுவாகத்தான் குறிப்பிட்டார்கள்.

''மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய பயனெறி திரியாது
மலிவும் புலவியு மூடலு முணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே''

என்றுதான் தொல்காப்பியர் கூட குறிப்பிடுகின்றார், இதில் ஆண், பெண்ணென்ற பாகுபாடில்லையே!

பிற்கால நூல்கள் நமது நெறிமுறைகளைத் தடம் பிறழச் செய்யும் போக்கினதாக அமைந்துவிட்டன. 'கூளப்ப நாயக்கன் காதல்' போன்ற நூல்கள் தனிமனித உடலின்ப உணர்வுக்குத் தீனி போடும் வகையில் புனையப் பட்டு, புகலப்பட்டவை. இத்தகைய சிற்றிலக்கியங்கள் பாமர மக்களிடையே போதை யூட்டிப் புலநுகர்ச்சியுணர்

வைத் தூண்டும் 'கிரியா ஊக்கி'களாகப் பரப்பப் பட்டுள்ளன. இல்லையென்றால் ''விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்'' என்று இலக்கணம் வகுத்திருப்பார்களா?

''வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் கற்பு மங்கையர்க் கோர்மழை
மாத மூன்று மழையெனப் பெய்யுமே''

என்று கற்பை பெண்களுக்கு மட்டுந்தானெனக் கோடு போட்டுக் குறிப்பிடுவார்களா?

''உளமலி காதற் களவெனப் படுவ
தொருநான்கு வேதத் திருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத் தியல்பின தென்ப''

என்று களவையும், எண்வகை மணத்தையும் பேசும் அகப்பொருள் இறையனார்:-

''பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பா டீரறு நாளும்
நீத்தகன் றுறைதல் அறத்தா றன்றே''

என்றும் பேசுகின்றார். 'அந்த' பன்னிரண்டு நாட்களும் பிரிந்திருத்தலை அறமன்று என்றவர்—பிரிந்திருத்தல் ஆகாதென பொதுப் படக் கூறாததேன்? பொருளீட்டப் போனவர்க்கு மட்டுமான பொருந்து மொழியல்லவே இது! ''நீத்தகன் றுறைதல்'' என்பதை எப்படிப் பொருள்வழி பிரிந்தவர்க்கான போதனையாகக் கருத முடியும்?

ஆண்களின் அகவினை முறை கேடுகள் காலங்காலமாகவே அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கீனங்களாகவே இருந்து வருகின்றன. அது நாளாக நாளாக அதிகரித்ததென்பது தான் அவலத்தின் சிகரம்.

இருபதாம் நூற்றாண்டின் எழுச்சிப் பாவலன் பாரதி தாசன்,

> ''ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு செய்தால்
> அப்போது பெண்மையுங் பழிந்திடாதோ?
> நாணற்ற வார்த்தையன்றோ? வீட்டைச் சுட்டால்
> நலமான கூரையுந்தான் எரிந்திடாதோ?''

என்று நடுநிலை நின்று பேசினான்.

ஒழுக்கக் கேட்டிற்கு ஆண்களை மட்டுமே குற்றம் கூறு வது சரியா என்ற வினா எழுவது இயல்பு. அதிலும் பெண் கள்தானே உடற் தொழிலாளிகளாக உள்ளார்கள். அப்படி இருக்க பெண்களை அப்பாவிகளாக உருவகப்படுத்துவது, சார்ந்து பேசுவது புரங்கூறுதலாகாதா என்றும் எண்ணத் தோன்றும்.

உடற் கூற்றியல்புப்படி பெண்களைக் காட்டிலும் ஆண்கள் காம இச்சை அதிகமுடையவர்கள். எனவே தங்கள் தேவைக்கு அவர்கள் பெண்களை ஆட்படுத்தி விடு கிறார்கள். எனவே பரத்தைகளாகப் பெண்கள் இருந்தா லும், அப்படி ஒரு பிரிவை உண்டாக்கியவர்களும், அதன் பயனைத் துய்ப்பவர்களும் ஆண்கள் என்பதும் மறுக்கக் கூடாத உண்மை!

பரத்தையரை இல்பரத்தை என்றும், பொதுப்பரத்தை என்றும் இருவகையாகப் பிரித்துப் பேசினர் முன்னோர். பண்டைக் காலத்தில் பொதுப்பரத்தையர் குறைவு. மக்கட் பெருக்கக் குறைவும், போக்குவரத்து அதிகமில்லாதிருந் ததும்தான் அதற்குக் காரணம். மான உணர்வு மங்கா திருந்ததும் ஒரு காரணம். ஆனால் தற்காலத்தில் இரண் டின் எண்ணிக்கையும் அதிகம். போக்குவரத்து மிகுதியான சாலை சந்திப்புகளில் பொதுப்பரத்தையர் மிகுதியாகியுள்ள னர். அதன் அறுவடைதான் உயிர்க்கொல்லி நோய்.

காமத்தின் வயப்பட்டு ஆண்கள் பரத்தைகளை உடலுறவுக் கூட்டாளியாக்கிக் கொள்ளாமலிருந்தால் உயிர்க் கொல்லி நோய் உண்டாகி, பரவியிருக்காது. உயிர்ப்பகையாளி நோயோடு உறவை ஏற்படுத்துவது காமம். எனவே தான் காமத்தைப் பகை என்றனர் சான்றோர்.

''புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சார்
அகப்பகை ஒன்றஞ்சிக் காப்ப—அனைத்துலகும்
சொல்லொன்றின் யாப்பர் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை''

என்றார் குமரகுருபர அடிகளார்.

''கொங்கையிள நீராற் குளிர்ந்தவிளஞ் சொற்கரும்பாற்
பொங்க சுழியாம் புனற்றடத்தில்—மங்கைதன்
கொய்தாம வாசக் குடிநீழற்கீ ழாறேனோ
வெய்தாமக் காம விடாய்'' —நளவெண்பா

இப்படிக் காம வேட்கையை வளர்த்துக் கொண்டு' மனக் கட்டுப் பாட்டை இழப்பதால் ஏற்படும் விபத்தே உயிர்க்கொல்லி நோய்.

''பழியோரிடம், பாபமோரிடம்'' என்னும் பழமொழிக் கொப்ப, தகாத உறவு எதற்கும் தங்களை ஆட்படுத்திக் கொள்ளாத பெண்களையும், குழந்தைகளையும், மற்றவர் களையும், மாற்று வழிகளில் நுழைந்து தாக்குகிறது இந் நோய். இதனால் இந்நோயை, நோய்களில் 'ஹிட்லர்' என்றுகூட குறிப்பிடலாம்.

இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் ஜெர்மன் அதிபர் ஹிட்லர் பிரெஞ்சு நாட்டைத் தாக்கத் திட்டமிட் டார். பரம்பரை பகை நாடான ஜெர்மனியின் தாக்கு தலை எதிர்பார்த்தது பிரான்ஸ். இரு நாட்டிற்கும் இடையே 'மகினாட்' என்னும் அரணைக் கட்டியிருந்தது. இந்த அரணைத் தாண்டித்தானே ஹிட்லரின் படை

பிரெஞ்சு நாட்டுக்குள் நுழைய வேண்டும், பார்த்துவிடுவோ மென்று அரணில் நம்பிக்கை வைத்து, பிரெஞ்சுப்படை அதன் பின்னே காத்திருந்தது. நீதிநெறிகளையும், மனித நேயத்தையும் ஹிட்லரின் படை, போர் நெறிகளை மீறி போரில் நடுநிலை வகித்த பெல்ஜியம், போலந்து ஆகிய நாடுகளைத் தன் வெற்றிப் பாதையாக மாற்றிக்கொண்டு அதன் வழியாகப் பிரெஞ்சு நாட்டுக்குப் பின்பக்கமாக நுழைந்து தாக்கியது. விளைவு பிரெஞ்சு அமைச்சர் ரெய்னாட், சர்ச்சிலுக்கு ''நாங்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டோமென்று'' தந்தி அனுப்ப வேண்டியதாயிற்று. எயிட்ஸ் நோயும் இப்படித்தான் சிலரை பின் பக்கமாக வந்து தாக்குகிறது. கணவன் வழியாக மனைவிக்கும், அவள் வழியாகப் பாலூட்டும் குழந்தைக்கும் இது பரவுகிறது.

பரத்தையர் பிரிவு என்பது இலக்கியங்களில் பேசப்படும் அங்கீகரிக்கப்பட்ட அசிங்கம். தலைவி சூல் கொண்ட காலத்தில், தலைவன் காம வேட்கையால் பரத்தையரை நாடுவது திருவள்ளுவர் காலத்திற்கு முன்னரே தீவிரமாக இருந்திருக்கிறது. உடற்றொழில் காரணமாக உயிர்க் கொல்லி நோயின் உறவாகிவிட்ட பொதுப் பரத்தையிடம் சென்று உடலுறவு கொண்ட குடும்பத் தலைவன் அவரிடமிருந்து எச்.ஐ.வி. என்னும் எயிட்ஸ் கிருமியை தன்னுடலில் ஏற்றிக் கொண்டுவந்து, தனது இனிய மனைவிக்கு இன்பத்தோடு உந்நோய்க் கிருமியையும் கொடுத்து விடுகிறார். இப்படித் தொற்றவிடும் தொண்டு அறியாமற் செய்யப்படும் அநீதி. அறிந்து செய்தாலும் அறியாமற் செய்தாலும் விளைவு ஒன்றுதான். இப்படிப்பட்ட ஆண்களை நினைக்கும் போது :

''என்னிலே யிருந்ததொன்றை யானறிந்த தில்லையே
என்னிலே யிருந்த தொன்றை யானறிந்து
கொண்டபின்

என்னிலே யிருந்ததொன்றை யாவர்காண வல்லீரோ
என்னிலே யிருந்திருந்து யானுணர்ந்து கொண்டனே.''

என்னும் சில வாக்கியாரின் பாடல்தான் பளிச்செனத் தோன்றுகிறது.

ஒழுக்கங்கெட்ட கணவனால், ஒழுக்கம்பேணும் மனைவிக்கு இக்கொடிய நோய் ஊட்டப்படுகிறது. ஒரு குடும்பத் தலைவனின் ஒழுக்கக் கேட்டால் ஏற்படும் பாதிப்பு அவனோடு நின்றுவிடுவதில்லை, அவனது பரம்பரையையே பாதிக்கிறது. எச்சரிக்கையாக இல்லாவிட்டால் இது குடும்ப நோயாகவே மாறிவிடும்.

குழந்தைகளுக்குத் தாய்ப்பாலைவிட சிறந்த உணவு வேறில்லை. அதனால்தானே புட்டிப்பால் விற்பனையை அரசு அடியோடு தடை செய்தது. பாலூட்டும் தாய், சீசரின் மனைவி ஐயத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டுமென்றாற்போல், தாய் நோய்களுக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும். நோய்வாய்ப்பட்ட பாலூட்டும்தாயே, குழந்தை நலனை பாதிக்கும் நோய்க் கிருமிகளின் தூதராக, தொடர்பாளராக மாறிவிடக் கூடிய ஆபத்து உண்டு. பாலூட்டும் தாய் உணவு, உடல் கட்டுப் பாட்டோடிருக்க வேண்டுமென்பது இதனால்தான். தாய் நோய்வாய்ப்பட்டிருந்தால், அவள் குழந்தைக்குப் பாலூட்டுவதைத் தவிர்க்க வேண்டும். அப்படிச் செய்தால் தாய் வழியாக குழந்தைக்கு நோய் வருவதைத் தடுக்கலாம்.

உயிர்க்கொல்லி நோய், தனது வருகையையும்; குடியேற்றத்தையும்; அவசரப்பட்டு வெளிப்படுத்தி விடுவதில்லை. நீர் எப்படி வெப்பத்தை விரைந்து வெளியிடுவதில்லையோ, அப்படி இந்த நோயும் சீராகவே செயல்படுகிறது. எனது அடிகள் அளந்தே வைக்கப்படுகின்றன என்னும் ஷேக்ஸ்பியரின் சொற்கள் இதற்கு பொருந்தும் இதன் ஆர்ப்பாட்டமில்லாத, அடக்கமான செயலும், இதன்

வெற்றிக்கு முக்கிய காரணம். ஏனெனில் இது தன் செயல் வலியை முழுமையாக எட்டிய பிறகே, பாதிக்கப்பட்டவர் இதன் வரவை அறிகிறார். அறியாமை காரணமாக நோயை மற்றவர்களுக்கு பகிர்ந்தும் கொடுத்து விடுகிறார்.

உயிர்க்கொல்லி நோய் நுழையும் புறவழிகளில் ஒன்று, இரத்தத்தை இழந்தவர்களுக்குச் செலுத்தப்படும் மாற்றார் இரத்தம். விபத்து மற்றும் பேறு காலத்தில் இழக்கப்படும் இரத்தத்தால் உயிருக்கே ஊறு நேரும் நிலை ஏற்படுகிறது. அந்த நிலையில் உயிரைக் காப்பாற்ற, ஒத்த தொகுப்பு குருதியுடையவர்களிடமிருந்து, இரத்தம்பெற்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்ற வேண்டி நேரிடுகிறது. அப்படிப்பட்ட நெருக்கடியான நேரங்களில் அச்சத்தின் காரணமாக—அறியாமையினால் இரத்தத்தின் இரத்தங்கள், தாங்களே முன் வந்து இரத்தம் கொடுக்காமல், பணத்திற்காகத் தமதுடல் இரத்தத்தை விற்பவர்களிடமிருந்து இரத்தத்தை வாங்கிக் கொடுக்கின்றார்கள். முன்பின் அறியாதவர்களிடம் பெறும் இரத்தத்தில், உயிர்க்கொல்லி நோய்க் கிருமிகள் இருக்கவும் வாய்ப்புண்டு. அப்படி எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவரின் இரத்தத்தைப் பெற்று செலுத்தப்படுபவர், எயிட்ஸ் நோயின் பாதிப்பை ஏற்றுக் கொண்டவராகிறார்.

இரத்தம் தேவைப்படும்போது, நெருங்கிய உறவினர்கள் முன் வந்து இரத்தம் கொடுக்கத் தயங்கக் கூடாது. நமது உடலில் தேவைக்கு மேற்பட்ட இரத்தம் உள்ளது. அதிலிருந்து அரை லிட்டர் அல்லது ஒரு லிட்டர் இரத்தம் கொடுப்பதால், உடல் நலன் எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டுவிடாது. ஒரு வகையில் அது உடல் நலனுக்கே கூட உகந்ததுதான். எனவே அவசர காலத்தில் நமக்கு வேண்டியவருக்குக் கூட இரத்தம் தேவைப்பட்டால், வேற்று ஆளைத் தேடுவதை விட்டுவிட வேண்டும்.

உயிர்க்கொல்லி நோய்க் கிருமிகள் உடலில் ஊடுருவும் வழிகளில் தலையாய மார்க்கம் ஒரு பால் உடலுறவு. இயற்

கைக்கு மாறான இந்த உறவு முறை ஆண்கள் மட்டுமே குழுமி வாழும் விடுதிகள், முகாம்கள் சந்தர்ப்ப சூழ்நிலை யொட்டி ஏற்பட்டு விடுகிறது.

சட்டப்படி தடை செய்யப்பட்டிருக்கும் இந்த உறவு முறை அரிதாகவே நமது நாட்டில் சிலரிடம் உள்ளது. குதக் குடல் இந்நோய்க் கிருமிக்கு, ஊட்டியைப்போல் உல்லாச மான இடம். குதக்குடல் புறமுகப்பே ஒரு பால் உடலுற வின் வினைத்தளமாக—உறவுக் களமாக இருப்பதால், நோய்க் கிருமிகள் இதில் தங்கி தங்கள் வினை வலியைக் காட்டுகின்றன.

நமது புராண இதிகாசங்களில் மகான்களாகவும், மாவீரர்களாகவும் பேசப்பட்டவர்கள்கூட ஒருபால் உடலுற வில் உள்ளம் தோய்ந்தவர்களாக இருந்துள்ளார்கள். மகா தேவர்களே ஆணோடு ஆண் அந்தரங்க உறவு கொண்டிருக் கும்போது, நாம் அதை எப்படித் தவறாகுமென எண்ணு வது இயல்புதானே? அவர்களுக்கு ஏற்படாத எயிட்ஸ் நமக்குமட்டில் ஏற்படுமென்பதை எப்படி நம்புவதென்று கூட வாதம் செய்யப் படுகிறது.

எந்தத் தவறுமே, ஏதோ ஒரு சூழ்நிலையில் எப்போதோ ஒருமுறை, விரும்பியோ, விரும்பாமலோ செய்யப்படும் போது, பெரிய பாதிப்பு ஏற்பட்டுவிடுவதில்லை. ஆனால் தகாத செயல் தொடர்ந்து செய்யப்படும்போது பெரிய பாதிப்புக்கு ஆளாவதும், ஆளாக வேண்டியதும் தடுக்க முடியாததுதான்.

உயிர்க்கொல்லி நோய் நுழையும் தலைவாசல் குதக் குடல். அதை வரவேற்று சிம்மாசனமளிப்பது ஒருபால் உடலுறவு. மனக்கட்டுப்பாட்டை இழந்து, அநாகரிக நடை முறைகளை கைக்கொண்டு கொடிய நோயை தாங்களே வலிந்து வரவேற்று இன்னலுக்கு இலக்காக்கிக் கொள்வதில் என்ன பெருமை?

செல்வழி நீண்டிருந்தாலும் அதைத்தான் பயன் படுத்த வேண்டும். அவ்வழியில் கால்வைத்து அவப் பெயரை ஈட்டு வதையும், ஆவியைப்பறிக்கும் உயிர்க்கொல்லி நோயின் உறவினராவதையும் இளையோர் தவிர்க்க வேண்டும், தடுக்க வேண்டும்.

ஒரு, தலை நகரை அடைவதற்குப் பல வழித்தடங் களும் நுழைவு வாயில்களும் இருப்பதுபோல, யுத்தத்தில் பல போர் முனைகள் இருப்பதைப்போல, எயிட்ஸ் நோய்க் கிருமிகள் மனித உடலுக்குள் நுழையவும், இரத்தத்தில் கலக்கவும் பல வழிகள் உண்டு. அவற்றுள் மற்றொன்று போதை மருந்து ஊசி. மாந்தன் தனது கட்டுப்பாட்டை இழக்கச் செய்கின்ற, தடுமாறவும், தடம்மாறவும் செய் கின்ற போதை மருந்தை, ஊசி மூலம் உடலில் செலுத்திக் கொள்ளும் பழக்கம் இந்தியாவைப் பொறுத்தவரை இறக்கு மதி சரக்கு.

பொருள் வளத்தாலும், ஆயுத பலத்தாலும், உலக ஆதிக்க ஆசைக்கு ஆட்பட்டு பிற நாடுகளின் உள்ளூர செயல்பாடுகளில் மூக்கை நீட்டி, சட்டாம்பிள்ளை வேலை செய்யும் அமெரிக்கா தான் போதை ஊசி பழக்கத்தைப் பதியம் போட்டு, அண்டை நாடுகளின் வேளாண்மைக்கு அனுப்பி வைத்தது. அறிவியல் ஆக்கங்களை மற்ற நாடு களுக்கு சென்றுவிடாமல் தடுத்து முடக்கி வைப்பதில் முனைப்பு காட்டும் அமெரிக்கா, இப்படிப்பட்ட அடாத செயல்களை முளைக்கவும், கிளைக்கவும் விட்டு, வெளி நாடு களையும் பாதிக்க வழி விட்டு விடுகிறது.

மேதைகளையும் சராசரிக்கும் கீழே கொண்டு வந்து நிறுத்தி, அவமானப்படுத்தி ஆனந்தப்படுவது போதை. குடி மூலம் ஏறும் போதையே குடும்பத்தைக் கெடுத்து விடுகிறது. குடலை அரித்து விடுகிறது. ஊசி மூலம் நேரடியாக இரத் தத்தில் சேர்க்கப்படும் போதையின் விளைவோ கடுமை யானது. இது நெருப்பைப் போர்த்திக்கொண்டு, நிழலுக்கு அலைவதற்கு நிகரானது.

போதை ஊசியின் பாதிப்பை, தீமையை அறிந்திருந்துங்கூட இளைஞர்கள் அதன் வயப்படுவது, மனக்கட்டுப்பாட்டை அவர்கள் இழந்து விட்டதை புலப்படுத்துகிறது. அணு ஆயுதத்தின் அழிவாற்றலை அறிந்தும், விஞ்ஞானிகள் அதனைத் தயாரிப்பதை ஒத்தது இச்செயல். போதையின் பிடியில் சிக்கிக்கொண்டு, மீள முடியாமல் கெட்டும், பட்டும் போகும் இளைஞர்களை எண்ணும்போது,

'சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப—முற்றுந் தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பேரின்பப் பாழ்கும்பி யில்'' [நீதிநெறி விளக்கம்]

என்னும் பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

போதை மருந்தை ஊசியிலேற்றி, அதை ஒருவர் மாற்றி ஒருவர்; உடலில் குத்திக் கொள்வதால், ஒருவர் உடல் இரத்தம் ஊசியில் தோய்ந்து அவருடல் எயிட்ஸ் கிருமி அதன் வழியே மற்றவருக்கு செல்கிறது. ஊசி ஒருவருக்குப் போடப்பட்டால், போட்டுக் கொண்டால், மற்றவர் அதைத் தமதுடலில் செலுத்தும்முன், செலுத்த அனுமதிக்கும் முன் அது கொதி நீரில் நன்கு காய்ச்சிடப்பட வேண்டும். இதன் மூலம் கிருமிகள் அழிந்து விடும்.

போதை மருந்தை ஊசி மூலம் ஏற்றிக் கொள்பவர்கள் இப்படிப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏதும் மேற்கொள்வதில்லை. பந்தியில் அப்பளம் போடுவதைப்போல் வரிசையாக ஒருவர் மாற்றி மற்றவரென, ஊசியை கிருமி நாசம் செய்யாமல் பயன்படுத்தி எயிட்சை பகிர்ந்து கொள்கிறார்கள், பாதிக்கப் படுகிறார்கள்.

போதை மருந்து பழக்கத்தைக் கைவிட்டால் ஊசி மருந்து வழியாக உயிர்க் கொல்லி நோய் பரவுவதைத் தடுக்கலாம். ஆனால் பெரும்பான்மை மக்கள் இந்நோயைப்பற்றி இன்னும் அறிந்திராததும், அறிந்தவர்களும் பொறுப்பற்று செயல்படுவதும், இந்நோய் நமது நாட்டில் ஆதிக்கம் செலுத்த பெற்ற அனுமதியாகிவிட்டது.

# மூர்த்தியும், கீர்த்தியும்

உயிர்க்கொல்லி நோய், உலகத்திற்கோர் புதிய வரவு. நெடுங்காலமாக நாம் அறிந்து வைத்திருக்கும் காசநோய்; புற்றுநோய்; வாந்தி பேதி நோய்களைப்போல், மனித உயிரைப் பறிக்கும் வேலையைத் தானே செய்வதில்லை. வசதிமிக்கவர்கள், தம் பகையாளியை வீழ்த்த தானே நேரில் மோதாமல், அடியாள் மூலம் தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதைப் போலவே எயிட்சின் செயலு மிருக்கும். உயிரைக் கொல்லும் மற்ற நோய்களுக்கு முன் நின்று எதிர்ப்பின்மையை ஏற்படுத்திக் கொடுத்து, நோய்கள் முழு வீரியத்துடன், தடுப்பேதுமின்றி தாக்கிட உதவுவதுதான் எயிட்ஸ்.

எச். ஐ. வி. எனப்படும் உயிர்க்கொல்லி நோய்க் கிருமி கள், நமது இரத்தத்தில் நோய் எதிர்ப்புச் சக்தியாக விளங் கும் 'லிம்போசைட்' அணுக்களை ஒழிப்பதுடன், அழிவுச் சக்தியாக விளங்கும் டி. 8. என்னும் அணுக்களை அதிகரிக் கச் செய்து, நோய்களுக்கு வீரியத்தையும், மாந்தனுக்கு வேதனையையும் கொடுக்கின்றன.

எயிட்ஸ் கிருமிகள் இரத்தத்தில் கலந்தால் சாதாரண நோய்கள், மருந்தால் தீர்க்கப்படக் கூடிய நோய் கூட தீராத நோய்களாகத் திருப்பம் பெறுகின்றன. தடுப்பாரின் றேல் கிளர்ச்சிகள் முற்றுவதும், கேட்பாரின்றேல் அடா வடித்தனங்கள் அதிகரிப்பதும் இயல்புதானே?

காவலரைக் கண்டால் கதி கலங்கும் வழிப்பறியாளன், அவரே ஓய்வு பெற்றுவிட்டால், அவரையே இடித்துக் கொண்டு நடப்பதற்கிணையானது இது. எயிட்ஸ் நோயாளிக்கு சாதாரண வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் கூட, அது மருந்துக்குக் கட்டுப்படாமல், உயிரைப் பறித்துவிடும் உறுபடையாகி விடுகிறது.

காசநோயானாலும், பால்வினை நோயானாலும் எயிட்ஸ் தாக்குதல் இல்லாதவருக்கு ஏற்பட்டால் மருத்துவர்களால், மருந்தால் அதனைத் தீர்க்க முடியும். ஆனால் அதே நோய்கள் எயிட்ஸ் நோயாளிக்கு ஏற்பட்டால் அது மரணத்தில்தான் முடியும்.

மற்ற நோய்கள், தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளும் நல்ல எதிரிகள். அவை நால்வகைப் படைக்கு நிகரானவை. ஆனால் எச். ஐ. வி. கிருமிகளோ ஐந்தாம் படையை ஒத்தவை. ஐந்தாம் படையினரான ஒற்றர்கள், தங்களை அடையாளம் காட்டிக்கொள்ளாமல், அழிவுக்கான அடிப்படை வேலைகளைச் செய்வதுபோல், எச்.ஐ.வி. கிருமிகளும் எளிதில் கண்டறிய முடியாதபடி உளவுப் படையைப் போல் செயல்படுகின்றன. ஐந்தாம் படை என்னும் உளவுப்படை, எதிரி நாட்டுக்குள் நுழைந்தாலும், மற்ற படைகளைப்போல் இவை எதிரியோடு மோதுவதில்லை. எச். ஐ. விக்களும் அப்படித்தான்.

போர்க்கலையோடு ஒப்பிடும்போது, எச். ஐ.விக்களை, தரைப் படைக்கு உதவும் விமானப்படை என்று கூட குறிப்பிடலாம். விமானப்படை குண்டு மாரி பொழிந்து, அரண்களையும், ஆலைகளையும் தாக்கித் தகர்த்தும், தரைப் படைக்கு அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஊட்டி, தமது படையின் முன்னேற்றத்திற்கு உதவுவதைப் போன்றே, எச். ஐ. விக்கள் லிம்போசைட்களை அழித்து அடக்கியும் அழித்தும் மற்ற நோய்க்கிருமிகளின் முன்னேற்றத்திற்கு உதவுகின்றன.

உயிர்க் கொல்லி நோய் ஒருவருக்கு ஏற்பட்டதென்றால், பாதிக்கப் பட்டவரால் தலைவலி, காய்ச்சல், இன்னபிற நோய்களைப் போல் உடனே உணர முடியாது. இவை பசித்த நாய்கள் உணவை உண்பதுபோல் பரபரப்பாகச் செயல்படுவதில்லை. நல்ல விருந்தினரை பொறுமையாக இருந்து, அழைத்த பின் அமர்ந்து உண்பதைப் போல் இவையும் பொறுமையானவை. டாக்டர் குளுமெக் **(Clumech)** கூற்றுப்படி, இந்நோய் சாதாரணமாக ஏழு முதல் எட்டாண்டு காலத்திற்கு பிறகே ஒருவருடைய குருதியில் தான் குடியேறியதை வெளிப்படுத்துகிறது. ஆனால் அண்மைக்கால ஆய்வுக்குப் பின், இது மூன்று மாதங்களிலிருந்து, ஏழாண்டு காலத்திற்குள் தனது குடியேற்றத்தை அறிவித்து விடுவதாகத் தெரிகிறது.

மிக அமைதியாக, மறைந்திருந்தே தன் அழிவு வேலையைச் செய்யும் உயிர்க் கொல்லி நோய்க்கு ஆட்பட்டவர்கள், அப்பாவித் தனமாக இருந்து எச்.ஐ.வி. அதன் வேலையைத் தங்கு தடையின்றிச் செய்ய விட்டு விடுவதைத் தவிர மாற்று வழியில்லை.

கனன்று கொண்டிருக்கும் எரிமலை, எதிர்பாராத நேரத்தில் திடீரென வெடித்து, அழிவை ஏற்படுவதைப் போல், இந்நோய், தான் பற்றிய நபரைச் செயலிழக்கச் செய்து, மரணத்தின் மடியில் போட்டு விடுகிறது. அந்த நிலையில், மருத்துவ விஞ்ஞானம் தனது இயலாமையை ஒப்புக் கொண்டு, தலையைத் தாழ்த்திக் கொள்வதைத் தவிர வேறொன்றும் செய்ய முடிவதில்லை.

உயிர்க் கொல்லி நோய் உள்ளதை அறிவது எவ்வாறு? இந்த நோய் தனக்கு ஏற்பட்டிருக்குமா என்ற ஐயம் யார் யாருக்கெல்லாம் எழ வேண்டும்? நோயை மேம் போக்காக அறியக் கூடிய வாய்ப்புண்டா என்றெல்லாம் தற்போது பரவலாக ஓர் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இது வரவேற்கத் தக்க நல்லதோர் மாற்றம்.

எச். ஐ. வி. உள்ளவர்கள் நல்ல உடற் கட்டுடையவர் களாக இருந்தாலும், எதிர்பாரா வேளையில், நம்ப முடியாத வேகத்தில் தமது எடையைப் பத்து விழுக்காட் டளவுக்கு இழந்து விடுவார்கள். காய்ச்சலும் வயிற்றுப் போக்கும் வாரக்கணக்கில் தொடர்ந்து நீடிக்கும். அக்குள், கழுத்து ஆகிய இடங்களில் நெறி கட்டிக் கொள்ளும். உட லெங்கும் இரத்தக் கட்டிகள் (கப்போசிஸ் சார்க்கோமா) தோன்றும். எந்த மருந்துக்கும், எப்படிப்பட்ட மருத்து வருக்கு இது கட்டுப்படாமல் நீடிக்கும்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் பால்வினை நோய்களும், காச நோயும் கட்டுக்கடங்காமல் வளர்ந்து விடும். உட லுறுப்புக்கள் செயலிழக்கும். ஒரே வரியில் குறிப்பிட வேண்டுமானால் எச். ஐ. வி. இரத்தத்தில் இருந்தால் அதிகாரி வீட்டு கோழி முட்டையின் ஆற்றல் நோய்க் கிருமிகளுக்கு வந்து விடும். (அதிகாரி வீட்டுக் கோழி முட்டை அம்மியையும் உடைக்கும் என்பது, அதிகார ஆற்றலை, செருக்கை விளக்க வழங்கும் பழமொழி) எச். ஐ. வி.க்கு இது மிகப் பொருத்தமான உவமைதானே!

மேற்கூறிய உடல்நிலை மாற்றங்கள் ஒருவருக்கு ஏற்பட் டிருக்குமானால், அவரை உயிர்க் கொல்லி நோய் தன் பிடிக் குள் கொண்டு வந்து விட்டதென்று பொருள். எனினும் ஐயமற அறிந்து கொள்ள மேலும் சில ஆதாரங்களை கண்டறிய வேண்டும். அதற்கான வழி, வகை என்ன?

எயிட்ஸ் நோய் இருக்கலாம் என்ற ஐயம் தோன்றிய வுடன், அவருடைய இரத்தத்தை சோதனை செய்யவேண் டும். **(Emzyme linked immuno Sorbent assey)** என்பதன் சொற் சுருக்கமான **(ELISA)** எலிசா சோதனை மூலம் கிருமி நுழைந்துள்ள தடயத்தை முதலில் கண்டறிவார்கள். தடயம் தெரிந்தபின் வெஸ்ட்டர்ன் பிளாட் **(Western blot)** என்னும் சோதனை மூலம் உயிர்க்கொல்லி நோய்தான் என்பதை உறுதி செய்வார்கள்.

இந்நோயைக் கண்டறியும் வசதி வாய்ப்புக்கள் நமது நாட்டில் எந்த அளவுக்கு உள்ளன என்பது இயற்கையாக எழும் வினா, இதற்கு இல்லை என்றோ, உண்டு என்றோ ஒட்டுமொத்தமாகக் கூறிவிட முடியாத நிலையில் தான் நாமிருக்கின்றோம். வேலூரில் கிருத்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இந்த நோயைக் கண்டறியும் சோதனை வசதிகள் உள்ளன. இந்த வசதியைப் புகழ் பெற்ற மேலும் சில தனியார் மருத்துவமனைகளும், அரசின் தலைமை மருத்துவமனைகளும் காலப்போக்கில் பெறலாம்

இந்நோய் குறித்து விழிப்புணர்வு பெற முதற்கட்ட. சோதனையாகத் தடயத்தைக் கண்டறியும் எலிசா சோதனை வசதியையாவது எல்லா மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனைகளுக்கும் ஏற்படுத்திக் கொடுத்தால், 'இரத்த தானம்' மூலம் இந்நோய் மற்றவருக்குப் பரவுவதைத் தடுக்க ஏதுவாகும். ஆனால் இந்த வசதியைப் பெறக்கூட நாம் பல்லாண்டு காலம் காத்திருக்க வேண்டியும் நேரலாம். நமது நிதிநிலையும், மதிநிலையும் அப்படி.

இருக்கின்ற மருத்துவ வசதிகளே கூட ஏழைகளுக்கு எட்டாததாகவும், கிட்டாததாகவும் இருக்கும்போது எயிட்சு சோதனை வசதி வந்தால் மட்டுமென்ன அது 'இல்லாதவர்களுக்கு' இனிக்கும் செய்தியாகி விடுமா என்ன? எது வந்தாலும் அதனால் பயன்பெறப் போவதும், பயன் படுத்திக் கொள்ளப் போவதும் பணம் படைத்தவர்களே என்றாலும், பரவி வரும் பயங்கரத்திற்கு ஒரு பரிகாரம் கிடைக்கிறதே என்பது ஆறுதளிக்கக் கூடியதுதானே? வசதிகள் வரட்டும், அது எல்லாருக்கும் கிடைக்கிறதா என்பதைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.

'இன்று' எல்லாரும் ஓர் நிறை, என்பதும், ''எல்லாருக்கும் எல்லாம்,'' என்பதும் வாக்குச் சாவடி வரை வந்த உண்மை! இதை பரவலாக்கி எல்லா இடத்திற்கும் எடுத்துச் செல்ல வேண்டியது சமுதாயக் கடமை! அரசின் பொறுப்பு. நாளிதுவரை

"பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை,
அருளிலார்க்கு அவ்வுலகமில்லை"

என்பது பழுதுபடாமல் பாதுகாக்கப்பட்டு வரும் பழமொழி.

"எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமைஎலாம்,
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!
எல்லார்க்கும் கல்வி, சுகாதாரம் வாய்ந்திடுக!"

என்று பாவேந்தர் கூட ஆசைப்பட்டார். இல்லாத ஒன்றுக்காக ஏங்குவது இயல்புதானே?

மாந்தரினத்திற்கே மருட்டலாக வந்துள்ள உயிர்க் கொல்லி நோயைப் பொறுத்தவரையிலாவது, நோய் எப்படி ஏழை, பணக்காரனென்று பார்ப்பதில்லையோ, அப்படி இருப்பவர் இல்லாதவர் என்ற வேறுபாடு கருதாது சோதனைகளும், மருத்துவ வசதிகளும் எல்லாருக்கும் கிடைக்க அரசு வழிவகை காணுமென்று நம்புவோம்.

# அழிக்க முடியாத ஆற்றல்

உயிர்க் கொல்லி நோயின் ஆற்றலை ஒடுக்க, ஆதிக்கத்தைத் தடுக்க முடியவே முடியாதா? மக்களுக்கு மரண பயத்தை உண்டாக்கி மன உளைச்சலை ஏற்படுத்தும் எயிட்ஸ் நோய்களுக்கு எதிர்ப்பே இல்லையா? என்னும் வினாக்களுக்கு விஞ்ஞானம் விடை தேடிக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை நிலை.

விண்ணை வென்று வரும் விஞ்ஞானம்; சந்திரனில் விடுதி ஏற்படுத்தி விருந்துண்ணும் அளவுக்கு வெற்றிபெற்ற அறிவியல், எயிட்ஸ் நோய்க்கிருமியிடம் போராடிக்கொண்டு தானிருக்கிறது. வெற்றி பெறாமற் போய்விடுமோ என்று அச்சப்படத் தேவையில்லை. மருத்துவ அறிவியலுடன் கொரில்லாப் போர் நடத்திய புற்றுநோய் கூட, இன்று மருத்துவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

எயிட்சுக்கு எதிரான போர்முனை திறக்கப்பட்டு விட்டது. ஆய்வுக் கூடங்களில் ஆயுத ஆக்கமும், ஆய்வும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆய்வுக் கூடத்தின் கதவை வெற்றி வந்து தட்டும் ஒலி கேட்கிறது. எளிதில் கிடைக்கக் கூடிய வேப்பெண்ணெய் உயிர்க் கொல்லி நோய்க்கிருமியின் வைரி என்றும், அதனால் எயிட்சின் வளர்ச்சியைக் கட்டுப் படுத்த முடியுமென்றும் நம்நாட்டு மருத்துவர்களால் கூறப் படுகிறது. ஆனால் ஆராய்ச்சி மூலம் இது இன்னும் நிரூபிக் கப்பட்டதாகத் தெரியவில்லை. இன்றைய நிலையில் உயிர்க்கொல்லி நோய்தான் பெருவலி பெற்ற நோய்களின்

பேரரசன்; அழிக்க முடியாத ஒழிக்க முடியாத புதிய அவதாரம்.

"நோயை தீர்ப்பதைவிட, அது வராமற் காப்பதே மேல்" என்றார் கியூரி அம்மையார். நோயைத் தீர்ப்பது என்ற சொல்லுக்கே இடமளிக்காதது எயிட்சு. எனவே வரும்முன் காத்தலே இந்நோயைப் பொறுத்தவரை, நடைமுறைக் கேற்றது, இயலக் கூடியது.

வள்ளுவப் பெருந்தகை மிக நுணுக்கமாகவும், பொருத்தமாகவும் கூறிய கருத்து இந்நோய்க்கு ஏற்ற அறிவுரையாக அமைந்துள்ளது.

"வருமுன்னர்க்காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்பது எயிட்சைப் பொருத்தவரை உண்மைதானே?

உயிர்க் கொல்லி நோய் வரும் வழியை அறிந்தபின், அதன் தாக்குதலிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள தற்போதுள்ள ஒரே வழி, நோய் வரும் வழியில் நாம் செல்லாமலிருப்பதுதான். அப்படி என்றால்...? விழி இமை விரிகிறதல்லவா? வினாக்குறி தெரிகிறதல்லவா?

விலைமகள் உறவை வெறுத்தொதுக்க வேண்டும். சிலைநிகர் மனையாள் உள்ளன்பை மதித்து, இல்லறத்தில் நல்லறம் பேண வேண்டும். பொன் பொருளுக்காக மனைவியை விலக்கி வைத்துவிட்டு, விடுதி உணவாக எண்ணி வேசியரை நாடுவதைத் தவிர்க்க வேண்டும். கெட்டுப் போகாதவர்கள், கெட்ட எண்ணமே கிட்டே வராதபடி, புலனடக்கத்தோடு வாழ வேண்டும். எயிட்சு நுழையும் புறவழிகளில் எச்சரிக்கையோடிருக்க வேண்டும்

உடலுறவென்பது இயற்கையின் நியதி. வாழ்க்கைச் சட்டமும் கூட. அதில் மாறுபடுவதோ, எல்லை மீற நினைப்பதோ முறையுமல்ல, எல்லாராலும் முடியக் கூடி

யதுமல்ல. துறவு என்ற பெயரில் பெண்ணுறவை அறுத்துக் கொள்வதாகவும், வெறுத்து நடப்பதாகவும் பேசுவதும், நடப்பதாக நடிப்பதும் இயற்கைச் சட்ட மீறலாகும். பெண்ணுறவென்பது அருவருக்கத் தக்கதுமல்ல, அடாத செயலுமல்ல.

உடலுறவில் கிடைக்குமின்பம், கால அளவால் அற்ப மானது. அதனால்தான் அதனைச் சிற்றின்பம் என்றனர் முன்னோர். அது மனத்தைத் தன் வயப்படுத்திக்கொண்டு, துய்க்கத் தூண்டி, அலைக்கழித்து, ஆவேசப்படுத்தி, ஒழுக் கக் குறைவுக்கே உறவாக்கிவிடுகிறதே. எத்தனை ஆற்றல் அதற்கு? மாந்தனின் உடல் வளத்தையும், மன நலத்தை யும் சுரண்டிவிடும் அளவுக்கு அதன் ஆற்றல் விரிந்தது என் பது ஒப்புக்கொள்ளத்தக்க உண்மைதானே? எனவே உட லுறவை முற்றும் ஒதுக்கவும் தேவையில்லை. அதுவே கதி யாக இருக்கவேண்டிய அவசியமுமில்லை.

சிற்றின்பத்தில் ஊறித் திளைத்து, ஓடாகிப் போன பின்னர்தான் அருணகிரியாருக்கு, சொந்த பட்டறிவால் சந்த வெள்ளம் கரைபுரண்டு வந்தது. பட்டு கெட்டபின் அருணகிரி அறிவொளி பெற்றார். திருப்புகழ் கிடைத்தது.

பட்டினத்தடிகளாருங் கூட சிற்றின்ப புதைச் சேற்றில் சிக்கிடாதீர்களென, தனக்குக் கை வந்த கலையான கவிதை வழி எச்சரித்தார்.

''வாய்நாறுமூழன் மயிர்ச்சிக்குநாறிடு மையிடுங்கண்
பீநாறுமங்கம் பிணவெடிநாறும் பெருங்குழிவாய்
சீநாறும் யோனி யழனாறு மிந்திரியச் சேறுசிந்திப்
பால்நாறு மங்கையர்க் கோலிங்கனே
மனம்பற்றியதே!''

என்று படித்த அளவிலேயே அருவருப்பு ஏற்படும் வகையில் பாடி வைத்தார். இதைவிட மிகைப்படுத்தி சிற்றின்ப ஆசைக்கு எதிராகப் பேச முடியுமா? எண்ண முடியுமா? எழுத முடியுமா? ஆடவர் கோழிகளாக இல்லாமல், குமரர்

களாக, சிற்றின்ப நாட்டத்தை கட்டுப்படுத்தக் கூடிய மன உரம் பெற்றவராக விளங்க வேண்டுமென்ற ஆதங்கத்தில், எச்சரிக்கையாக நல்ல கருத்துக்களை அள்ளிக் கொடுத் திருக்கின்றார்கள்.

காவிக்குள்ளே காமக் குகைகளுமுண்டு. இல்லறத்திலே நல்லறக் கோபுரங்களுமுண்டு. வள்ளலார் இராமலிங்க அடிகளும், அண்ணல் காந்தியடிகளும் இல்லறத்திலேயே நல்லறம் பேணவில்லையா? தந்தை பெரியாரும், தமிழ்த் தென்றல் திரு. வி. க.வும் இல்லறங்கண்ட இன்முக முனிவர் களல்லவா?

உடலுறவே இல்லையெனில் மனித இனம் பூண்டற்றுப் போய்விடாதோ? உடலுறவு வேண்டும். அஃது அளவோ டிருந்தால் அகத்திற்கும் புறத்திற்கும் கூட ஆதரவானது தான். ''மீதூண் விரும்பேல்'' என்றது வயிற்றுப் பசிக்கு மட்டுமல்ல, உடற்பசிக்கும் பொருந்தக் கூடிய பொதுவான அறிவுரைதான்.

மழை வேண்டும். ஆனால் அது வெள்ளப் பெருக்காகி விடக் கூடாதென்றாற்போல் ஆண் பெண் உடலுறவு அவசியந்தான். ஆனால் அதனை ஊறுகாயாகப் பயன் படுத்த வேண்டுமேயன்றி, உணவாகவே மாற்றிக்கொள்ளக் கூடாது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற உன்னத நெறி தடம் மாறாமல் பார்த்துக் கொள்வோமானால் உயிர்க்கொல்லி நோய், பட்டினியால் பரிதாபமாக இளைத்துப் போய் விடும், இறந்துங்கூடப் போகலாம்.

ஆணுடன் ஆண் உடலுறவு கொள்வது இயற்கைக்கு எதிரான செயல். இளையோர் உயர்ந்த நோக்கமின்றி யும், சாதிக்க வேண்டுமென்ற வேட்கைகுன்றியும் சோம்பித் திரியும்போதுதான், இப்படிப்பட்ட முரணான ஆசைகள் முளைவிட முடியும். படைக்கும் சிந்தனை; போராடும் உணர்வு, உழைக்க வேண்டுமென்ற உந்துதல் உள்ளவர்களி டம், இத்தகைய கீழான ஆசைகள் அரும்புவதில்லை.

இளைஞர்கள் இலக்கிய உணர்வோடும், இலட்சிய வேட்கையோடும் இலங்குவதே ஆணுடன் ஆண் உறவெனும் அருவருக்கத்தக்க சிந்தனை, செயலிலிருந்து விடுபட உள்ள உன்னத வழியாகும். இந்த முறைகேடான உறவு முறையை ஒதுக்கி விடுவோமானால், ஒழித்து விடுவோமானால் உயிர்க்கொல்லி நோயின்ஒருகால்'முடமாக்கப் பட்டுவிடும். நாட்டின் தூண்கள் துரும்பாகி, தூசாகிப் போகாமல், வரலாற்று வரிகளில் நிற்கக் கூடிய, நிலைக்கக் கூடிய வல்லாளராகவும், சொல்லாளராகவும் திகழ முடியும்.

போதைக்கு அடிமையானவன் மேதையாக முடியாதென்பது ஒருபுறமிருந்தாலும், அவன் அவனாக இருப்பதும் அதிக நாட்கள் வாழ்வதும் அரிதுதானே? வெறியூட்டும் உணர்வுக் கிளர்ச்சிக்காக போதைக்கு அடிமையாகும் இளைஞர்கள், தங்களுக்குத் தாங்களே தீயிட்டுக் கொள்பவர்களாக, உற்றார், சுற்றத்தின் மன அமைதியை அரித்தெடுக்கும் செல்லெறும்புகளாக மாறுகின்றார்கள். அவர்களை சமூகம், நச்சுக் கிருமியின் மனித வடிவமாகவே மதிக்கும், பழிக்கும்.

மரண பயணத்தில் மகிழ்ச்சியைத் தேடும் போதையின் அடிமைகள், வாய் வழியாகவும், நாசி வழியாகவுமட்டுமன்றி ஊசி மூலமாகவும் இரத்தத்தில் போதை மருந்தைக் கலக்கச் செய்கின்றார்கள். தேநீர் குவளையைக் கூட ஒருவன் பருகியபின், அதை நீரில் கழுவிய பின்னரே மற்றவர் பருக ஊற்றிக்கொடுக்கின்றார்கள். கழுவப்படாத குவளையில் தேநீர் கொடுக்கப்பட்டால் அதை அசுத்தம் என்பதைவிட மாபெரும் இழிவாகவே எண்ணுகின்றோம். ஆனால் ஒருவனுடைய உடலில் ஏற்றிய போதை மருந்து ஊசி மட்டில், வெந்நீரில் கழுவப்படாமல், காய்ச்சப்படாமல் அப்படியே பல இளைஞர்களின் உடலில் நுழைந்து வெளி வருகிறது. பயணச் சீட்டின்றித் தொடர் வண்டியில் பயணம் செய்யும் இரவலர்போல், இந்த ஊசி பலர் உடலில் பயணம் செய்து, உயிர்க்கொல்லி நோயை அழைத்து வரு

கிறது. இப்பழக்கம் ஒழிக்கப்படுமானால், எயிட்சின் இரண்டாவது காலும் வெட்டப்பட்டதாகிவிடும்.

உடல்நலம் குறைந்தவர்கள், மருத்துவரிடம் சென்றால் என்ன நோய்? எதனால் வந்தது என்பதை அறிந்து கொள்ள ஆர்வப்படுவதைவிட, மருந்து மாத்திரையைப் பெற்று உட்கொண்டு, நோயைப் போக்கிக் கொள்ள விரும்புவதைவிட ஊசி போட்டுக் கொள்வதிலேயே கருத்தாக இருக்கின்றார்கள். ஊசி என்றாலே அஞ்சிய காலம் மறைந்து, ஊசிதான், உடல் நோய் தீர்க்கும் ஒரே வழி என எண்ணும் தவறான போக்கு தலையெடுத்திருக்கிறது.

நோயாளிக்கு வாய் மூலமாக மருந்தை உட்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும் போதும், அவசர அவசியம் கருதியும் மருந்தை உடலில் செலுத்தக் கையாளக் கண்டு பிடிக்கப்பட்டதே ஊசி மூலம் மருந்தேற்றும் முறை. காலப் போக்கில் ஊசி மருந்து நேரடியாக இரத்தத்தில் கலந்து விரைவாக நோயிலிருந்து விடுதலை கிடைக்கிறது என்பதற்காக எல்லாராலும் வலியுறுத்தப்படும் மருத்துவ உதவியாகி விட்டது. உண்மையில் ஊசி மருந்தைவிட, உட்கொள்ளும் மருந்தே அதிக நேரம் உடலில் தங்கி வேலை செய்கிறது.

தனியாகத் தொழில் நடத்தும் மருத்துவர்களில் சிலர், மக்களின் மன நிலையைப் புரிந்துகொண்டு, நோய்க்குரிய மருந்து மாத்திரையோடு, அவசியமில்லாவிடினும் ஊசியைக் குத்தி, நோயாளிக்கு மன நிறைவை உண்டாக்கித் தங்களின் பணவரவு பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்கிறார்கள்.

பரபரப்பான உலகில் எல்லாமே அவசரந்தான். மருத்துவர்களுக்கோ ஒவ்வொரு மணித்துளியும் பணம் காலம். ஒரே ஊசியை மருத்துவர்கள் பலருக்கும் பயன்படுத்தும்போது, அதை ஒருவருக்கு உபயோகித்து, அடுத்தவருக்குப் பயன்படுத்தும் முன், முறையாக வெந்நீரில் வேக வைத்துத் தூய்மைப்படுத்தப்படாமற் போனால், போதை மருந்தை

ஏற்றப் பயன்படுத்திய ஊசியின் விளைவையே இதுவும் ஏற்படுத்தும். ஒருவருக்கிருக்கும் எய்ட்சு நோய்க்கிருமி மற்றவருக்குத் தொற்றிக்கொள்ளும் வாய்ப்புண்டு. எனவே தான் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தி, எறிந்துவிடக்கூடிய **(Disposable needles)** நடைமுறைக்கு வந்துள்ளது.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தி எறிந்துவிடும் ஊசியை, சிறு தொகைச் செலவைக் கருதாமல் பயன் படுத்தும் முறையைக் கையாண்டால் பெரிய நோயினின்றும் நம்மைக் காத்துக்கொள்ள முடியும். மருத்துவர்கள் இதனைக் கட்டாயமாக்கிக் கொள்வது அவசியம். இதன் மூலம் எயிட்சின் கரமொன்றைத் துண்டித்து முடமாக் கலாம்.

ஏற்பது இகழ்ச்சி என்பது பாலபாடம். இரத்தம் இதற்கு விதிவிலக்கல்ல. பணத் தேவைக்காகச் சிலர் அடிக்கடி இரத்தத்தை விற்பதும், மருத்துவ மனைகளில் அவசரத் தேவைக்கு அதனை ஏற்றுக்கொள்வதும் நடை முறையில் உள்ளது. பணத் தேவைக்காக தமதுடல் இரத்தத்தை விற்பவர்கள், எயிட்சு நோயால் பாதிக்கப் படாதவராக இருப்பார் என்பதற்கு எவ்வித உறுதிப்பாடு மில்லை. தற்போது மருத்துவமனைகளில் உள்ள இரத்தப் பரிசோதனைக் கருவிகள் மூலம் எய்ட்சு நோய்க் கிருமியைக் கண்டறிய முடியாது. எனவே முன்பின் அறியாதவரின் இரத்தத்தை ஏற்பதைத் தவிர்த்து, உற்றார் உடல் இரத்தத்தை மட்டில் அவசரத்திற்கு ஏற்றுக்கொள்வது உயிர்க்கொல்லி நோயின் எஞ்சிய கரத்தை ஒடித்து ஓரங் கட்டுவதற்கொப்பாகும்.

பொது மகளிருடன் உறவு கொண்டு திரும்பி வந்த, திருந்தி வந்த குடும்பத் தலைவன் மூலம், குடும்பத் தலைவிக்கு, அவன் விலைமகளிடம் வாங்கி வந்த எயிட்சு நோய் தொற்றிக் கொள்ளாமற் தடுக்க, இல்லற இன்பத்தை இழப்பதொன்றுதான் வழியா? இதற்கு மாற்றில்லையா? இல்லாமலென்ன, இருக்கிறது. ஆனால் அதை நூற்றுக்கு

நூறு பாதுகாப்பானதென ஏற்றுக் கொள்ளவோ எண்ணவோ இயலாது. மாற்றுவழி இல்லாததால் இதனை ஓரளவு பாதுகாப்பானதென ஏற்றுக் கையாள்வதைத் தவிர மாற்றில்லை. தற்போதைக்கு எயிட்சுக்கு எதிரான பாதுகாப்புக் கவசம் நீரோத் ஒன்றுதான். உடலுறவுக்கு இதை பயன்படுத்திக் கொள்வதொன்றுதான் எல்லாருக்குமே பாதுகாப்பானது.

அந்தரங்கம் என்பதே இல்லை என்ற அளவுக்கு எல்லாமே பேசும்படமாகவும், 'சின்னத்திரை' ஒலி, ஒளி நாடாக்களாகவும், பாடலாகவும், கதைகளாகவும் அரங்கேறி கொண்டிருக்கும்போது, நீரோத் மட்டில் பொதுவில் —கேட்கக்கூடாத சொல்லாக, பார்க்கக் கூடாத பொருளாகச் சிலர் கருதுவது போலித்தனமான, வெட்கமே! எனவே தேவையான, பாதுகாப்பான, ஆணுறையை தயக்கமின்றிப் பயன்படுத்த வேண்டியது அவசியம். தற்போது இதில் இயற்கைப் புணர்ச்சியில் ஏற்படும் ஈரக்கசிவுக்குக்கூட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே எந்தவித மனக்குறைக்கும் இடமின்றி, நிறைவளிக்கும் நீரோத்தைப் பயன்படுத்தி ஆருயிர் துணைவிக்கும், அன்புக் குழந்தைக்கும் எயிட்சு பாதிப்பின்றி பாதுகாக்கும் அரிய கருவியைப் பயன்படுத்தி இல்லற இன்பத்தைத் துய்க்கவும், எயிட்சு பரவாமல் தடுக்கவும் மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றார்கள்.. ஏற்பதே அறிவுடைமை.

உயிர்க்கொல்லி நோயை ஒரு வகையில் நல்ல நோய் என்றுகூட குறிப்பிடலாம். கொடிய நஞ்சுடைய நாகத்தை நல்ல பாம்பு என்றழைப்பதைப்போல், எயிட்சுக்கும் 'நல்ல' என்ற சொல் பொருந்தும். நாகப்பாம்பு யாரையும் தேடி வந்து கடித்து மரணப்படுத்துவதில்லை. கதையிலும், நாடகத்திலும் மட்டுமே அது வில்லனைப்போல் தேடிச் சென்று கடித்து மரணப்படுத்தும். ஆனால் அறிந்தோ அறியாமலோ தன்னைத் தீண்டியவர்களைத் தற்காப்புக்

காக நல்லப் பாம்பும் தீண்டுகிறது. அவ்வாறே மாந்தன் தெரிந்தோ தெரியாமலோ அவனாகத் தன் இரத்தத்தில் ஏற்றிக் கொள்ளாமல் மாற்று வழியில் காற்றால், நீரால் அது பரப்பப்படுவதில்லை. உடலுக்குள் நுழைவதுமில்லை.

கொசுவும், மூட்டைப் பூச்சிகளும் ஒருவரைக் கடித்து மற்றவரைக் கடிப்பதன் மூலம் சில நோய்களை மற்றவருக்குப் பரப்புவதைப்போல், தொற்றச் செய்வதைப் போல், எச். ஐ. வி. கிருமியைக் கடத்துவதில்லை. கள்ளக் கடத்தலை ஒப்புக் கொள்ளாத நல்ல கிருமி எச். ஐ. வி இரத்தத் தொடர்பின்றி அது மற்றவரை மாற்று வழியில் சென்றடைவதில்லை என்பதே இதன் பொருள். கொசுவாலும், மூட்டைப்பூச்சியாலும், ஈக்களாலும் இந்நோய் பரப்பக் கூடியதாக இருந்திருக்குமானால் மாந்தகுலமே பூண்டற்றுப் போய்விடுமே! இந்த வகையில் மனிதகுலம் பிழைத்தது.

உயிர்க் கொல்லியிடமிருந்து மாந்தன் தன்னைக் காத்துக்கொள்ள மேற்சொன்ன செயல்களில் எச்சரிக்கையாக இருப்பதொன்றுதான் வழி. நோய் வருமென்று தெரிந்தும் சிலர், மருத்துவர், மருந்து, பணம், செல்வாக்கு ஆகியவற்றால் பார்த்துக் கொள்ளலாமென்ற அசட்டுத் துணிவோடு தவறு செய்வதுண்டு. எயிட்சிடம் இவை செல்லுபடியாகாதென்பதை இவர்கள் உணர வேண்டும். வீணான நம்பிக்கையோடு எச். ஐ. வி.யைப் பற்றிக் கொண்டால் அதிலிருந்து விடுபடுவது நடுக்கடலில் ஊசியை எறிந்துவிட்டு எடுக்க முயல்வது போலாகிவிடும்.

''காசிக்குப் போனாலும் கருமந் தொலையாது'' என்னும் பழமொழியை அறிந்திருந்தாலும் காசிக்குப் போவோர் இருக்கலாம். கங்கையிலே கருமத்தைக் கழுவி விடலாமென்று நம்பலாம், ஆனால் அது வெற்று மன நம்பிக்கை மட்டுமே! உயிர்க்கொல்லி நோயைப் பெற்றுக் கொண்டவர்கள், இன்றைய நிலையில், அதனை விலக்கி விட்டு இறுதிப் பயணம் போக முடியாது, கடைசி வரை கூட வருவதும் கொண்டு போவதும் எச். ஐ. வி மட்டுமே என்பதை மறந்துவிடக் கூடாது. ஆம். உயிருள்ள வரை மட்டுமல்ல எரியும் வரை, புதைக்கப்படும்வரை உயிர்க் கொல்லி உடன் வரும்.

# எயிட்சின் இளமைக் காலம்

உலக வரலாற்றில் பதினான்காம் நூற்றாண்டு நிகழ்ச்சிகள் எத்தனையோ இருந்தாலும், ஐரோப்பாக் கண்டத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய நிகழ்ச்சி ஒன்றுண்டு. மனிதவர்க்கம் மருண்டும், துவண்டும் நின்ற சோக நிகழ்ச்சி அது. பிளேக் என்னும் கொள்ளை நோய் கொடி கட்டி ஆண்ட காலம். மின்னல் வேகத் தாக்குதல், தாக்கினால் வீழ்ச்சியன்றி மீட்சியில்லை என்ற அச்சத்தை ஏற்படுத்திக் கண்டத்தையே கதி கலங்கச் செய்திருந்தது அந்நோய்.

பிளேக் என்ற பெயரைக் கேட்டாலே ஐரோப்பியர்கள் குலை நடுங்கி அரண்டும் மிரண்டும் போனார்கள். அச்சம் இருக்கத்தானே செய்யும். ஐரோப்பாவின் மக்கள் தொகையில் கால் பங்கினர் கல்லறையில் இடம் பிடித்துக் கொண்டார்களென்றால், உள்ளம் பதறாதா? உடல் நடுங்காதா?

கொள்ளை நோயாகக் கொடூர நோயாகப் பிளேக் ஆட்சி செய்த அந்தக் காலம் மீண்டும் ஐரோப்பாவை மட்டுமல்ல, உலகையே அச்சுறுத்தும் உயிர்க் கொல்லி நோயாக உருவெடுத்து வந்துள்ளதென மருத்துவ உலகமே மலைத்துப் போயிருக்கிறது, தங்கள் அறிவுக்கும், ஆற்றலுக்கும் அறை கூவல் விட்டிருக்கும் இந்தப் புதிய நோய் அவர்களின் புகழொளியை அணைக்கும் போர்வையாகி விட்டது. எதிர்க்க முடியாமல் அவர் மக்களுக்கு எச்சரிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் மக்கள் மட்டில் இமைக் கதவைத் திறக்காமலேயே இருந்து வருகிறார்கள்.

"அரசன் அன்று கொல்வான், ஆண்டவன் நின்று கொல்வான்" என்பது நம் நாட்டில் உலவும் பழமொழி. அன்றே கொல்லும் நோயாக பிளேக் விளங்கியதால் மக்கள் அதற்கு அஞ்சினார்கள், அலறித் துடித்தார்கள்.

எயிட்சு நின்று நிதானித்துக் கொல்லும், கபட சாமியாராக இருப்பதால் மக்கள் ஏனோ தானோ வென்றிருக்கின்றார்கள். அறியாமையும், அலட்சியமும் நமது இரு விழிகளாயிற்றே!

மோசடிகளை நம்புவதில் முந்திக் கொள்ளும் நாம், ஏய்ப்பவர்களின் பின்னால் மூச்சு முட்ட ஓடுகின்ற நாம், அறிவியலின் அழைப்பை மட்டில் செவிமடுப்பதில்லை. இது தான் இந்தியா, இவர்கள் தான் தமிழர்கள்!

மத்திய ஆப்பிரிக்கத் தலை நகர் விடுதியொன்றில் மருத்துவர்களின் கலந்துரையாடல் நிகழ்ச்சி. மூத்த மருத்துவர் பேசும் போது எயிட்சு குறித்து கருத்துத் தெரிவித்தார். இதைப் பற்றிப் பேசும் போது அவர் நா தழதழத்தது, உதடுகள் உலர்ந்து போயின. பேச்சுத் தடுமாறியது. இந்த நோய் குறித்த அச்சம் அவரை அப்படி ஆட்டிப் படைத்தது. அவர் பணியாற்றிய மருத்துவமனை நோயாளிகளில் மூன்றிலொரு பங்கினருக்கு எயிட்சின் தாக்கம் இருப்பது தெரிந்தது. இந்நோய் பரவிய வேகம், கொன்று விடும் கொடூரம் குறித்து அவர் பேசும் போது, அவருள் குடிகொண்டிருந்த மனித நேயம், மக்களை நினைத்து அவர் கொண்ட கவலைதான் அவரைத் தடுமாறச் செய்தது.

எயிட்சு நோய் குறித்து அவர் எச்சரிக்கை செய்த போது, அந்த மருத்துவரின் வேலை பறி போகும் நிலை ஏற்பட்டது. அரசு ஏனோ அந்த எச்சரிக்கையை விரும்பவில்லை. உண்மை நிலையை உலகறியாமல் மூடி மறைக்கவே முனைந்தது. இதனால் நோயை அறிந்து கூறிய மருத்துவர் அமைதியாக தன்னையும் தன் வேலையையும் காத்துக் கொண்டார். தன் பெயர் வெளியே தெரியவிடாமலும் பார்த்துக் கொண்டார். இப்படித்தான் பல பயங்கரங்கள், விபரீதங்கள் மூடி மறைக்கப்பட்டு முழுவளர்ச்சி பெற்றபின் வெளிப்படுகின்றன.

உயிர்க் கொல்லி நோயின் தாயகம் ஆப்பிரிக்கா. அமெரிக்காவும், ஐரோப்பாவும் அதன் உல்லாச உறைவிடங்களாகி விட்டன. காலப்போக்கில் இந்நோய் அனைத்துக் கண்டங்களையும் அக்காள் வீடு, மாமன் வீடாக்கிக் கொண்டது.

ஆப்பிரிக்காவில் இந்நோய் காலூன்றிய போது, இது குறித்து அதிகமாக யாரும் அறிந்து கொள்ள அக்கறை காட்டவில்லை. ஆயத்தமில்லாதவர்களிடம், எச்சரிக்கை முழக்கம் எழவும் இல்லை; எழுப்பவுமில்லை; எழும்பிய ஒலி எடுபடவும் இல்லை. ஆனால் கண்டங்கடந்து, இது ஆசியாவுக்குள் பயணத்தைத் தொடங்கிய போதுதான் ஏராளமாக எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டது. ஒலி பிறந்தாலும் எயிட்சுக்கு வழி தடைபடவில்லை; பயணம் நிற்கவில்லை. தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றது.

ஆப்பிரிக்கர்களை இந்நோய் 1970-ஆம் ஆண்டின் மத்தியில்தான் தாக்கத் தொடங்கியது. கிழக்கு ஆப்பிரிக்காவின் லேக் விக்டோரியாவைச் சுற்றியுள்ள பகுதியில்தான் இந்நோய் முதன்முதலாக தனது அரங்கேற்றத்தை நடத்தியது. பின்னர் அண்டையிலுள்ள டான்சானியா, மற்றும் உகண்டாவுக்குள் ஊடுருவியது.

நகரங்களில் நுழைந்து பார்த்த இந்நோய், படிப்படியாக கிராமங்களையும் எட்டிப் பார்க்கத் தொடங்கியது. தென் மேற்கு உகாண்டாவின் சில கிராமங்களை முற்றுகையிட்டு, இந்நோய் அக்கிராமங்களைத் தனது கோரப் பிடிக்குள் கொண்டுவந்து, சின்னாபின்னப்படுத்தி சீரழித்துவிட்டது. அங்கே பழக்க வழக்கங்களால் அனுமதிக்கப்பட்ட தாராள உடலுறவு நடைமுறையால் எயிட்சின் பயணமும் பணியும் விரிவாகவும், விரைவாகவும் நடந்தேறிற்று.

உயிர்க்கொல்லி, அங்கே தன்னாலியன்ற அளவுக்கு சமதருமத்தைச் செயற்படுத்திக் காட்டிற்று. உயர்நிலை அலுவலர்கள், ஆசிரியர்கள், இராணுவ தலைவர்கள் மற்றும் தொழில் முனைவோர் என எல்லா உயர்

தரப்பினரோடும் இந்நோய் கைக்குலுக்கிக் கலந்தது. மேட்டுக்குடிகளிடம் அந்த அளவு நெருக்கமாகிவிட்ட பிறகு அடித்தள மக்களை அடிமையாக்கிக் கொள்ளவும், நடுத்தர மக்களோடு நட்புக் கொவ்ளவும் கேட்கவா வேண்டும்?

ஆப்பிரிக்காவில் கின்சாசா 'சியர்' நகர மக்களில் சில ஆயிரம் மக்களின் இரத்தத்தை எடுத்து மருத்துவக் குழு சோதனை செய்து பார்த்தது. ஏமாற்றத்திற்கு இடமளிக் காமல் எயிட்சு குறி ஆறுமுதல் ஏழு நபர்களுக்கு இருந்தது. மருத்துவக் குழு மலைத்து நின்றது.

ஜாம்பியாவின் லுசாகா நகரில் நடத்தப்பட்ட விரிவான சோதனையில், அங்கே இரத்த 'தானம்' செய்தவர்களில் பதினெட்டு விழுக்காட்டினரிடம் எயிட்சின் அடிச்சுவடு பதிந் திருந்தது காணப்பட்டது. இந்த நோயின் தாக்குதல் உலகக் கணக்கில் ஆப்பிரிக்காவில் மட்டுமே பத்து விழுக்காடிருக்கு மென மேலைநாட்டு மருத்துவ நிபுணர்கள் கருதுகிறார்கள்.

மத்திய ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய மருத்துவ மனை களில் ஒன்றான 'மமாயெமோ' மருத்துவமனை டவுன்டன் கின்சாசாவில் அமைந்துள்ளது. இங்குள்ள குழந்தைகள் பகுதியில் ஒன்றுமறியாத குழந்தைகள் உயிர்க்கொல்லி நோய்க்காக அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். தாய்வழியாக குழந்தைகளை பாதித்த எயிட்சின் கொடூரம் அங்கே மருத்துவர்களையே மருட்டியது குழந்தைகளையே இந்த அளவுக்குத் தாக்கியிருப்பதிலிருந்தே, பெரியவர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை மதிப் பிடலாம்.

1984-85-ஆம் ஆண்டில் கின்சாசாவில் மகப்பேறுக்காக அனுமதிக்கப்பட்ட தாய்மார்களில் எட்டு விழுக்காடு மகளிரிடம் உயிர்க் கொல்லி நோயின் அறிகுறிகள் காணப் பட்டதாம். (இ)ரவாண்டாவில் இந்நோய்க்குப் பலியானவர் களில் நூற்றுக்கு இருபத்திரண்டு பேர் குழந்தைகள் என்பது குலை நடுங்கச் செய்யும் செய்தி.இந்த விபரங்களை, 1983-ஆம் ஆண்டே உயிர்க்கொல்லி

நோய்க் கிருமியை முதன் முதல் அடையாளம் கண்டு உறுதி செய்த, பெல்ஜியத்தின் ஆன்டி வெர்ஃப் மருந்து நிறுவனத்தில் பணியாற்றிய நுண் கிருமியாளர் **(Microbiologist)** டாக்டர். பீட்டர் பியட் வெளியிட்டுள்ளார். இது மிகைப் படுத்தப்பட்ட தகவலல்ல என்பதும் குறிப்பாகக் கவனிக்கத் தக்கது.

இங்கும் 1981-ஆம் ஆண்டு வரை எந்த ஆணிடத்திலும் உயிர்க்கொல்லி நோயின் அறிகுறி கண்டறியப் படவில்லை. 1981-ஆம் ஆண்டில் நைரோபி வேசியர்களிடம் நான்கே சதமாக (%) இருந்த உயிர்க்கொல்லி நோய், நான்கே ஆண்டில் அதாவது 1985-ல் ஐம்பத்தொன்பது விழுக்காட்டளவிற்கு உயர்ந்த தென்றால், இந்த நோழன் ஆள் பிடிக்கும் ஆற்றலை எண்ணி வியப்பதா? அதற்கு ஆளாகும் மாந்தரின் அறியாமையை எண்ணிக் கலங்குவதா? மேலும் ஆண்களிடம் காணப்படாதிருந்த இந்த நோய் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நூற்றுக்குப் பதினெட்டு பேரை பாதித்திருப்பது கண்டறியப்பட்டது.

சகாராவை ஒட்டியுள்ள பதினெட்டு நாடுகளில் உயிர்க்கொல்லி நோய் விதை போட்டு வேர் பிடித்திருக்கின்றது. உகாண்டா, தான்சானியா, ஜாம்பியா, காங்கோ, மத்திய ஆப்பிரிக்க குடியரசு, ஐவரிகோஸ்ட் மற்றும் கென்யா ஆகியவற்றில் இந்நோயின் தாக்குதல் அதிகம். ஜீயர், (இ)ரவாண்டா மற்றும் புரூண்டி ஆகிய நாடுகளையும் இந்நோய் ஒதுக்கிவிடவில்லை.

ஆப்பிரிக்காவைப் போலவே உயிர்க்கொல்லி அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பரவுமென்று வாஷிங்டன் வால்டர் ரீட் இராணுவ மையத்தில் பணியாற்றிய டாக்டர் ராபர்ட் ரெட்ஃபீல்ட் ஐந்தாண்டுகளுக்கு முன்னரே கணித்தது பொய்யாகிவிடவில்லை.

1981- ஆம் ஆண்டில் அமெரிக்காவின் கீழ்க் கரையில், முன் எப்போதும் நிகழ்ந்திராத அளவில் இளைஞர்கள் நிமோனியாவால் உயிரிழந்தார்கள். நிமோனியா நோய்க்

கிருமியான நிமோக்காக்களுக்குப் பதிலாக 'நிமோசிஸ்டி கார்னிப்' கிருமிகள் இளைஞர்களின் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்தது கண்டறியப்பட்டது. புற்று நோயாளிக்கு ஏற்படும் பாதிப்பு, நிமோனியா நோயாளிக்கு நிகழ்ந்தது மருத்துவர்களுக்கு வியப்பை அளித்தது.

இத்தகைய விசித்திர விளைவுகளைக் கண்டு மருத்துவ விஞ்ஞானம் மருண்டு சோர்ந்து விடவில்லை. காரணத்தைக் கண்டறிவதில் ஆர்வம் காட்டியது. ஆய்வின் பலனாக உயிரிழந்த இளைஞர்கள் போதையின் அடிமைகள் என்பதோடு, ஆணோடு ஆண் உடலுறவு கொண்டவர்கள் என்ற உண்மை வெளிப்பட்டது. உயிர்க் கொல்லி நோயின் ஊற்றுக்கண் இவை என்பதால், இளைஞர்கள் உயிரிழக்கக் காரணம் எயிட்சுதான் என்று உறுதி செய்யப்பட்டது.

ஆப்பிரிக்காவா; அமெரிக்காவா எங்கே உயிர்க்கொல்லி நோய் அதிகம் என்ற போட்டியில் அமெரிக்கா வெற்றி இலக்கை எட்டிக் கொண்டிருக்கிறது. எதிலும் முதன்மை பெற விழையும் அமெரிக்கா, எயிட்சு நோயாளிகள் எண்ணிக்கையிலும் முதன்மை பெற்றால் வியப்பதற்கில்லை எயிட்சை பொறுத்தவரை இந்தியா வளரும் நாடாகவும், தமிழகம் முன்னேறும் மாநிலமாகவும் இருப்பது நெருடலான உண்மை!

சமதருமச் சந்தையில் குற்றவாளிகளும்; நிரபராதிகளும்; குழந்தைகளும் பெற்றோரும்; கலைஞர்களும்; விளையாட்டு வீரர்களும் உயிர்க் கொல்லி நோயை இன்னதென்று அறியாமலேயே வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கும் மேலானவர்களாகக் கருதப்படுபவர்கள் தங்கள் கையிருப்புக் கணக்கைக் காட்டாமல் வைத்திருந்தாலும் இருக்கலாம். சமூகத்திடம் உண்மையை மறைக்கும் உரிமை பெற்ற வர்க்கமொன்று எல்லா நாட்டிலுமே உண்டல்லவா?

# என்ன செய்வது-எப்படி தடுப்பது

மாந்தன் பழக்கத்தின் அடிமை. ஒருவரது பழக்க வழக்கங்களே அவர்களுடைய ஏற்றத் தாழ்வுகளுக்கான அடித்தளமாக அமைகிறது. நற்பழக்கத்தைக் கைக்கொண்டவர்கள் சான்றோர்களாகவும், கெட்ட பழக்கத்திற்கு ஆளானவர்கள், சமுதாயத்தால் வெறுத்தொதுக்கப்படுபவர்களாகவும் திகழ்கின்றார்.

ஆற்றலும் அனுபவமும் பழக்கத்தால் வருபவை; வளர்பவை. ஔவை மூதாட்டி கூட

"சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம், நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்."

என்றார்.

நட்பியல்பு, இரக்கத்தன்மை, ஈகைக்குணம் இவை மட்டுமே பிறப்பியல்புகள், மற்றவை பழக்கத்தால் வருபவை என்பதே வெண்பாவிற்குரிய விளக்கம்.

தென்னாப்பிரிக்காவில் உயிர்க்கொல்லி நோய் தோன்றிப் பரவ அடிப்படையே பழக்க, வழக்கங்கள்தான், அங்கே மனித நாகரிகமே காலங்கடந்து கடைசியாகத்தான் போய்ச் சேர்ந்தது. எனவேதான் எயிட்சு நோய் அவசரமாகச் சென்று அங்கு குடியேறியது. ஒருவனுக்கு ஒருத்தி எனும் தமிழ்நெறி, அங்கே தண்டல்காரனாக இல்லாமல், தத்துவப்பிள்ளையாகவே விளங்கியது. உடலுறவிலோ தாராளம், தயாளம்!

ஆப்பிரிக்காவில் ஆலாகப் படர்ந்து, அருகாக வேர்விட்டிருந்தது வறுமை! பசி வந்திட பத்தும் பறந்துபோம்

என்பது பழமொழி. பத்தோ அல்லது பற்றோ எதுவாக இருந்தாலும், ஒழுக்கக் கட்டுப்பாடென்பது எண்ணிக்கையிலோ, உள்ளுணர்விலோ அடங்காமற் போகாதல்லவா? வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு வாழும் மனிதருக்கெல்லாம், என்பது நோக்கமாக மட்டிலிருந்தால் போதுமா? பசி, கொள்கையை உண்டு ஆறிவிடாதே! வாழ்ந்தாக வேண்டும், வயிற்றுப் பசியைப் போக்கியாக வேண்டும் வழி?

வேலை கிடைக்காமல் வருமானத்திற்கு வழியின்றி வறுமையோடு போராடிய இளம் பெண்களுக்கு, முதலீடு தேவையற்ற வணிகம்தான் ஆறுதல் கூறி எதிர்வந்து நின்றது. எனவேதான் ஆப்பிரிக்காவில் விபச்சாரம் விளை பொருளைப் போல் வீதிக்கே வந்தது. உயிர்க்கொல்லி நோயின் வித்து, விபச்சார சந்தையில் விற்றுத் தீர்ந்தது.

எயிட்சு நோய்ப் பரவுவதைப் பற்றி ஆய்ந்த பன்னிரெண்டு விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட குழு அறிக்கையொன்றை தயாரித்தளித்தது. பட்டிமன்றப் பாணியில் கூறுவதானால் கிழக்கு ஆப்பிரிக்காவில் உயிர்க் கொல்லி நோய் பரவ பெரிதும் காரணமாக இருந்தவர்கள் வேசிகளே!

கென்யாவில் குறைந்த வருவாயுள்ள ஒரு விலைமகள், ஆண்டொன்றுக்கு 963 ஆண்களுடனும், நடுத்தர வருவாய் உள்ள ஒரு பொதுமகள் ஆண்டொன்றுக்கு 124 ஆண்களோடும் தொடர்பு கொள்வதாக ஆய்வறிக்கை கூறியது. நடுத்தர வருவாய் உடற்றொழிலாளிகளோடு உறவு கொள்பவர்களில் பெரும்பாலோர் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் வணிகர்கள். இவர்கள் மூலமாகத்தான் உயிர்க் கொல்லி நோய் ஐரோப்பாவுக்கும், அமெரிக்காவுக்கும் போய்ச் சேர்ந்தது.

ஆப்பிக்காவில் சில நாடுகள் உயிர்க்கொல்லி நோய் வேர்விட்டிருப்பதை ஒப்புக்கொள்ளவில்லை. உகாண்டா மக்களோ, ''இங்கே எயிட்சு இல்லை. உடலுறவென்பது கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்ட உரிமை. எங்களுக்கெதுவும் நேராது'' என்று கூறிவந்ததாகச் சில ஆண்டுகளுக்கு முன்னர் டாக்டர் அண்டனி இல்வேகபா மனம் வருந்திக் கூறியுள்ளார். இப்படிப்பட்ட தவறான நம்பிக்கையால் அங்கே மக்கள் எயிட்சு நோயைச் சுமந்து கொண்டும், பரப்பிக் கொண்டுமிருக்கின்றார்கள்.

''செய்தக்க அல்ல செயக்கெடும், செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.''

என்ற குறள் உகாண்டா அரசுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் மிகப்பொருத்தமான அறிவுரையாகும்.

இந்நோயைப் பற்றித் தாமதமின்றி மக்களுக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தாத சில நாடுகளின் அலட்சியம் அல்லது! அரசியல் காரணங்களால், உலகம் விபத்தை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு ஆணும் அல்லது பெண்ணும் தனது உடலுறவுக்காரர் யார் என்பதை அரசுக்கு அறிவிக்க வேண்டுமெனும் சட்டபூர்வ நடைமுறை உலகிலேயே சுவீடன் நாட்டில்தான் முதன் முதலாக ஏற்படுத்தப் பட்டது. இந்த நடைமுறை மூலம் தொற்று நோய் பரவுவதை அங்கே பெருமளவில் கட்டுப்படுத்தினார்கள். 1989-ம் ஆண்டில் சுவீடன் நாட்டு தொற்று நோய்த்துறை ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் நோயாளிகளோடு தொடர்பு கொண்ட 1456 நபர்களின் சோதனையில் பதினைந்து விழுக்காடு நபர்களுக்கு எச். ஐ. வி பாதித்திருப்பது தெரிய வந்ததாம். இந்நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு யு. கே அரசும் உறவுப் பங்காளி விபரத்தைத் தெரிவிக்கக் கோரியது.

உயிர்க்கொல்லி நோயாளிகள் தங்கள் உறவுப் பங்காளிகள், போதை ஊசிக் கூட்டாளிகள் யார் என்பதை அறிவிக்கும்படியும், இரகசிய நோயாளிகளுக்கென இயங்கும் இருநூறுக்கு மேற்பட்ட மருத்துவ மனைகளில் ஏதேனும் ஒன்றில் தங்களை பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளுமாறும், மருத்துவ ஆலோசனை பெறுமாறும் பிரிட்டானிய அரசு கேட்டுக்கொண்டது. இந்த மருத்துவ மனைகளில் நோயாளிகளும், நோய் விபரமும் இரகசியமாக பாதுகாக்கப்படுவதால் நோயாளிகள் வெட்கப்பட்டு மருத்துவ மனைக்குச் செல்லத் தயங்குவதைத் தவிர்க்கவே இந்த ஏற்பாடு. இதன்மூலம் இந்நோய்ப் பரவும் சங்கிலித்தொடர் தகர்க்கப்பட்டது.

உறவுப் பங்காளிகள் யார் என்பதை அறிவிக்கும் நடைமுறை மூலம், எயிட்சு சங்கிலித் தொடர் துண்டிக்கப் படலாமேயொழிய அதுவே தீர்வென எண்ணிவிட

வேண்டாமென எச்சரித்தார் ஐரோப்பாவின் எயிட்சு மருத்துவ முன்னோடி டாக்டர் மார்க்கரட்டா பொட்டிஜர் ஒப்புக் கொள்ள வேண்டிய உண்மைதானே!

உயிர்க்கொல்லி நோயாளிகளை சில தனியார் மருத்துவ மனைகளில், மருத்துவத்திற்கு அனுமதிப்பதில்லை என்ற புகார் ஒருபுறமிருக்கத்தான் செய்கிறது. இந்நிலை இங்கு மட்டுமல்ல, நாடெங்கிலுமே உள்ளதுதான். தொட்டால் ஒட்டிக்கொள்ளும் நோய் இதுவல்ல என்பது மருத்துவர்களுக்குத் தெரிந்திருந்தாலும்; அவர்கள் அஞ்சவில்லை என்றாலும், பிற நோயாளிக்கு இந்நோய் அச்சத்தையும் அருவருப்பையும் ஏற்படுத்துவதென்னவோ உண்மைதான். தங்கள் தொழிலும், வருவாயும் பாதிக்கப்படுவதை எந்த மருத்துவர்தான் பொருட்படுத்தாமலிருக்க முடியும்?

இதற்கு மாற்றுதான் என்ன? பிரிட்டனில் உள்ளது போல் மறைநோய் மருத்துவமனைகளை ஆங்காங்கே ஏற்படுத்துவதுதான். தனி மருத்துவமனைகளை அமைத்து, நோயைப்பற்றிய சரியான தகவல்களை எடுத்துரைத்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் அமெரிக்காவில் வாழும் இந்தியரான ஜோஸ் அந்தோனி முன்வந்திருப்பது ஆறுதலான செய்தி. நல்ல வழிகாட்டுதல். இவர் அமெரிக்காவில் நடத்தி வரும் 'கேர் அண்ட் ஷேர்' என்னும் நிறுவனத்தின் கிளையைச் சென்னையில் தொடங்கியுள்ளதும் நல்ல துவக்கமே!

உயிர்க்கொல்லி நோயைத் தீர்க்கக்கூடிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக, கண்டுபிடிக்கப்படுவதாக, பறக்கும் தட்டுச் செய்தியைப் போல் பரபரப்பாக அவ்வப்போது தகவல் வெளிவருகிறது. ஆனால் இந்நோய்க்கெதிரான சக்தி வாய்ந்த மருந்தைக் கண்டு பிடிப்பதற்கு இன்னும் பத்துமுதல் பதினைந்தாண்டுகள் கூட ஆகலாம் என்கின்றார். அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஹார்வார்டுடேன் ஃபார்பெர் புற்றுநோய் ஆய்வுக்கழகத்தின் டாக்டர் வில்லியம் ஹாசெல்டின் **(William Haseltine)**.

1984-ஆம் ஆண்டில் உயிர்க்கொல்லி நோயின் மூலக் கிருமி அடையாளம் காணப்பட்ட நாள் முதலே ஆராய்ச்சி யாளர்களும், மருந்து நிறுவனங்களும் இதற்குரிய மருந்தைக் கண்டுபிடித்துவிட வேண்டுமென்ற தீவிர முயற்சியை மேற் கொண்டிருந்தாலும், முயற்சியின் திருவினை இன்னும் தென்படாமலேயேதான் உள்ளது. எனினும் 'அசிடோதை மிடின்' என்னும் மருந்து தற்போதைய இடைக்கால வெற்றி யின் சின்னமாக விளங்குகிறது.

கொடிய உயிர்க் கொல்லி நோய்க்கெதிரான போர் பல முனைகளில் தொடங்கப் பட்டுவிட்டது. கண்டு கொள் ளாமல் கதைகளை வெளியிட்டுக் கொண்டிருந்த ஏடுகள், எயிட்சைப் பற்றி எழுதத் தொடங்கிவிட்டன. மக்கள் தொடர்புகளின் மகத்தான சக்தியாக விளங்கும் வானொலி யும், தொலைக்காட்சியும், எயிட்சுக்கு எதிரான இயக்கத் தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. விண்ணூர்தி விஞ்ஞானம் போல், பெரும்பாலான மக்களுக்கு இருட்டுத் திரையாக இருந்த இந்நோயைப் பற்றிய அறிவில், வெளிச்சக் கீற்றுகள் விழுந்துள்ளன. இதற்குப் பொறுப் பான மக்கள் தொடர்பு நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் போற்றுதலுக்கும் பாராட்டுக்களுக்குமுரியவர்கள்.

விழிப்புணர்வு பெற்று திருந்தியவர்கள், எச்சரிக்கை யோடு வாழ்க்கையைத் தொடர்பவர்கள், எயிட்சின் எதிரி கள். சமுதாயத்தின் நண்பர்கள் — ஒழுக்க நெறிகளின் உற்றார் — உறவினர்கள். மன உறுதியும் — கட்டுப்பாட் டுணர்வும் இளைஞர்களுக்கு ஏற்பட அனைத்தும் செய் வோம். எல்லா சக்திகளையும் திரட்டி அச்சுறுத்தும் எயிட்சை அடிச்சுவடின்றி அடித் தொழிப்போம். மன வுறுதியை விஞ்சிய மருந்தில்லை — கட்டுப்பாட்டை மீறிய காப்பில்லை.

தூயவராவோம், தொண்டராவோம்.

★